# தத்வபோதம்



ப்ரக்ஞன்

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தத்வபோதம் |
| தெளிவுரை | : | ப்ரக்ஞன் |
| வெளியீடு | : | பராபரம் |
| வகை | : | உபதேசம் |
| முதற்பதிப்பு | : | 2018 |
| பக்கங்கள் | : | 235 |
| விலை | : | அக விழிப்பு |
| கணினி அச்சு | : | ஓம் கிராபிக்ஸ் |

# தத்வபோதம்

(ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியது)

தெளிவுரை

**ப்ரக்ஞன்**

# तत्वबोध

மூலம்:– சமஸ்க்ருதம்

# தத்வபோதம்

(எளிய தமிழ் விளக்கம்)

# அறிமுகம்

தத்வபோதம் என்பது, சத்தியத்தைப் பற்றிய அறிவு அல்லது புரிதல் அல்லது சுய அறிவு என்று கூறலாம். நம் ஒவ்வொருடைய வாழ்க்கையின் இலக்கு என்ன? என்ற கேள்வியுடன் வேதாந்தம் தொடங்குகிறது.

மனிதனின் அடிப்படை இலக்குகள் உயிர் வாழ்வது, உணவு, தங்குமிடம் மற்றும் பாதுகாப்பு. அதன்பிறகு, நம் ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் வெவ்வேறு இலக்குகள் உள்ளன.

பொருளாதாரம், சமூகம், மதம், சுகாதாரம், கல்வி, திருமணம், சந்ததி முதலியன. இந்த இலக்குகளின் நோக்கம் செல்வம், ஆரோக்கியம், செழிப்பு, அதிகாரம் மற்றும் மகிழ்ச்சியைப் பெறுவது மட்டுமே ஆகும்.

ஆக, எல்லா ஆண்களுக்கும், பெண்களுக்கும் மகிழ்ச்சியே இறுதி இலக்கு. எனவே, அதுவே அவர்கள் வாழ்க்கையின் நோக்கமாகும்.

விலங்குகளுக்கும் வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் உண்டு. அவர்களின் குறிக்கோள் உயிர்வாழ்வது, உணவு,

தூக்கம், பாலினம் மற்றும் சந்ததி. இவையும் மனித இலக்குகளே. அப்படியானால், மனிதர்கள் விலங்குகளிட மிருந்து எவ்வாறு வேறு படுகிறார்கள்? வித்தியாசம் நமது புத்திசாலித்தனம் அல்லது புத்தி. நுண்ணறிவு என்பது சிந்தனை மற்றும் பகுத்தறிவு மற்றும் அறிவைப் பெறுவதற்கும் பயன்படுத்துவதற்கும் உள்ள திறன் என வரையறுக்கப் படுகிறது.

அறிவைப் பகுத்தறிவதற்கும், பெறுவதற்கும், பயன் படுத்துவதற்கும் திறன் இல்லாத மனிதன் ஒரு மிருகத்தைப் போலவே இருப்பவன் எனப்படுகின்றது.

அதை சாஸ்திரம் கூறும்போது,

आहार निद्रा भय मैथुनं च । सामन्यमेतद् पशुभिर्नराणाम् ।
बुद्धिर्हि तेषामधिको विशेशतः । बुद्ध्या हीनाः पशुभिः समानाः ॥

āhāra nidrā bhaya maithunaṁ ca | sāmanyamētad paśubhirnarāṇām
।
buddhirhi tēṣāmadhikō viśēśataḥ | buddhyā hīnāḥ paśubhiḥ samānāḥ
‖

ஆஹார நித்ரா பய மைதுனம் ச | சாமான்யமேதத் பசூபிர் நரானாம் |
புத்திர்ஹி தேஷாமதிகோ விஷேசதஹ | புத்யா ஹீனாஹ பசுபிஹி
சமாநாஹ ‖

ஆகவே, உணவு, தூக்கம், பயம் மற்றும் உறவுகள் என்பது, விலங்குகளுக்கும், மனிதர்களுக்கும் பொதுவானது. மனிதர்களின் புத்திசாலித்தனம் குறிப்பாக உயர்ந்தது.

நாம் அனைவரும் செல்வம், ஆரோக்கியம், செழிப்பு மற்றும் அதிகாரம் போன்றவகளினால் மகிழ்ச்சி இருப்பதாகக் கருதுகின்றோம். ஆனால், நமது வேதங்கள் மகிழ்ச்சி அல்லது ஆனந்தத்தை நமது **உள்ளார்ந்த இயல்பு** என வரையறுத்துள்ளன.

எனவே, வெளிப் பொருள்கள் மற்றும் மனோ உணர்ச்சிகள் போன்றவற்றிலிருந்து மனிதன் தான் அடைய வேண்டிய இலட்சியத்தை தேடக்கூடாது. ஆக, மனிதன் அடைய வேண்டிய இலக்கிற்கான பாதைகள் நான்காக வரையறைக்கப்பட்டுள்ளன.

அவைகள், சமஸ்கிருதத்தில் **தர்ம:, அர்த்த:, காம:, மோட்ச:** என்று அழைக்கின்றது.

இந்த நான்கு விஷயங்களை **“புருஷார்த்தம்”** என்று சாஸ்திரம் அழைக்கின்றது.

முதலில் வேதாந்ததிற்கு வருகின்றவர்களுக்கு தெரிந்து கொள்ள வேண்டிய முதல் வார்த்தை **புருஷார்த்தம்** (புருஷன் + அர்த்தம்) என்பது ஆகும்.

அதாவது **‘புருஷன்’** என்றால் மனிதன் என்றும், **‘அர்த்தம்’** என்றால் அடைய வேண்டிய செல்வம் அல்லது இலட்சியம் என்றும் பொருள் கொண்டு, இதனை **“மனிதனின் இலட்சியம்”** என்பதாகப் புரிந்துக் கொள்ள வேண்டும்.

இதனை தமிழில் **அறம், பொருள், இன்பம், வீடு** என்றும், நான்கு இலட்சியங்களாக வகைப்படுத்திக் கொள்ளலாம்.

அதாவது, தர்மம் (ஒழுக்கம்), அர்த்த (செல்வம்), காமம் (ஆசை) மற்றும் மோட்சம் (முக்தி).

நம் அனைவரின் பொதுவான குறிக்கோள் தர்மம் அல்லது நேர்மையான வாழ்க்கை.

நாம் மற்ற மூன்று இலக்குகளுக்குச் செல்லும்போதுகூட, தர்மத்தைக் கைவிட முடியாது.

அதாவது, சாஸ்திரம் என்ன கூறுகின்றது என்றால் படைக்கப்பட்ட உயிரினங்களில் மனிதனால் மட்டுமே ஒரு இலட்சியத்தை உருவாக்கிக் கொண்டு அந்த இலக்கை நோக்கி சாதனத்தை அடைந்து சாத்தியத்தை பெற முடியும் என்கின்றது.

இலட்சியம் இல்லாத மனிதனை இறந்த மனிதனுடன் ஒப்பிடலாம். காரணம், இறந்தவன் எப்படி எதற்கும்

பயனுடையவனாக மாட்டானோ அதுபோல, இலட்சியம் இல்லாத மனிதன் எதற்கும் பயனற்றவனாக ஆகிறான்.

மனிதன் என்றால் எந்த ஒரு காரியத்தைச் செய்தாலும் அதற்கு ஒரு இலட்சியம் இருக்க வேண்டும். சாதாரணமாக ஒரு உடற்பயிற்சி செய்தாலும் அங்கு ஆரோக்கியம் என்ற ஒரு இலக்கு (இலட்சியம்) இருக்கும்.

இதில் மனிதனுக்கு மட்டுமே இலட்சியத்தை தேர்ந்தெடுக்கின்ற வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. மிருகங்களுக்கு இது போன்ற இலட்சியமோ, வாய்ப்புகளோ கிடையவே கிடையாது.

எங்கு இலட்சியத்தை தேர்ந்தெடுக்கின்ற வாய்ப்பு உள்ளதோ, அங்கு புருஷார்த்தம் தானாகவே வந்து விடும். இதன் மூலம், தர்ம, அதர்ம ஞானம் மனிதனுக்கு இயற்கையாகவே வந்துவிடும்.

அது எப்படியென்றால், எது எனக்கு நல்லதோ, அதுவே மற்றவர்களுக்கும் நல்லது பயக்கும் என்ற அறிவு இயல்பாகவே நம் ஒவ்வொருவரிடத்திலும் காணப்படுகின்ற இயல்பு ஆகும். அதனால்தான் மனிதன் மட்டுமே நல்லது எது?, கெட்டது எது? என்று நன்கு அறிந்தவனாக இருக்கிறான்.

நம்மையே ஒரு அளவுகோளாக வைத்து நன்மை, தீமைகளை அறிவதுப் போல, நம்முடைய ஆறாவது அறிவின்

வாயிலாக உண்மை எது?, பொய் எது? என்று அறிந்து கொள்ளவும் முடியும்.

மனிதனுக்கு மட்டுமே தன்னை அறியும் அறிவு இருக்கின்றது. மற்ற ஜீவராசிகளுக்கு இந்த அறிவு கிடையாது. ஒரு நாயோ, பூனையோ தன்னை நாய் என்றோ, பூனை என்றோ ஒரு நாளும் அறிந்து கொள்ளாது. ஆனால், மனிதன் மட்டுமே தன்னை **"மனிதன்"** என்று அறிகிறான்.

ஒரு யானை தன்னுடைய முழு பலத்தை அறியாததினால்தான் சாதாரண ஒரு சங்கிலியால் அதனை கட்ட முடிகின்றது. ஆனால், மனிதனுக்கு அப்படியில்லை, அவன் தன் முழு பலத்தை அறிந்ததினால் அவன் தன்னை சரியாகவும், முறையாகவும் மாற்றி அமைத்துக் கொள்ள முடியும்.

அப்படி தன்னை மனிதன் என்று அறிந்தவன் மற்ற மனிதர்களிடத்திலிருந்து வேறுபட்ட மாமனிதனாக உருவாக அவனது புருஷார்த்தம் (இலட்சியம்) மிக முக்கிய பங்கு வகுக்கின்றது என்றால் அது மிகையாகாது.

இலட்சியத்தை அடைவதற்கான ஆசை நியாயமானதாக இருந்தால், அத்தகைய மனிதனுக்கு, விடுதலைக்கான வாசல் திறக்கும். இந்த விடுதலையை சைவ மற்றும் வைணவ

சம்பிராதயங்கள் கொண்ட சமயங்கள் **மோக்ஷம்** அல்லது **முக்தி** என்கின்றது.

புத்தர் இதை **நிர்வாணம்** என்று அழைத்தார்.

வேதாந்தம் இதை, **பிரம்மானந்தம்** என்று அழைக்கிறது.

இது, ஒருவன் தன்னைத் தான் அறியும் **சுய உணர்தல்** மூலம் அடையப்படுகின்றது.

தத்வபோதம் உரையை ஐந்து பகுதிகளாகப் பிரிக்கலாம்.

அவைகள்:

1) அதிகாரி – சுய விசாரணைக்கான தகுதி

2) ஆத்ம விசாரணை – தனிநபர் அல்லது தன்னை அறிதல்.

3) ஜீவ ஜகத் ஈஸ்வர விசாரம் – உருவாக்கம் அல்லது மேக்ரோகோஸ்ம் முழுமையின் பகுப்பாய்வு

4) जीवेश्वरयोः आक्यम् – தனிமனிதன் மற்றும் மொத்த படைப்பின் இன்றியமையாத ஒருமைப்பாடு

5) आक्य ज्ञान फलम् – அத்தியாவசிய அறிவின் நன்மை

तत्त्वबोध (தத்வபோதம்) என்பது சத்தியத்தைப் பற்றிய அறிவு அல்லது புரிதல் அல்லது சுய அறிவு.

வாழ்க்கையின் இலக்கு என்ன என்ற கேள்வியுடன் வேதாந்தம் தொடங்குகிறது.

மனிதனின் அடிப்படை இலக்குகள் உயிர்வாழ்வது, உணவு, தங்குமிடம் மற்றும் பாதுகாப்பு. அதன்பிறகு நம் ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் வெவ்வேறு இலக்குகள் உள்ளன.

பொருளாதாரம், சமூகம், மதம், சுகாதாரம், கல்வி, திருமணம், சந்ததி முதலியன.

இந்த இலக்குகளின் நோக்கம் செல்வம், ஆரோக்கியம், செழிப்பு, அதிகாரம் மற்றும் மகிழ்ச்சியைப் பெறுவது. எல்லா ஆண்களுக்கும் பெண்களுக்கும் மகிழ்ச்சியே இறுதி இலக்கு. எனவே, அதுவே வாழ்க்கையின் நோக்கமாகும்.

விலங்குகளுக்கும் வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் உண்டு. அவர்களின் குறிக்கோள் உயிர்வாழ்வது, உணவு, தூக்கம், பாலினம் மற்றும் சந்ததி. இவையும் மனித இலக்குகளே.

அப்படியானால், மனிதர்கள் விலங்குகளிடமிருந்து எவ்வாறு வேறுபடுகிறார்கள்?

வித்தியாசம் நமது புத்திசாலித்தனம் அல்லது புத்தி.

நுண்ணறிவு என்பது சிந்தனை மற்றும் பகுத்தறிவு மற்றும் அறிவைப் பெறுவதற்கும் பயன்படுத்துவதற்கும் உள்ள திறன் என வரையறுக்கப்படுகிறது.

அறிவைப் பகுத்தறிவதற்கும், பெறுவதற்கும், பயன் படுத்துவதற்கும் திறன் இல்லாத மனிதன் ஒரு மிருகத்தைப் போலவே இருக்கின்றான்.

ஒருவர் தனது ஆன்மீகத் தேடலில் முன்னேறும்போது, தான் பெற்ற பொருள்–பெறப்பட்ட மகிழ்ச்சி என எல்லாமும் துரதிர்ஷ்டவசமாக மறைந்து விட்டதாகவும், அதைச் சார்ந்து இருக்க முடியாது என்பதையும் உணர்கிறார்.

ஆனால், ஆன்மாவின் உண்மை நிலையாகிய பிரம்மானந்த நிலை என்பது, என்றென்றும் நம்மிடம் இருக்கும் நிலைதான். அதற்கான சாதனைக்கு அநாவசியமாக வெளியில் இருந்து எதுவும் தேவையில்லை. அது ஏற்கனவே தன்னுடன் உள்ளமைக்கப்பட்டுள்ளது.

அதை உணரவேண்டுமானால், நம் அஹங்கரத்தையும், அறியாமையையும் மட்டுமே இழக்க வேண்டும்.

ஒரு மனிதன் ஒரு 100 ரூபாய் நோட்டை தான் படிக்கும் ஒரு புத்தகத்தில் வைத்து விட்டு, பின்னர் அதை முழுவதுமாக

மறந்துவிட்டான். வீணாக எல்லா இடங்களிலும் அதைத் தேடினான். ஒரு நாள் அவன் மீண்டும் அந்தப் புத்தகத்தைப் படிக்க, திறந்துப் பார்த்தபோது, அதில் அந்த 100 ரூபாய் நோட்டு இருப்பதைக் கண்டுபிடித்தார்.

உடனே, அவன் உற்சாகமாக, *"அய்! அது எனக்கு கிடைத்துவிட்டது"* என்று ஒரே ஆனந்தம்தான், கொண்டாட்டம் தான்.

இதுதான் நம் அனைவரின் நிலையும் ஆகும்.

நம்மிடம் என்றென்றும் உள்ள நிரந்தர மகிழ்ச்சியும், அமைதியும் எப்போதும் உள்ளது. ஆனால், நமது அறியாமையால் நமக்கு அது தெரியாமல் உள்ளது.

அதை, இந்த **தத்வபோதம்** என்ற நூல் நமக்கு காட்டிக் கொடுக்கும்.

இது **ப்ராப்தஸ்ய ப்ராப்தி** என்று அழைக்கப்படுகிறது, அதாவது நம்மிடம் ஏற்கனவே உள்ளதை மீண்டும் கண்டுபிடிப்பது. அதாவது, *"அய்! எனக்கு கிடைத்துவிட்டது"*. என்பதுப்போல ஆகும்.

தத்வபோதம் என்பது, பகவான் **ஸ்ரீஆதிசங்கரர்** அவர்களால் எழுதப்பட்டது.

இது வேதாந்தத்தின் அடிப்படைப் புத்தகம் எனும் (प्रकरण ग्रन्थ, prakarana grantha) மற்றும் **உபநிடதங்கள், பிரம்ம சூத்திரங்கள்** மற்றும் **பகவத் கீதை** போன்ற உயர் நூல்களைப் புரிந்துக் கொள்ள உதவுகிறது.

இந்த மூன்று நூல்களும் ஒன்றாக **"பிரஸ்தான த்ரயி"** (प्रस्थान त्रयी' prasthāna trayī) என்று அழைக்கப் படுகின்றன.

தத்வபோதம் உரைநடை வடிவில் எழுதப் பட்டுள்ளது.

தத்வபோதத்தின் முதல் பகுதியாக **"தியான ஸ்லோகம்"** மூலமாக தொடங்குகின்றது..

வாசுதேவேந்த்ர யோகீந்த்ரம் நத்வா ஞானப்ரதம் குரும் |
முமுக்ஷுணாம் ஹிதார்த்தாய தத்வபோதோபிதீயதே ||

எந்த ஒரு நற்காரியங்களை நாம் தொடங்குவதற்கு முன்னால் பிரார்த்தனையுடன் ஆரம்பிப்பது நம்முடைய மரபு.

அதுப்போல இந்த **"தத்வ போதம்"** என்ற நூலை படிக்க ஆரம்பிக்கும் முன்பு பிரார்த்தனையுடன் ஆரம்பிக்கின்றோம்.

இந்த பிரார்த்தனை ஸ்லோகத்தில் ஸ்ரீ கிருஷ்ண னையும், தன்னுடைய குருவையும் வணங்கி இந்த நூலானது ஸ்ரீ ஆதிசங்கரரால் எழுதப்பட்டுள்ளது.

சங்கரர் தன்னுடைய குருவான கோவிந்த பகவத் பாதரையும், இஷ்ட தெய்வமான ஸ்ரீ கிருஷ்ண பகவானையும் வணங்கி தொடங்குகின்றார்.

இந்த உலகமும் முழுவதும் பிரகாஷித்துக் கொண்டி ருக்கின்ற அனைத்திற்கும் தலைவனாகவும், யோகிகளுக்கும், மாயைக்கும் தலைவனாகவும் இருக்கின்ற கிருஷ்ணனை வணங்கி, எனக்கு அறிவைக் (ஞானத்தை) கொடுத்த குருநாதரையும் வணங்கி **"தத்வபோதம்"** என்ற உண்மை யான மெய்ப்பொருளைப் பற்றிய அறிவைக் கொடுக்கின்ற இந்த நூலை மோட்சத்தை அடைய விரும்புகின்ற முமுக்ஷுசுக் களுக்கு நன்மை உண்டாகும் பொருட்டு என்னால் எழுதப்பட இருக்கின்றது.

ஆக, பிரார்த்தனையின் நோக்கம், எந்த தடைகளும் வராமல் இருக்க இந்த நூலாசிரியரான ஸ்ரீ சங்கரர் தன்னுடைய **"தத்வபோதம்"** நூலை நல்ல முறையில் எழுதி முடிக்க பிரார்த்தித்துக் கொண்டது போல, நாமும், இந்த

**“தத்வபோதம்”** என்ற நூலை எந்த தடைகளும் வராமல் படித்து முடிக்க பிரார்த்தனை செய்து கொள்வோம்.

எனவே, இந்த நூலை ஸ்ரீ சங்கரர் எழுதி முடித்தால் மட்டும் போதாது, அது அனைவராலும் படித்து பயன் பெற ஏதுவாக இருக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்தார்.

அந்த பிரார்த்தனையின் பயனாக அவரது காலம் முதல் கொண்டு, இன்று வரை நம் அனைவராலும் இந்த நூலைப் படித்துப் பயன் பெற முடிகின்றது. இதுவே, பிரார்த்தனையின் சிறப்பு.

அதுப்போல, நாம் மட்டும் இந்த நூலைப் படித்தால் போதாது, நம் போன்றே மற்ற அனைவரும் படித்துப் பயன் அடைய வேண்டும் என்று, நாமும் பிரார்த்தனை செய்துக் கொள்வோம். பொதுவாக, நாம் எந்த ஒரு காரியத்தை தொடங்கும் முன்பு மூன்று விதமான காரணங்கள் தேவைப்படுகின்றது.

அதில் முதலாவது **பிரயத்தனம்,** இரண்டாவது **காலம்**, மூன்றாவது **ஈஸ்வரனின் அனுக்கிரஹம்.**

இதில் பிரயத்தனம் என்பது, நம்முடைய முயற்சி என்பதாகக் கொள்ளலாம். நாம் மேற்கொள்ளும் முயற்சி சரியான முயற்சியாக இருக்க வேண்டும்.

பிறகு, அந்த முயற்சியை கைவிடாமல், சரியான காலம் வரை தொடர வேண்டும். அடுத்து ஈஸ்வரனின் அனுக்கிரகம் இல்லை என்றால், என்ன முயற்சியை சரியாகச் செய்தாலும், அது வெற்றி பெறாமல் போகலாம் என்ற அறிவு இருக்க வேண்டும்.

நம்முடைய முயற்சிக்கு ஈஸ்வரனின் அனுக்கிரஹம் ஏன்? தேவை என்றால், அந்த ஈஸ்வரனால் மட்டுமே நம்முடைய முயற்சியில் ஏற்படுகின்ற தடைகளை நீக்க முடியும்.

அப்படியானால் முயற்சிக்கு தடைகள் எவை என்றால், அதற்கு சாஸ்திரம் தடைகளை மூன்று விதமாக பிரித்துக் கையாளுகின்றது. அவைகள் முறையே,

**ஆதி தெய்வீகம் ––** இயற்கையிலிருந்து வருகின்ற தடை.

**ஆதி பௌதீகம் ––** சூழ்நிலைகளினால் வருகின்ற தடை.

**ஆத்யாத்மீகம் ––** நம்மால் ஏற்படுகின்ற தடை.

## இயற்கையிலிருந்து வருகின்ற தடை.

இது பூகம்பம், மழை வெள்ளம், இடி, மின்னல் மற்றும் விபத்துக்கள் போன்றவைகளினால் வருகின்ற தடை.

## சூழ்நிலைகளினால் வருகின்ற தடை.

இது நம்மைச் சார்ந்த உற்றார், உறவினர்களாலோ, நண்பர்களாலோ அல்லது நம்முடைய குடும்பத்தினராலோ ஏற்படுகின்ற சூழ் நிலைகளினால் உண்டாகின்ற தடை.

## நம்மால் ஏற்படுகின்ற தடை.

இது நாமே நம்முடைய அறியாமையினாலும், நம்முடைய உடல் உபாதைகளினாலும் உண்டாக்கிக் கொள்கின்ற தடை..

இதுப்போன்ற தடைகள் நம் முயற்சிக்கு இடையூறு உண்டாக்காதவாறு தடுக்க நம்முடைய பிரார்த்தனைகள் மட்டுமே நமக்கு கைக் கொடுக்கும்.

# அனுபந்த சதுஷ்டயம்

பொதுவாக சில நூலாசிரியர்கள், தாங்கள் எழுதும் பிரார்த்தனை ஸ்லோகத்தில் அந்த நூலைப் பற்றிய சில விபரங்களை பிரார்த்தனை ஸ்லோகத்துடன் இணைத்து வெளிப்படுத்துவார்கள். அதற்கு **"அனுபந்த சதுஷ்டயம்"** என்று பெயர்.

இங்கு, ஸ்ரீ சங்கரரும் தன்னுடைய **"தத்வபோதம்"** நூலின் பிரார்த்தனை ஸ்லோகத்தில் **"அனுபந்த சதுஷ்டயம்"** வெளிப்படுத்தியுள்ளார். அதாவது, ஒரு நூலாசிரியர் ஒரு நூலை எழுதி வெளியிடுவதற்கு சில நிபந்தனைகள் உள்ளன.

அவைகள் என்ன என்றால்?

அந்த நூலை எழுதுவதற்கு முன்பு அந்த நூலைப் பற்றிய விபரங்களை முன்னுரையாக கண்டிப்பாக குறிப்பிட வேண்டும். அதில் அந்த நூலைப் பற்றி முன்னுரையாக குறிப்பிடும் நான்கு விஷயங்களை **"அனுபந்த சதுஷ்டயம்"** என்று அழைப்பது நூலாசிரியர்களின் மரபு. அந்த முறையில் ஸ்ரீ சங்கரரும் தனது **"தத்வபோதம்"** என்ற நூலிலும் அதைக் கடைப்பிடித்துள்ளார்.

இதில் அனுபந்தம் என்றால், எழுதத் தொடங்கும் நூலுக்கு முன்னுரையாக, சதுஷ்டயம் என்ற நான்கு விஷயங்களை முதலில் கூற வேண்டும்.

அவைகள்,

**விசயம்** – நூல் எதை பற்றி பேசுகின்றது?

**அதிகாரி** – யாருக்காக இந்த நூல் எழுதப்படுகின்றது?

**பலன்** – படிக்கின்றவர்களுக்கு என்ன பயன் கிடைக்கும்?

**சம்பந்தம்** – படிக்கின்றவர்களுக்கு எப்படி சம்பந்தப்படுகின்றது?

எனவே, **“அனுபந்த சதுஷ்டயம்”** என்பது அந்த நூலைப் படிப்பதற்கு முன்னால், இந்த நான்கு விஷயங்களை தெரிந்து கொண்டு, இது நமக்குத் தேவையான நூல்தானா? என்பதை படிக்கின்றவர்கள் முடிவு செய்ய எளிதாக இருக்கும். ஸ்ரீ சங்கரரும் இந்த **“தத்வபோதம்”** நூலில் மங்கள ஸ்லோகத்திலேயே இந்த நான்கு விஷயங்களையும் தெளிவு படுத்தி விடுகின்றார்.

# ஸாதன சதுஷ்டயம்

அடுத்த நான்கு விஷயமாக **“ஸாதன சதுஷ்டயம்**" பற்றி குறிப்பிடுகின்றார். இந்த நான்கு தகுதிகள் உள்ள ஒருவன் மட்டுமே இந்த வேதாந்த நூலைப் படிக்கத் தகுதியானவன் என்பதையும் இனி அறிவுறுத்த உள்ளார்.

**ஸாதனசதுஷ்டய ஸம்பன்னாதி காரிணாம் மோக்ஷ**
**ஸாதனபூதம் தத்வ விவேகப்ரகாரம் வக்ஷ்யாம ||**

சாதனாசதுஸ்தாய – சம்பன்னாதிகாரிணாம் – மோக்ஷ சாதனபூதம் – முக்திக்கான வழிமுறையான தத்வவிவேக பிரகாரம் – நால்வகைத் தகுதிகளைக் கொண்டவர்களுக்கு – யதார்த்தத்தின் தன்மையை விசாரிக்கும் முறை வக்ஷ்யம் – நாம் விளக்குவோம்.

நால்வகைத் தகுதிகளைக் கொண்டவர்களுக்கு, விடுதலைக்கான வழிமுறையான யதார்த்தத்தைப் பற்றிய விசாரணை முறையை விளக்குவோம்.

சாதன சதுஷ்டயம் (நான்கு விதமான தகுதியை அடைந்த) உள்ள அதிகாரிகளுக்கு பலனாக மோட்சத்திற்கு

சாதனையாக இருக்கின்ற பாதையை இந்த நூலில் கூறப் போகின்றேன்.

இதில் **“மோட்சம்”** என்பது என்றும் நிலையான இன்பம், **பூரணதிருப்தி** அல்லது **மனநிறைவு** என்று பொருள்.

இந்த பூரண திருப்தியை அடைய தத்துவத்தை ஆராயும் முறையை (தத்துவவிவேகப்ரகாரம்) நான் கூறப் போகின்றேன் என்று ஆச்சாரியார் கூறுகின்றார்.

இங்கு சங்கராச்சாரியார் இந்த நூலை குரு, சிஷ்யன் இருவரும் உரையாடும் **கேள்வி – பதில்** போல அமைத்துள்ளார். அதாவது, சிஷ்யன் சந்தேகத்துடன் கேள்விகளைக் கேட்க, அதற்கு குரு விளக்கம் அளிப்பது போல இந்த நூல் அமைக்கப்பட்டுள்ளது.

**சாதன சதுஷ்டயம் என்றால் என்ன?**

நித்யாநித்ய வஸ்து விவேக: |
இஹாமுத்ரார்த பலபோகவிராக: |
சமாதிஷட்க ஸம்பத்தி: |
முமுக்ஷூத்வம் சேதி |

அதாவது, இந்த நூலைப் படிக்கும் அதிகாரிக்கு (சாதன சதுஷ்டயம்) **“நான்கு பண்புகள்”** இருக்க வேண்டும்.

அவைகள்,
விவேகம்
வைராக்கியம்
ஸமாதி ஷட்க சம்பத்தி
முமுக்ஷுத்வம்

போன்ற நான்கு பண்புகள் ஆகும்.

**விவேகம் என்றால் என்ன?**

नित्यानित्यवस्तुविवेकः – விவேகம் என்பது, ஒரு விஷயத்தை மற்றொன்றிலிருந்து வகைப்படுத்தி, பிரித்துப் பார்த்து புரிந்துக் கொள்ளும் அறிவாற்றலின் திறன்.

அதாவது, விவேகம் என்பது (நித்யாநித்ய வஸ்து விவேக:) எது நித்தியம், எது அநித்தியம் என்று பிரித்துப் பார்த்து ஆராய்தலே ஆகும். ஒரு நதி தொடர்ந்து ஓடுகிறது. அதன் நீர் ஒவ்வொரு கணமும் மாறுகிறது. ஆனால் ஆற்றுப் படுகை எல்லா நேரத்திலும் ஒரே மாதிரியாக இருக்கிறது.

ஒப்பீட்டளவில் இங்கு, நீர் அனித்தியம். அதேசமயம் ஆற்றுப்படுகை நித்யம் என்பதுப்போல, இந்த உலகத்தில் எந்தப் பொருளும் நித்தியமாக இருப்பதில்லை.

ஆகவே, எல்லோரும் அழிந்து போகின்ற அநித்திய பொருளின் மீதே ஆசை வைக்கின்றனர். நித்தியமான, என்றும் அழியாத அந்தப் **“பரம்பொருளை”** யாரும் விரும்பு வதில்லை. இதற்குக் காரணம், மனிதனின் மனதில் உள்ள விருப்பு, வெறுப்புக்களே அவனது விவேக சக்தியை அழித்து விடுகின்றன.

ஒருவன் தான் செய்யும் செயல்களை, **“நான்”** செய்கின்றேன் என்ற பற்று வைக்காமல், அவனது அறிவைப் பயன்படுத்தி, அனைத்து செயல்களும் இறைவன் என்னைக் கருவியாக பயன்படுத்திக் கொண்டு, ஈஸ்வர காரியமாகவே இந்த பிரபஞ்சச் செயல்கள் நடைபெறுகின்றன என்ற புரிதலுடன், செய்யும் செயல் எதுவும் என்னுடையது அல்ல.

அனைத்தும் அவன் செயல் என்று, செயல்களின் பலன்களை ஈஸ்வரார்பணமாக அர்பணித்து, கர்ம யோகப்படி வாழ்ந்தால், அவனுக்கு **“விவேகம்”** உண்டாகி, அந்த விவேகத்தின் பலனாக **“வைராக்கியம்”** உண்டாகின்றது.

**வைராக்கியம் என்றால் என்ன?**

विरागः कः – விரக்தி என்றால் என்ன? இது பேரார்வம் இல்லாதது. இது வைராக்கியம் என்றும் அழைக்கப்படுகிறது.

வைராக்கியம் என்பது (இஹமுத்ரார்த பலபோகவிராக:) இங்கேயும். இந்த பூலோகத்தில் (இஹாம்) மற்றும் மறுமையிலும் (அமுத்ரா), இன்பத்தைக் கொடுக்கின்ற பொருட்கள், மற்ற லோகங்களான சொர்க்கம் போன்ற லோகத்தில் இன்பத்தைக் கொடுக்கின்ற பொருட்கள் என, நம்முடைய கர்ம பலத்தினால் கிடைக்கின்ற போகப் பொருட்கள் மீது பற்றுக்களை வைக்காமல் இருப்பதே **“வைராக்கியம்”** எனப்படும்.

**சமாதி ஷட்க சம்பத்தி என்றால் என்ன?**

சமாதி ஷட்க சம்பத்தி என்பது, சம:, தம:, உபரம:, திதிக்ஷா, ஸ்ரத்தா, மற்றும் ஸமாதானம் என்ற ஆறு நற்பண்புகளை கொண்டவையே **“சமாதி ஷட்க சம்பத்தி”** என்று அழைக்கப்படுகின்றது.

**சம:** – மனக் கட்டுப்பாடு.

**தம:** – இந்திரியக் கட்டுப்பாடு.

**உபரம:** – விலகி இருத்தல்.

**திதிக்ஷா** – சகிப்புத்தன்மை.

**ஸ்ரத்தா** – நம்பிக்கை.

**ஸமாதனம்** – மன ஒருமைப்பாடு.

ஆகிய ஆறு நற்பண்புகளையே **“ஸமாதி ஷட்க சம்பத்தி”** என்கின்றோம்.

**சம: – மனக் கட்டுப்பாடு என்றால் என்ன?**

**சம:** என்பது மனோ நிக்ரஹம் ஆகும். அதாவது மனம் என்ற அந்தக் கரணத்தை உறுதியுடன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளுதல்.

மனதைக் கட்டுப்படுத்துவது மனோநிக்ரஹா எனப்படும். மனம் என்பது தொடர்ச்சியான எண்ண ஓட்டம். நம் மனதில் பல எண்ணங்கள் தோன்றும். அவற்றில் சில நல்லவைகள், பல கெட்டவைகள். ஆக, இத்தகைய எல்லா எண்ணங்களின் மொத்தமும் நம்மைத் தொந்தரவு மற்றும் அமைதியற்றதாக ஆக்குகிறது. இது நமது மனநிலையை உற்சாகத்திலிருந்து மனச்சோர்வுக்கு மாற்றுகிறது.

மனதை கட்டுப்படுத்த பிரார்த்தனை, ஜபம், மற்றும் தியானம் போன்றவைகளால் நல்ல எண்ணங்கள் உருவாகி, மனம் தூய்மை அடைந்து விட்டால், அந்த மனம் எளிதில் அமைதியடைந்து கட்டுப்படும்.

மனதை அமைதிப்படுத்துவதால், வைராக்கியத்தை அதிகப்படுத்தும். **இந்திரியக் கட்டுப்பாடு** வரும்.

உடலுக்கு ஒரு வாய். மனதுக்குப் பத்து வாய்கள் என்பார்கள். எனவே, மனதுக்குத் தேவையற்ற விஷயங் களைக் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும்.

**தம: – இந்திரியக் கட்டுப்பாடு என்றால் என்ன?**

**தம:** என்பது இந்திரிய நிக்ரஹம் ஆகும்.

அதாவது கர்மேந்திரியங்கள் மற்றும் ஞானேந் திரியங்களை கட்டுப்பாட்டில் வைத்திருத்தல். குறிப்பாக ஞானேந்திரியங்களான கண், காது, மூக்கு, நாக்கு முதலியவற்றை நன்முறையில் பயன்படுத்துதல். புலன்களுக்கு நூறு சதவீதம் சுதந்திரம் கொடுக்காமலிருத்தல். எந்தச் சூழ்நிலையில் இருந்தால் கட்டுப்பாட்டை இழப்போமோ, அந்தச் சூழ்நிலையில் இருந்து விலகி இருத்தல்.

புலன்கள் இயற்கையாகவே புறத்தில் இருக்கவே விரும்பும். அவைகள் கட்டுக்கடங்காத காட்டுக் குதிரைகளுடன் ஒப்பிடப்படுகின்றன. கண்கள் கண்டதைக் காண விரும்பு கின்றன. காதுகள் சுய புகழ், இசை, வதந்திகள் மற்றும் செய்திகளைக் கேட்க ஆர்வம் கொள்கின்றன. மூக்கு வாசனையை முகர்கின்றன. நாக்கு எதையாவது சுவைத்துக் கொண்டே இருக்கின்றன. இறுதியாக, தோல் தொடுவுணர்வு எனும், சரீர இன்பங்களை விரும்புகிறது.

இவைகள் அனைத்தும் மனதை புலன் உறுப்புகளுக்கு அடிமையாக்குகின்றன. அதுவே, நாம் மனதைக் கட்டுப்படுத்தி, கட்டளையிட்டால், புலன்கள் நமக்குக் கீழ்ப்படிகின்றன.

ஆகவே, மனம் எஜமானாக இருக்க வேண்டும். ஆனால் அடிமையாக இருக்கக்கூடாது. பலவீனமான மனிதனிடம் புலன்களிடம் மனம் அடிமையாக உள்ளது. அதனால், சில சமயங்களில் புலன் உறுப்புகளை நம்மால் கட்டுப்படுத்த முடியாமல் போகலாம். ஆகவே, புலன்களையும் மனதையும் புத்தியினால் கையாள வேண்டும்.

**உபரம: – விலகி இருத்தல் என்றால் என்ன?**

சமம், தமம் முதலியவற்றைத் தொடர்ந்து, தேவையற்ற விசய, சுகங்களில் இருந்து விலகி இருத்தல் மிகவும் முக்கியம். தேவையற்றதிலிருந்து விலகி, நமக்கு கொடுக்கப்பட்ட கடமைகளை மட்டும் சரியாகச் செய்தல் (ஸ்வதர்ம அனுஷ்டானம்) முதலியன **உபரமம்** எனப்படும்.

உபரமத்தை அடைவதினால், சம, தமம் தொடந்து நம்மிடையே நிற்கும். வேதாந்த விஷயங்களை மனம் ஒன்றி கேட்பதற்கு உதவும். இதுவே, **சிரவணம்** எனப்படும்.

**திதிக்ஷா – சகிப்புத்தன்மை என்றால் என்ன?**

திதிக்ஷா என்ற சொல்லுக்குப் பொருத்துக் கொள்ளுதல், சகித்துக் கொள்ளுதல் என்றுபொருள். அதாவது, குளிர், வெப்பம், மானம், அவமானம் போன்ற எதிரெதிர் அனுபவங்களான இருமைகளை சகித்துக் கொள்ளுதல்.

கஷ்டமான சூல்நிலை இயற்கையாக வரும் பொழுது, அதை நீக்க முழு முயற்சி செய்ய வேண்டும். மனதளவில் குறை சொல்லாமல் எதையும் செய்தல்.

**திதிக்ஷாவை அடைவதற்கான உபாயம் என்ன?**

பொறுமையைப் பழகியே பொறுமையாக இருக்க வேண்டும். எதை மாற்ற முடியாது என்று தெரிகிறதோ அதைப் பொறுத்துக் கொள்ளும் அறிவைப் பழக வேண்டும். மாற்ற முடியுமெனில், அதை மாற்ற முயற்சி செய்ய வேண்டும். மாற்ற முடியாத துன்பங்களை தவமாகப் பாவித்து அவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மனோ பலத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும். கஷ்டத்தை தாங்கும் சக்தியுடையவனே பலமுள்ளவன்.

(**நாயமாத்மா பலஹீனேன லப்யதே** – இந்த ஆத்மா பலவீனர்களால் அடையப்படுவதில்லை என்று கீதையில் பகவான் கூறுகிறார்.)

**ஸ்ரத்தா – நம்பிக்கை என்றால் என்ன?**

ஸ்ரத்தா என்பதற்கு நம்பிக்கை அல்லது விசுவாசம் என்று பொருள்.

## எதில் நம்பிக்கை?

*குரு வேதாந்த வாக்யேஷு விஸ்வாஸ: ஸ்ரத்தா*

குரு மற்றும் வேதாந்த வாக்யங்களில் நம்பிக்கை வேண்டும்.

குருவினுடைய வார்த்தைகளும், சாஸ்திரத்தின் வார்த்தைகளும் சாட்சாத் ஈஸ்வரனிடமிருந்து வருகின்றன என்ற நம்பிக்கை வேண்டும்.

ஏற்கனவே தெரிந்த ஒன்றை நம்ப வேண்டிய அவசியம் இல்லை, தெரியாத ஒன்றை அடையும் வரை அதன்மீது நம்பிக்கை வேண்டும்.

சிரத்தையே ஞானத்தின் முதல் படி. அறிவு வந்துவிட்டல் சிரத்தையின் தேவை இல்லை. சிரத்தையே ஞானமாகப் பரிமாணம் அடைகிறது.

**"ஸ்ரத்தாவான் லபதே ஞானம்"** என்கிறது கீதை.

வேதாந்த விஷயத்தில் ஞானம் ஏற்படும் வரை சிரத்தை தேவை.

**சமாதனம் – மன ஒருமைப்பாடு என்றால் என்ன?**

சமாதனம் என்பது மன ஒருமுகப்பாடு ஆகும். அதாவது நம்முடைய இலட்சியத்தில் இருந்து விலகாமல், சித்தத்தை ஒருமுகமாக வைத்துக் கொள்ளுதல். யோக சாஸ்திரம் இதையே சமாதி என்கிறது.

தியானிக்க வேண்டிய பொருளில் இருக்க வேண்டிய மன ஒருமுகப்பாடே **“சமாதானம்”** எனப்படுகிறது.

இந்த ஆறு பண்புகளையும் எவன் ஒருவன் கடைப்பிடித்து வாழ முற்படுகின்றானோ, அவனது வாழ்வில் நிச்சயமாக ஞானம் கிடைக்கப் பெற்று, என்றும் நிலையான மன மகிழ்ச்சியுடன் இருப்பான்.

**முமுக்ஷுத்வம் என்றால் என்ன?**

மோக்ஷோ மே பூயாத் இதி இச்சா |
ஏதத் ஸாதன சதுஷ்டயம் |
ததஸ் தத்வ விவேகாதிகரணோ பவந்தி |

மோக்ஷம் வேண்டும் என்கிற தீவிர ஆசை. இந்த விருப்பம் தீவிரமாக வளர்ந்து, மற்ற தேவையற்ற ஆசைகளை

மறுத்து, மோக்ஷத்திற்காக மட்டுமே நம்மைச் செயலில் தூண்டும் அளவுக்கு வளர்ந்த ஆசை என்று அர்த்தம்.

*முமுக்ஷுத்வத்தை அடைவதற்கான உபாயம்*

விவேகம் – அநித்யத்தின் மீது வைராக்யமும், நித்யத்தின் மீது ஆசையும் வளர்த்தல்.

கர்ம யோகம் – மேலான பொருள் மீது ஆசை வர சித்த சுத்தி வேண்டும். அதற்குக் கர்ம யோகம் பழக வேண்டும்.

**"முமுக்ஷு"** என்பதற்கு அர்த்தம் **"மோக்ஷ காங்க்ஷி"** என்பார்கள். **"மோக்ஷ காங்க்ஷி"** என்பதற்கு அர்த்தம் **"மோக்ஷத்தை விருப்புபவன்"** என்று பொருள்.

அந்த விருப்பம் பூர்த்தியாகி, ஆத்ம ஸாக்ஷாத்காரம் பெற்றுவிட்டவன் **'முக்தன்'.** ஒவ்வொருவரும் முமுக்ஷுவாக இருந்துதான் பிறகு, முக்தனாக முடியும்.

பெரும்பாலும், எல்லோருக்குமே இந்த ஸம்ஸாரக் கடலில் நீந்தி கரை சேர வேண்டும் என்ற விருப்பம் இருக்கும். ஆனால், அதற்கான பாதை அவர்களுக்கு திறக்கப்படாமல்

இருப்பதற்குக் காரணம், அவரவர்கள் கர்ம வினைகள் என்றே கூறலாம்.

அந்த கர்மவினைகளின் தாக்கம் குறையவேண்டுமால், அவர்கள் பிரதிபலன் எதிர்ப்பார்க்காத சேவையை மற்றவர்களுக்கு மனப்பூர்வமாக செய்வதின்மூலம் மட்டுமே அதைக் குறைக்க முடியும்.

அதன்மூலம், அவர்கள் கஷ்டம் நீங்கிப் பரமானந்தமான மோக்ஷத்தை அடைவதில் விருப்பம் உண்டாகும். ஆனால், இந்த அரைகுறையாக இருக்கும் விருப்பம் மட்டுமே **'காங்க்ஷா'** ஆகிவிடாது. தீவிர விருப்பத்துடன், அதன்மீது ஏக்கமும் இருக்க வேண்டும். அத்துடன், அதை அடையத் தன்னாலான முயற்சியையும் மேற்கொண்டு உழைத்தால்தான், அது உண்மையான **'காங்க்ஷா'** எனப்படும்.

அவ்வாறு, அதிதீவிரமாக மோக்ஷம் அடைவதில் ஆர்வமுள்ளவனே **முமுக்ஷு** எனப்படுகின்றான்.

அவனுடைய தன்மை என்னவாக இருக்க வேண்டும், அவன் எப்படி எல்லாம் இருக்க வேண்டும், என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்ற விஷயத்தில் இவைகள் எல்லாம் ஒன்று சேர்ந்த ஒன்றையே **'முமுக்ஷுத்வம்'** என்கிறோம்.

அதைத்தான் **முமுக்ஷா, முமுக்ஷுதை** என்றும் சொல்வார்கள்.

ஸம்ஸார பந்த நிர்முக்தி: கதம் ஸ்யாந் மே தயாநிதே |
இதி யா ஸுத்ருடா புத்திர் யா வக்தவ்யா ஸா முமுக்ஷுதா||

– இப்படித்தான் பகவான் ஆதிசங்கரர் அவர்கள் **“அபரோக்ஷாநுபூதி”** என்னும் நூலில் இந்த **முமுக்ஷு** எனும் தன்மைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்.

ஈச்வரனிடமோ, ஈச்வரனின் ப்ரதிநிதியாக நம்முடைய கண்ணுக்கு முன்னே உள்ள குருவிடமோ, ஒருத்தன் கதறுகிற ரீதியில் வார்த்தைகளைப் போட்டிருக்கிறார்.

"தயாநிதே!" என்று அவன் ஈச்வரனாகிய குருவைக் கூப்பிட்டு, *“ஸம்ஸார பந்தத்திலிருந்து எனக்கு எப்போது விமோசனம் கிடைக்கும்?”* என்று தவித்துக் கொண்டு கேட்கிறான். விமோசனம் பெறவேண்டுமென்பதில் திடமான புத்தியோடு கேட்கிறான் என்கிறார்.

இந்தத் ஏக்கம் என்கின்ற நிலையில், அந்த முமுக்ஷுதாவைப் பெண்பாலாகவே இங்கு சொல்லியிருக்கிறது – **"யா வக்தவ்யா ஸா முமுக்ஷுதா"**.

ஸம்ஸார பந்தத்திலிருந்து எப்போது விமோசனம் கிடைக்குமென்று ஈஸ்வரனிடம் பிரார்த்தனை செய்யும்போது, அந்த தவிப்பில் திடமான அறிவாக எவள் கூறப்படுகிறாளோ? அவளே மு**முக்ஷுதை** என்று ச்லோகத்திற்கு அர்த்தம்.

**'விவேக சூடாமணி'**யில் [முமுக்ஷுத்வத்திற்கு லக்ஷணம்] சொல்லும்போது, "**ஸ்வ-ஸ்வரூப அவபோதேந மோக்தும் இச்சா முமுக்ஷுதா"** என்கிறார்.

அதாவது, ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுபட்டால் மட்டும் போதாது. ஸம்ஸார பந்தம் போய் உயிர் ஏதோ ஜடம் மாதிரி ஆகிவிட்டால் போதாது. **"ஸ்வஸ்ரூப அவபோதம்"** வேண்டும். அதாவது தன்னுடைய உண்மை நிலையான ஆத்மாவை அநுபவிக்கும் **ஞான விழிப்பு** உண்டாக வேண்டும். அதுதான் முக்கியம். அதற்காகவே தவித்து ஏங்க வேண்டும்.

ஆக, மாயை போக வேண்டும் என்பதைவிட, ஸத்யம் அநுபவத்திற்கு வரவேண்டும் என்பதையே முக்கியமாக நினைக்கிற ஏக்கம் அல்லது தவிப்புதான் **முமுக்ஷுத்வம்.**

*முமுக்ஷுத்வத்தை அடைவதன் பலன்*

**ஸ்ரவணம் சித்தியாதல்:** வேதாந்த விசாரங்களை கேட்பதில் தீவிர நாட்டம். தடைகள் நீங்கி முன்னேறும் சக்தி

கிடைக்கும். மற்ற அனைத்து சாதனைகளையும் பின்பற்றுவது எளிதாகும்.

இந்த நூலைப் படிக்கும் அதிகாரிக்கு (ஸாதன சதுஷ்டய சம்பத்தி) மேற்கண்ட **"நான்கு பண்புகள்"** இருக்க வேண்டும் என்று பார்த்தோம்.

சரி!, ஆனால், நம்மிடையே இதில் ஒரு சில பண்புகள் இல்லை என்றாலும், அல்லது எந்த பண்புகளுமே இல்லை என்றாலும், நான் இந்த நூலைப் படிக்க முடியாதா? என்ற கேள்வி பெரும்பாலானவர்களுக்கு வரும்.

ஒருவன் கர்மயோகப்படி வாழ்ந்தால் அவனுக்கு **"ஸாதன சதுஷ்டய சம்பத்தி"** என்ற **"நான்கு பண்புகள்"** (விவேகம், வைராக்கியம், சமாதி ஷட்க சம்பத்தி, மற்றும் முமுக்ஷுத்வம்) உண்டாகும்.

உபாசனையை (தியானம், பக்தி) ஒருவன் சரியாகச் செய்துவந்தால் அவனுக்கு **"சமாதி ஷட்க சம்பத்தி"** என்ற ஆறு நற்பண்புகள் மிக விரைவில் உண்டாகும்.

இந்த **"தத்வ போதம்"** என்ற நூலை படிக்கும் **"அதிகாரி"** என்ற வகையில் ஒருவனுக்கு என்ன என்ன தகுதிகள் இருக்க வேண்டும் என்பதை இதுவரைப் பார்த்தோம்.

ஞானத்தைக் கொடுக்கும் வேதாந்த சாஸ்திரத்தை படிக்க வரும் ஒருவனுக்கு **"ஸாதன சதுஷ்டய சம்பத்தி"** என்ற **"நான்கு பண்புகள்"** இருந்தால், அவன் எளிதாக இந்த வேதாந்த சாஸ்திரத்தைப் படித்து புரிந்து கொண்டு ஞானத்தை அடைந்து, அந்த ஞானத்தின் பலனாக **"மோட்சம்"** கிடைக்கும் என்ற முறையில் இதுவரை நாம் பார்த்தோம்.

வேதாந்த சாஸ்திரத்தை விசாரம் செய்தவுடன் ஞானம் கிடைத்துவிடும் என்ற அறியாமை சிலரிடம் காணப்படுகின்றது.

அதற்கு காரணம், அவர்கள் மேற்கண்ட நற்பண்புகள் இன்றி சாஸ்திர நூலை படிப்பதினால், **"ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதாவாது"** என்பது போல, அதாவது, புத்தகத்தில் பார்க்கும் சுரைக்காயை வைத்து பொறியல் செய்ய முடியாது.

அதுப்போல, மேற்கண்ட நற்பண்புகள் இன்றி படிக்கும் சாஸ்திரம் அவர்களுக்கு ஞானத்தைக் கொடுத்து விடாது.

அதனால்தான் சாஸ்திரத்தை நன்கு படித்தவர்கள் கூட இந்த நற்பண்புகள் இன்றி, ஞானத்தை அடையாமல் அஞ்ஞானியாகவே இருக்கிறார்கள் என்பதையும் அறியவும்.

இதற்கு சாஸ்திரம் அறிவுறுத்தும் விஷயம் என்ன வென்றால், ஒருவனுக்கு இதில் கூறப்பட்டுள்ள எந்த பண்புகளுமே இல்லையென்றாலும், அவன் இந்த நூலைப் படிக்க வேண்டும் என்ற தீவிர ஆர்வத்துடன், தக்க சத்குரு முகமாக *(**ஸ்தோத்ரன் பிரஹ்ம நிஷ்டன்** – சாஸ்திரத்தை நன்றாகப் படித்து அதன் படி நற்பண்புகளுடன் பிரம்மமாக வாழுகின்ற குருவிடம்)*, ஒருமனதுடன் விசாரம் செய்து வந்தால், அந்த விசாரத்தின் பலனாக **சித்த சுத்தி** உண்டாகி, அவன் கர்ம யோகப்படி வாழ முற்படுவான். அந்த தர்மப்படி வாழும் வாழ்க்கையானது அவனுக்கு மேற்கண்ட நற்பண்புகள் அனைத்தையும் விரைவில் கொடுத்துவிடும்.

எனவே, நாம் அனைவரும் இந்த **"தத்வபோதம்"** என்ற நூலை முழு மனதுடன், குருவின் வழிகாட்டுதலுடன் ஒரு மனதாக படிக்க, படிக்க நம்மிடையே விரைவில் நற்பண்புகள் உண்டாகிவிடும் என்பதில் ஐயமில்லை.

தர்மப்படி வாழ்ந்து (கர்மயோகப்படி) இந்த சாதன சதுஷ்டய சம்பத்தை (அதிகாரித்துவம்) அடைந்தவர்கள் தத்வ

விவேகத்தை அறிந்து கொள்ளும் தகுதி உடையவர்கள் ஆகின்றார்கள்.

இந்த **"தத்வபோதம்"** என்ற நூலை விசாரம் செய்து வருவதில், ஐந்து தலைப்புகளின் கீழ் ஒவ்வொன்றாகப் படித்து வருகின்றோம். அதில் முதல் தலைப்பான **"அதிகாரித்துவம்"** முடிவடைந்தது. அதாவது, இந்த **'தத்வபோதம்'** என்ற நூலைப் படிக்கும் தகுதியுள்ள அதிகாரி யார் என்று பார்த்து முடித்தோம்.

இனி,**ஜீவ விசாரம்** (நான் யார்? என்று நம்மைப் பற்றிய விசாரம்)

**ஈஸ்வர விசாரம்** (ஈஸ்வரன், சிருஷ்டி என்ற இந்த உலகத்தைப் பற்றிய விசாரம்)

**மஹா வாக்கிய விசாரம்** (ஜீவனுக்கும், ஈஸ்வரனுக்கும் உள்ள சம்பந்தம் பற்றிய விசாரம்)

**பல விசாரம்** (மேற்கண்ட விசாரத்தின் வாயிலாக என்ன பலன் என்பதைப் பற்றிய விசாரம்).

# தத்துவ விவேகம்

तत्वविवेकः कः?

**தத்வவிவேகம் என்றால் என்ன?**

ததஸ் தத்வ விவேகாதிகரணோ பவந்தி |

**ஸாதன சதுஷ்டய சம்பத்தி** என்ற நான்கு பண்புகளை அடைந்தவன் தத்துவ விவேகத்திற்கு தகுதியை அடைகின்றான் என்று பார்த்தோம்.

ஆத்மா சத்தியம், ஆத்மாவிற்கு வேறாக உள்ள அனைத்தும் மித்யா.

விவேகம் என்றால் **அறிவு** என்ற பொருளில் எடுத்துக் கொண்டால், அறிவு என்றால் என்ன? என்ற சந்தேகம் வரும்.

அறிவு என்றால் பிரித்து புரிந்து கொள்ளுதல் என்று அர்த்தம். அதுப்போலவே, விவேகம் என்ற வார்த்தையின் பொருளும் பிரித்து புரிந்து கொள்ளுதல் என்றே இங்கு பொருள்படும்.

பிரித்துப் புரிந்து கொள்ளுதல் என்றால், எங்கேயோ ஒன்று வேறொன்றுடன் கலந்து இருக்கின்றது, அதை வேறு படுத்தி பிரித்து புரிந்து கொள்ளுதல் என்று அறிய வேண்டும்.

இதில் தத்துவம் என்றால் உண்மை அல்லது மெய் என்று பொருள்.

இந்த இடத்தில் தத்வ விவேகம் என்றால், உண்மையை பிரித்து சரியாகப் புரிந்து கொள்ளுதல் என்ற அர்த்தத்தில் அறிய வேண்டும்.

தத்துவத்திடம் தத்துவம் அல்லாத ஒன்று கலந்து இருக்கின்றது. அதனால், இதில் தத்துவம் என்ற சத்தியத்தை மட்டும் பிரித்து புரிந்து கொள்ளுதல் என்பதை தத்துவ விவேகம் என்றும், தத்துவ போதம் என்றும் அழைக்கின்றோம்.

**"எது சத்தியமோ அது தத்துவம்"**. அந்த தத்துவத்துடன் அசத்தியம் கலந்துள்ளது. இதில் இது சத்தியம், இது அசத்தியம் என்று அறிவுப்பூர்வமாக பிரித்து புரிந்து கொள்ள இருக்கிறோம். இதையே **'தத்துவ விவேகம்'** என்கின்றோம்.

கலந்துள்ள உண்மையையும், பொய்யையும் பிரித்து புரிந்து கொள்ள வேண்டுமானால், பொய் எப்படி மெய்யுடன் கலந்து இருக்க முடியும் என்ற கேள்வி உண்டாகின்றது.

இருக்கின்ற சத்தியத்துடன், இல்லாத அசத்தியம் எப்படி வந்து கலக்க முடியும்?

आत्मा सत्यं तदन्यत् सर्वं मिथ्येति ।

**“ஆத்மா ஸத்யம் ததன்யத் ஸர்வம் மித்யேதி”**

ஆத்மா சத்தியம், ஆத்மாவிற்கு வேறாக உள்ள அனைத்தும் மித்யா.

இந்த முழு பிரபஞ்சமும் ஒன்றேயான அந்த சத்திய வஸ்துவுடன் ஏற்றி வைக்கப்பட்டுள்ளது. ஆக அந்த சத்திய வஸ்து என்பது ஆ(**பரமா**)த்மா – வைத் தவிர வேறு ஒன்று இல்லவே இல்லை என்பதே உண்மை.

அந்த சத்தியத்திற்கு (ஆத்மாவிற்கு) வேறாக இருப்பது அனைத்துமே அனாத்மா அல்லது **“மித்யா”** ஆகும். இந்த இரண்டையும் பிரித்து புரிந்து கொள்வதுதான் **“தத்வ விவேகம்”** ஆகும்.

அதாவது, உண்மையான அறிவு என்றால் என்ன?

ஆன்மா உண்மை, மற்ற அனைத்தும் தோற்ற மாயை.

அதாவது, சுயம் உண்மையானது, மற்ற அனைத்தும் தோன்றி மறையும் ஒரு தோற்ற மாயை.

**உதாரணம்:–** கானல் நீர் போன்றது.

உண்மையற்றது என்பது உறுதியான நம்பிக்கை.

இங்கே மூன்று சொற்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவைகள், ஆன்மா, சத்தியம் மற்றும் மித்யா. ஆன்மா பிரம்மம் மட்டுமே முழுமையான உண்மை.

இதிலே, சத்தியம் என்பது யதார்த்தத்தை உறுதிப் படுத்துவது. அதன்பிறகு, அந்த உண்மையை ஏற்றுக் கொள்வது.

வேதாந்த சொற்களில், **சத்யம்** அல்லது **சத்** அல்லது **உண்மை** என்பது, மூன்று காலங்களிலும் மாறாமல் இருக்கும் ஒன்று.

நிகழ்காலம், கடந்த காலம் மற்றும் எதிர்காலம் என்ற எந்த நிகழ்வையும் சார்ந்து இல்லை. இந்த பிரமாணம் அல்லது ஆதாரநிலைக்கு எதுவும் உறுதிப்படுத்தவில்லை என்றால், அது **மித்யா** அல்லது தவறானதாக கருதப்படுகிறது.

**மித்யா** (मिथ्यम्) என்பது இருப்பதுப்போல இருக்கின்றது, ஆனால், அது மாறிக் கொண்டே இருக்கின்றது. நிஜம் அல்லது சத் என அதை வரையறுக்க முடியாது.

இது இல்லாதது அல்லது அசத்தியம் என்றும் கூற முடியாது. ஒரு பொருள் உள்ளது மற்றும் அனுபவிக்கப் படுகின்றது. ஆனால், அது மாறிக்கொண்டே இருந்தால், அது மித்யா அல்லது மாயை என்று அழைக்கப்படுகிறது.

உலகம் உள்ளது மற்றும் அனுபவிக்கப்படுகிறது. ஆனால், அது எல்லா நேரத்திலும் இருப்பதில்லை, அதன் அனுபவம் எல்லா நேரத்திலும் ஒரே மாதிரியாக இருக்காது. எனவே, அது மித்யா அல்லது மாயை எனப்படுகின்றது.

ஆத்ம சத்தியம் – சுயம் என்பது உண்மையானது.

பொதுவாக, நம் வாழ்க்கையில் இரண்டு அம்சங்கள் உள்ளன. **"நான்",** மற்றொன்று **'இந்த உலகம்'.**

இந்த உலகின் ஒவ்வொரு பொருளின் பெயர், வடிவம், தரம் மற்றும் அதன் அனுபவம் மாறிக் கொண்டே இருக்கின்றது. ஆனால், **"நான்",** என்பது என்றும் மாறாமல் இருக்கின்றது.

அதாவது, அவைகளை அனுபவிப்பவனாகிய **'நான்'** எனும் உணர்வு மாறாமல் இருக்கிறது. நான் ஒருபோதும் இல்லாமல் இல்லை. ஆனால், இந்த உலகம் மாறிக் கொண்டே

இருக்கின்றது. எனவே, "**நான்**" என்பது உண்மையானது. மற்ற அனைத்தும் தோன்றி மறைவது.

உதாரணமாக, இந்த புத்தகத்தில் **‘மை’** (இங்க்) கொட்டியுள்ளதா என்றால், இல்லை என்றே கூறுகின்றோம்.

ஆனால், உண்மையில் '**மை**' (இங்க்) உள்ளதால்தான் எழுத்துக்களைக் காண முடிகின்றது.

அதுப்போல, கானல் நீரை தூரத்தில் இருந்து பார்க்கின்றோம், பிறகு அந்த கானல் நீர் அருகில் சென்று பார்த்தால், அங்கு நீர் என்பது உண்மையில் இல்லை.

இதுப்போல, இல்லாத ஒன்றை நாம் இல்லை என்று எப்படி உறுதியாக நம்புகின்றோமோ? அதுப்போல, இருக்கின்ற ஒன்றையும் இல்லை என்று நம்பித்தான் ஆக வேண்டும் என்ற நிலை உள்ளது.

இதுப்போல, நம் கண்ணினால் காணப்படுகின்ற, உண்மையிலேயே இருப்பதுப்போல உள்ள இந்த பிரபஞ்சம் உண்மையில் இல்லை! என்றே சாஸ்திரம் கூற வருகின்ற உண்மை.

ஆக, இருப்பது சத்தியம் மட்டுமே, அசத்தியம் கலந்து இருப்பது போல தெரிவது தோற்ற மாயை என்பதை நமக்கு அறிவுப்பூர்வமாக உறுதிப் படுத்தவே இந்த வேதாந்த பாடங்கள் நமக்கு உதவுகின்றன.

அனுபவத்திற்கு உண்மையில் வருகின்ற அசத்தியம் (இந்த உலகம்), அனுபவத்திற்கு உண்மையில் இல்லாத அசத்தியம் (தற்பொழுது இங்கு பூனை இல்லை) என்று இரண்டு அசத்தியங்களை நாம் நடைமுறையில் காண்கிறோம்.

இதில் அனுபவத்திற்கு உண்மையில் இல்லாத அசத்தியத்தை "**பொய்**" என்றும், அனுபவத்திற்கு உண்மையில் இருக்கின்ற அசத்தியத்தை சாஸ்திரம் **"மித்யா"** என்று அழைக்கின்றது.

மித்யா என்றா,ல் உண்மையில் அது இல்லை, ஆனால் இருப்பதுப்போல அனுபவத்திற்கு இருக்கின்றது.

எனவே, இந்த அசத்தியமானது சத்தியத்துடன் கலந்து இருப்பதுப்போல உள்ளது. இங்கு இதைப் பிரித்துப் புரிந்துக் கொள்ள வேண்டும்.

**தத்துவவிவேகம்** = சத்திய, மித்தியா விவேகம்.

நிஜமும் – நிழலும், கயிறும் – பாம்பும், போல உண்மையில் இருப்பது ஒன்றுதான், ஆனால், அதை நாம் வேறொன்று இருப்பதாக தவறாக புரிந்து கொள்வது போல, (இது பொய் அல்ல, ஆனால் மித்யா எனலாம்) இருக்கின்ற சத்திய வஸ்து ஒன்றைத் தவிர வேறு ஒன்று இல்லவே இல்லை என்பதை பிரித்து புரிந்து கொள்வதே **"தத்வ விவேகம்"** ஆகும்.

சத்தியம் (உண்மை), அசத்தியம் (உண்மையற்றது) என்ற இரண்டு இருக்கின்றது, அதை பிரித்து அறிவதுதான் **"தத்வ விவேகம்"** என்று பார்த்தோம்.

# ஆத்மா, அனாத்மா

ஆத்மா என்றால் என்ன?

ஆத்மா சத்தியம் என்றால், அடுத்த கேள்வி வருகின்றது.

ஸ்தூல சூக்ஷ்ம காரணஸரீராத் வ்யதிரிக்த:
பஞ்சகோஸாதீத: ஸன்
அவஸ்தாத்ரயஸாக்ஷீ ஸச்சிதானந்தஸ்வரூப: ஸன்
யஸ்திஷ்டதி ஸ ஆத்மா |

**“நான்”, “நான்”** என்று சொல்கின்ற தன்னுணர்வு ஒன்றையே **“ஆத்மா”** என்று சாஸ்திரம் கூறுகின்றது.

ஆனால், அறியாமையினால், **“நான்”** என்பது, இந்த உடல் என்பதாக நாம் அனைவரும் பொதுவாக நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், அப்படிப்பார்த்தாலும், இந்த **“நான்”** என்பது, நாம் பயன்படுத்துகின்ற இடத்திற்கு ஏற்ப மாறுபடுகின்றது.

அதாவது, இந்த **"நான்"** என்பது, சில நேரங்களில் உடலைக் குறித்தும், சில நேரங்களில் மனதைக் குறித்தும், சில நேரங்களில் புத்தியைக் குறித்தும், இன்னும் சில நேரங்களில் அறிவைக் குறித்தும் பல அர்த்தங்களுடன் கையாளப் படுகின்றது.

ஆனால், இங்கு **"நான்"** என்பதை, நாம் எந்த அர்த்தத்தில் உண்மையில் புரிந்து கொண்டுள்ளோம் என்று பார்த்தால், தவறாகவே அதை புரிந்து கொண்டு கையாண்டு வருகின்றோம்.

இந்த **"நான்"** என்பது உண்மையிலேயே அந்த சத்திய வஸ்துவான **"ஆத்மா"** என்பதை வேதாந்தம் மட்டுமே நமக்கு சாஸ்திரத்தின் வாயிலாக விளக்கமாக எடுத்துக் கூறி புரிய வைக்க முயற்சிக்கின்றது.

வேதாந்தம் உண்மையில் எங்கு தொடங்குகின்றது என்பதை அறிய முற்பட்டால், இந்த **"நான்"** என்பதற்கு உண்மையான வஸ்து ஒன்று உள்ளது. ஆனால், நாம் **"நான்"** என்ற சொல்லுக்கு உண்மையல்லாத ஒன்றையும் கலந்து புரிந்து வைத்துக் கொண்டுள்ளோம் என்பதை, நமக்கு ஆரம்பத்திலேயே அறிவுறுத்துகின்றது.

இதை எப்படி அறிவது என்றால், எது என்னுடையது என்று கூறுகின்றோமோ? அது நிச்சயமாக **“நான்”** ஆக இருக்க முடியாது.

அதாவது, எதை **“நான்”** என்று கூறுகின்றோமோ? நிச்சயமாக அது என்னுடையதாக இருக்க முடியாது.

அப்பொழுது **“நான்”** என்று நினைத்துக் கொண்டிருப்பதற்கு வேறாக ஒன்று என்னிடம் உள்ளதால்தான் நாம் அதை, இது என்னுடைய பொருள் என்று கூறுகின்றோம்.

இந்த உடலை சில நேரங்களில் **“நான்”** என்று அழைக்கின்றோம். சில நேரங்களில் என்னுடையது என்றும் அழைக்கின்றோம். இதிலிருந்து **“நான்”** என்ற சொல்லில் நாம் புரிந்து கொண்டுள்ளதில் குழப்பம் உள்ளது.

இப்பொழுது விசாரம் செய்துப் பார்த்தால், எது உண்மையான **“நான்”** என்று அறிய முறப்பட்டால், **“ஆத்மா”** என்ற ஒன்று மட்டுமே **“நான்”** என்பதற்கு உண்மையான அர்த்தம்.

**ஆத்மா** = நான்.

**அனாத்மா** = நான் அல்லாதது.

ஆக, நான் அல்லாதவற்றை **“நான்”** என்று தவறாக கலந்து புரிந்து வைத்துக் கொண்டுள்ளோம்.

ஆத்மா என்ற தத்துவத்தில் அனாத்மாவை நாம் கலந்து வைத்துக்கொண்டு குழப்பத்தில் உள்ளதால், தவறானவற்றை நீக்கி சரியானவற்றை சுட்டிக்காட்ட வேண்டும் என்று இந்த சாஸ்திரம் விரும்புகின்றது.

இதற்காக சத்குருவின் வாயிலாக சாஸ்திரமானது ஆத்மாவுடன் கலந்து உள்ள சிலவற்றை நமக்கு சுட்டிக் காட்டி, இது ஆத்மாவிலிருந்து வேறுபட்டது என்பதை புரிய வைக்க முயற்சிக்கின்றது.

அனாத்மாவில் நம்மிடையே **“நான்”** என்ற புத்தி உள்ளதை இங்கு சுட்டிக் காட்டி, அவைகள் என்னென்ன? என்பதை இனி விளக்கவும் உள்ளது.

**ஆத்மா என்றால் என்ன?**

ஆத்மா என்பது சத்தியம், அனாத்மா என்பது அசத்தியம் என்று ஏற்கனவே கண்டோம். அனாத்மாவிடமிருந்து வேறான தன்மை உள்ளது "ஆத்மா" எனப்படும்.

இதில் ஆத்மா என்பது **"நான்"**.

ஆத்மா அல்லாத அனாத்மாவான எதுவும் நானல்ல! என்பதை இனி ஒவ்வொன்றாக விளக்கம் கொடுக்கின்றது.

அவைகள் என்னென்ன என்று பார்த்தால், **சரீரங்கள், கோஷங்கள், அவஸ்தைகள்** என்று சுட்டிக் காட்டப்படுகின்றன.

எந்தெந்த அனாத்மாக்களை **"நான்"** என்று தவறாக நாம் புரிந்து கொண்டுள்ளோம் என்பதை, இனி ஒவ்வொன்றாக புரிய வைத்து, அதில் முதலில் **"நான்"** என்று தவறாக நினைத்துக் கொண்டிருக்கின்ற இந்த சரீரத்தை (உடலை) மூன்று வகைகளில் பிரித்து, அவைகள் முறையே,

ஸ்தூல சரீரம்
சூக்ஷ்ம சரீரம்
காரண சரீரம்

என்று இந்த மூன்று விதமான சரீரங்களை அறிமுகப்படுத்துகின்றது.

நாம் பார்த்து அனுபவிக்கும் இந்த உடல் **'ஸ்தூல சரீரம்'** ஆகும்.

மனம் என்பது **‘சூக்ஷும சரீரம்’** ஆகும்.

ஸ்தூல சரீரமும் (உடல்), சூக்ஷும சரீரமும் (மனம்) ஆகிய இரண்டும் தோன்ற காரணமாக எது இருந்ததோ? அதுவே, **‘காரண சரீரம்’** ஆகும்.

அடுத்து இந்த மூன்று சரீரங்களின் வாயிலாக **“ஐந்து கோஷங்கள்”** உள்ளன என்றும்,

அவைகள் முறையே,

அன்னமய கோஷம்
பிராணமய கோஷம்
மனோமய கோஷம்
விஞ்ஞானமய கோஷம்
ஆனந்தமய கோஷம்

என்பனவாகும்.

**கோஷம்** என்பது உறை என்று அழைக்கலாம்.

பஞ்ச கோஷங்கள் என்றால், ஐந்து உறைகள் என்று பொருள். மேற்கண்ட இந்த மூன்று சரீரங்களும் சேர்ந்ததே **ஐந்து கோஷங்கள்** ஆகின்றன.

அன்னமய கோஷம் என்பது **"ஸ்தூல ஸரீரம்"** என்றும். பிராணமய கோஷம், மனோமய கோஷம், மற்றும் விஞ்ஞானமய கோஷம் என்ற மூன்று கோஷங்களும் சேர்ந்தது **"சூக்ஷ்ம ஸரீரம்"** என்றும், ஆனந்தமய கோஷம் என்பது **"காரண ஸரீரம்"** என்றும் ஆகின்றன.

அடுத்தது மூன்று விதமான அவஸ்தைகள் இந்த மூன்று சரீரங்களுக்கு உண்டு.

அவைகள் முறையே,

**ஜாக்கிரதா அவஸ்தை** – விழிப்பு நிலை – ஸ்தூல சரீரம்

**ஸ்வப்ன அவஸ்தை** – கனவு நிலை – ஸுக்ஷ்ம சரீரம்

**சுஷுப்தி அவஸ்தை** – ஆழ்ந்த உறக்க நிலை – காரண சரீரம். என்பனவாகும்.

இந்த மூன்று அவஸ்தைகளையும் அனுபவிக்காமல் சாட்சியாக இருந்துக் கொண்டு இருப்பதுவே **ஆத்மா** என்றும் சாஸ்திரம் அறிவுறுத்துகின்றது.

அதாவது, மூன்று சரீரங்கள், ஐந்து கோஷங்கள், மற்றும் மூன்று அவஸ்தைகள் என பதினொன்று தத்துவங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, அவைகள் முற்றிலும் ஆத்மாவிடமிருந்து வேறானவைகள் என்பதை இனி விளக்கமாக கூற உள்ளது.

இதில் ஆத்மா என்பதற்கு விளக்கம் கொடுக்கும் பொழுது அதனை **“சத் சித் ஆனந்தம்”** (**சத்** – இருத்தல், **சித்** – அறிவு, **ஆனந்தம்** – நிறைவு அல்லது திருப்தி) என்று கூறப்படுகின்றது.

அதாவது, சச்சிதானந்தம் என்பதில், ஆத்மாவின் மூன்று தன்மைகளை அறிமுகப்படுத்தப்படுகின்றது.

## ஸ்தூல சரீரம்

ஸ்தூல சரீரம் என்றால் என்ன?

பஞ்சீக்ருத பஞ்சமஹா பூதை: க்ருதம் ஸத்கர்மஜன்யம்
சுகது: காதி போகாயதனம் ஸரீரம்

அஸ்தி ஜாயதே வர்ததே விபரிணமதே அபக்ஷீயதே வினஸ்யதீதி ஷட்விகார வதேதத் ஸ்தூல ஸரீரம்.

சுக, துக்கங்கள், மான, அவமானங்கள் மற்றும் குளிர், வெப்பம் முதலான அனுபவங்களை அனுபவிக்கக் கூடிய இடமாக இந்த **ஸ்தூல ஸரீரம்** உள்ளது.

இந்த உலகம் பஞ்ச பூதங்களால் ஆனதுப்போல, இந்த ஸ்தூல ஸரீரமும் நிலம், நீர், காற்று, நெருப்பு, மற்றும் ஆகாயம் முதலான ஐந்துபூதங்களால் உண்டாக்கப்பட்டுள்ளது.

சாஸ்திரம் இந்த சிருஷ்டி எவ்வாறு தோன்றியது என்பதைப்பற்றி விளக்கமாகக் கூறிவரும் பொழுது, இறுதியில் இந்த **"பஞ்ச பூதங்கள்"** தோன்றின என்று கூறுகின்றது.

ஆனால், இந்த ஐந்து பூதங்களும் முதலில் சூக்ஷ்ம நிலையில் இருந்து, பிறகுதான் ஸ்தூல நிலைக்கு வந்ததாகக் கூறுகின்றது.

எந்த தோற்றமும் முதலில் காரண நிலை, சூக்ஷ்ம நிலை, பிறகு இறுதியில் ஸ்தூல நிலை என்ற வரிசைக் கிரமமாக உருவாகும். அதன் அடிப்படையில் இந்த பஞ்சபூதங்கள் சூக்ஷ்ம நிலையிலிருந்து ஸ்தூல நிலைக்கு

வந்ததை **“பஞ்சீகிரதம்”** அல்லது **“பஞ்சீகரணம்”** என்று அழைக்கப்படுகின்றது.

**குறிப்பு:–**

("பஞ்சீகிரதம்" என்பதைப் பற்றி அறிய **“பஞ்சீகரணம்”** – ப்ரக்ருன் – புத்தகத்தை https://paraparam.in/ என்ற இணைய தளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து படித்துப் புரிந்துக் கொள்ளலாம்.)

அதாவது, நம்முடைய இந்த ஸ்தூல உடல், ஸ்தூலமாக இருக்கின்ற பஞ்ச பூதங்களால் செய்யப்பட்டது.

இதை எப்படி புரிந்துக் கொள்ளலாம் என்றால், ஒருவர் ஒரு கட்டிடத்தை கட்டுவதற்கு முன்பு அவரது மனக்கண்ணால் அந்த கட்டிடத்தை எப்படிக் கட்ட வேண்டும் என்பதை கற்பனை செய்து பார்க்கும் நிலைக்கு **“சூக்ஷும நிலை”** என்கின்றோம்.

அதுவே, அவர் கற்பனை செய்து வைத்திருந்த அந்த கட்டிடத்தை அழகான ஒரு வீடாக கட்டி முடித்த நிலையை **“ஸ்தூல நிலை”** என்கின்றோம்.

இதுப் போலவே, இந்த மனித தேகம் (ஸ்தூல உடல்) ஸ்தூல பஞ்ச பூதங்களால் படைக்கப்படுவதற்கு முன்பு, சூக்ஷூம பஞ்சபூதங்களால் கற்பனையாக (சூக்ஷூம உடல்) முதலிலேயே வடிவமைக்கப்பட்டு விடும்.

அதுப்போல, பஞ்ச பூதங்களால் ஆன இந்த உடல்கள் எத்தனையோ வகைப்படுகின்றது, உதாரணமாக, மனித உடல்கள், பறவைகளின் உடல்கள், மிருகங்களின் உடல்கள், என பலவகைப்பட்ட உடல்கள் காணப்படுகின்றன.

இப்படி இந்த ஸ்தூல ஸரீரங்கள் கொசு முதல் மனிதன் வரை எண்ணிக்கையில் அடங்காத பல வகைப்பட்ட ஸ்தூல ஸரீரங்கள் இந்த பூமியில் உள்ளன. இதில் சில குறைபாடுகளுடன் கூடிய ஊனமுற்ற உடல்களாகவும் காணப்படுகின்றன.

இதற்கு காரணம் என்ன? என்று பார்த்தோமானால், சாஸ்திரம் இதற்கும் மிகத் தெளிவான விளக்கத்தைக் கொடுக்கின்றது.

ஒவ்வொரு ஜீவராசிகளும் அதனதன் கர்மவினை களுக்கு ஏற்ப உடல் கிடைத்து, அந்த உடலின் வாயிலாக அதனதன் வினைக்கு ஏற்ப சுக, துக்கங்கள், குளிர், வெப்பம், மற்றும் மான, அவமானங்களை அனுபவிக்கின்றது.

கர்மம் என்பது அவரவர் செய்த தர்ம, அதர்ம காரியங்களின் விளைவு என்பதாகும்.

உதாரணமாக, ஒருவர் நன்றாக செயல் செய்து, தன்னுடைய சுய உழைப்பினால் பொருள் ஈட்டி வீட்டைக் கட்டுகின்றார் என்றால், அது அவரது சுய சம்பாத்தியத்தினால் உண்டான வீடு என்கின்றோம்.

அதுப்போல, இந்த ஸ்தூல உடலுக்குள் வசிக்கின்ற ஜீவன் அல்லது மனம் எந்த உடலுடன் பிறந்திருக்கின்றதோ? அதில், நல்ல ஆரோக்கியமான உடல், அல்லது ஊனமுற்ற உடலாக இருக்கலாம். அது மனித உடல் அல்லது மிருக உடலாக இருக்கலாம். அது எதுவாக இருந்தாலும், அந்த ஜீவன் தன்னுடைய சுய சம்பாதியத்தினால் வாங்கிய வீடு இந்த உடல் என்பதை சாஸ்திரம் நமக்கு அறிவுறுத்துகின்றது.

இந்த இடத்தில் ஒரு சித்தர் பாடலை நினைவு கூறலாம்.

"நந்தவனத்தில் ஓர் ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி - மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி"

நல்ல கர்மத்தினுடைய பலனாக மட்டுமே ஒரு ஜீவனுக்கு, மனித உடல் கிடைக்கும் என்பதுவும், அந்த கர்ம பலன்கள் பாவ, புண்ணியங்கள் ஒரளவுக்கு சமமாக இருந்தால் அந்த ஜீவனுக்கு மனித ஸரீரமும், பாதிக்குமேல் பாவமும், குறைவான புண்ணியமும் இருந்தால், அந்த ஜீவனுக்கு மிருக ஸரீரமும், பாதிக்குமேல் புண்ணியமும், குறைவான பாவமும் இருந்தால், அந்த ஜீவனுக்கு தேவர்கள் போன்ற ஜென்மமும் கிடைக்கும் என்று சாஸ்திரம் கூறுகின்றது.

**குறிப்பு :–**

(இந்த கர்மப்பலன்களைப் பற்றி அறிய **"செயல் இரகசியம்"** – ப்ரக்ஞன் எழுதிய ஆன்மவியல் புத்தகத்தை https://paraparam.in/ என்ற இணையதளம் மூலம் இலவசமாக பதிவிறக்கம் செய்து படித்துப் புரிந்துக் கொள்ளலாம்.)

**"தீதும் நன்றும் பிறர் தர வாரா"** என்பதிலிருந்து மற்றவர்கள்மீது குறைக் கூறுவதை விட்டு விட்டு, அனைத்திற்கும் நாம் மட்டுமே பொறுப்பு என்பதை அறிவுறுத்தவே, இந்த கர்ம தத்துவத்தை சாஸ்திரம் வெளிப் படுத்துகின்றது.

ஆகவே, **“அவரவர் வினை வழி அவரவர் அனுபவம்”** என்பதை அறிந்து, அவரவர்கள் செய்யும் செயலை ஒழுங்கு படுத்திக் கொள்ளவே சாஸ்திரம் **‘கர்மா’** (செயல்) என்பதைப் பற்றி அதிகம் பேசுகின்றது.

பஞ்ச பூதங்களின் வாயிலாக உடல் வடிவமைக்கப் பட்டாலும், வித, விதமான உடலைப் பெறுவதற்கு அந்த, அந்த ஜீவன் தான் செய்த செயல்களினால் உண்டான பலனாக தனக்கு இந்த, இந்த உடல் கிடைத்துள்ளது என்பதை அறிய ஒரே உடல் இந்த மனித ஸரீரம் மட்டுமே ஆகும்.

காரணம், எந்த உடல் எடுத்த ஜீவராசிகளினாலும் தன்னைப் பற்றி அறிய முடியாத நிலையில், மனித உடலுக்கு மட்டுமே சாத்தியமாக **“பகுத்தறிவு”** இருப்பதால், மனிதன் மட்டுமே தன்னிடம் உள்ள ஆறாவது அறிவின் மூலமாக சாஸ்திரத்தை அறிந்து, அதன் வாயிலாக தன்னுடைய அறியாமையை நீக்கிக் கொள்ள முடியும்.

பகுத்தறிவு என்பது கடவுள் இல்லை என்றோ, அல்லது கடவுள் இருக்கின்றார் என்றோ மனிதர்கள் சண்டையிட்டுக் கொள்வதற்காக கொடுக்கப்படவில்லை.

கடவுள் இல்லை என்று கூற எந்த நிரூபணமும் தேவையில்லை. ஆனால் கடவுள் இருக்கின்றார் என்று கூறவதற்கு நிருபிக்கப்பட்ட உண்மை (ஆதாரம்) தேவை.

அகவே, மனிதன் ஒருவனால் மட்டுமே, தன்னிடம் உள்ள சுய அறிவைப் பயன்படுத்தி இருப்பதுப்போல காணப்படுகின்ற இந்த உலகம் உண்மையில் இல்லை என்பதையும், இல்லாததுப்போல காணப்படுகின்ற கடவுள் உண்மையில் இருக்கின்றார் என்பதையும் அறியும் அறிவே உண்மையான அறிவு. எனப்படும். அதாவது, **“இருப்பதெல்லாம் இறைவனே”** என்று அறியும் அறிவே **‘பகுத்தறிவு’** ஆகும்.

இந்த ஸ்தூல ஸரீரம் (உடல்) எத்தகைய தன்மை கொண்டது, இதனுடைய நிலையாமை அல்லது நிலைத்தன்மை என்ன?, என்பதை ஆராய்ந்து அறிய முற்பட்டால், இந்த ஸரீரத்தில் ஏற்படும் ஆறு விதமான மாற்றத்தினை மனிதர்களாகிய நாம் அனைவரும் கண்கூடாக கண்டதே ஆகும்.

அவைகள்,

| | | |
|---|---|---|
| **அஸ்தி** | – | வயிற்றில் இருத்தல் |
| **ஜாயதே** | – | பிறத்தல் |

| | | |
|---|---|---|
| **வர்த்ததே** | – | வளர்தல் |
| **விபரிணமதே** | – | மாற்றமடைதல் |
| **அபக்ஷீயதே** | – | தேய்தல் |
| **வினஷ்யதி** | – | அழிதல் |

என்ற ஆறு மாற்றங்களுக்கு உட்பட்டது.

அதாவது, இந்த ஸ்தூல ஸரீரம் முதலில் கர்ப வாஸம் (தாயின் வயிற்றில் இருக்கின்ற நிலை), இரண்டாவது பிறத்தல், மூன்றாவது வளர்தல், நான்காவதாக வளர்ச்சி நின்று, தோற்றத்தில் மாறுதல் (வயதான தோற்றம்) உண்டாதல், ஐந்தாவது வயதான காரணத்தினால் உறுப்புகள் தேய்ந்துக் கொண்டு வருதல், ஆறாவது மரணம் என்ற நிலையில் இந்த ஆறு மாற்றங்களுக்கு உட்பட்டதுதான் இந்த **“ஸ்தூல சரீரம்”** ஆகும்.

எந்தவிதமான காயகல்ப மருந்துகளோ, வாசியோகப் பயிற்சிகளோ, மற்றும் உடற் பயிற்சிகளோ எதுவும் இந்த ஸ்தூல உடலைக் காப்பாற்றாது. என்றாவது ஒரு நாள் இது முதுமை அடைந்து மரணத்தை தழுவியாக வேண்டும்.

இது நிரூபிக்கப்பட்ட உண்மை. எப்படியெனில், இதுவரை மேற்கண்ட காயகல்ப மருந்துகளையோ,

வாசியோகப் பயிற்சியையோ, பிராணாயாமம் மற்றும் யோகா போன்ற பயிற்சிகளையோ அல்லது உடற்பயிற்சிகளையோ எதை செய்து வந்தவர்களும், இன்று நம்மிடையே ஸ்தூல தேகத்தில் (உடலுடன்) உயிருடன் இல்லை என்பதே இயற்கையான சான்றாகும்.

அதாவது, ஸ்தூல ஸரீரம் என்பது ஸ்துல பஞ்ச பூதங்களால் உருவாக்கப்பட்டு, அவரவர்களின் கர்ம வினைக்கு ஏற்ப உடல் கிடைக்கப் பெற்று, சுக, துக்கங்கள் போன்ற போகங்களை அனுபவித்து, ஆறு விதமான மாற்றத்திற்கு உட்பட்டு முடிவில் அழிந்து போகக் கூடியது இந்த **"ஸ்தூல சரீரம்"** ஆகும்.

## சூக்ஷ்ம சரீரம்

சூக்ஷ்ம சரீரம் என்றால் என்ன?

அபஞ்சீக்ருத பஞ்சமஹா பூதை: க்ருதம் ஸத் கர்ம ஜன்யம்
சுகது: காதி போக ஸாதனம் பஞ்ச ஞானேந்திரியாணி பஞ்ச
கர்மேந்திரியாணி பஞ்ச ப்ராணதய: மனஸ் சைகம் புத்திஸ் சைகா
ஏவம் ஸப்த தஸகலாபி: சஹ யத் திஷ்டதி தத் சூக்ஷ்ம ஸரீரம் |

ஒவ்வொரு ஜீவனுக்கும், ஸ்தூல ஸரீரம் இருப்பது போன்றே, சூக்ஷ்ம சரீரமும் இருக்கின்றது. சூக்ஷ்ம சரீரம்

என்பது மனம். இது சுகம், துக்கம் போன்ற அனுபவத்திற்கான சாதனம் அல்லது கருவி.

அதாவது சுக, துக்கங்களை உடம்பின் வாயிலாக நமது மனம்தான் அனுபவிக்கின்றது.

உடம்பு சுக, துக்கங்களை அனுபவிப்பதில்லை. இந்த சூக்ஷ்ம சரீரம் அனுபவிக்கின்றது, இது பஞ்ச பூதங்களால் ஆனது.

சூக்ஷ்ம சரீரம் என்பது இந்து மதத்தின் மூன்று உடல் தத்துவத்தில் உள்ள கண்களுக்குப் புலப்படாத மிகவும் நுட்பமான உடலாகும். இந்த உடல் மனிதன் எடுக்கும் பரு உடலுக்கு ஆதாரமான மனிதனின் மனம் என்பதாகப் பார்க்கப்படுகின்றது. மற்றும் மனிதன் இறந்த பிறகும், அதாவது மனிதனின் ஸ்தூல பஞ்சபூதங்களின் மூலம் வெளிப்பட்ட பூத உடல் இறந்த பிறகும், இந்த சூக்கும உடல் அழியாமல், அதன் மூலம்தான் மறுபிறவி உண்டாகின்றது.

இந்த ஸ்தூல சரீரம் புழு, பூச்சி, பறவை, மிருகம், மற்றும் மனிதனுக்கு, மனிதன் மாறுபடுகின்றதோ? அதுப்போலவே, சூக்ஷ்ம சரீரமும் இவ்வாறு மாற்றத்துடன் இருக்கும்.

அதற்குக் காரணம், அந்த அந்த ஜீவன்கள் செய்த கர்ம பலன்களின் விளைவு என்பதை ஏற்கனவே அறிந்தோம்.

நம்முடைய கர்ம வினையின்படி சூக்ஷ்ம சரீரம் செயல்படும். அதாவது, மனமானது ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு விதமாக, அவரவர்களது கர்ம வினைக்கு ஏற்ப மாறுபடுகின்றது.

ஒருவன் உயிருடன் இருக்கும் காலத்தில், சுக, துக்கங்களை அனுபவித்துக் கொண்டு, குடும்ப நலனை கவனித்ததுக் கொண்டு இருந்தாலும், அவன் உடலை வழி நடத்துகின்றது அவனது மனமே ஆகும்.

இந்த மனமே, எல்லா காரியங்களையும் செய்ய வைக்கின்றது, மேலும், அந்த பரு உடலாகிய ஸ்தூல உடலைக் கொண்டு அனைத்தையும் அனுபவிக்கின்றது.

இந்த உடலையே "**நான்**" என்று கர்வத்துடன் கருதிக் கொண்டிருப்பவன் கூட, தன்னுடைய மரண காலத்தில், அந்த உடலின் நிலையாமையை நன்கு உணர்வான்.

வாழும்பொழுது, இந்த உண்மையை உள்வாங்க மறுத்துவன்கூட, தன்னுடைய மரண காலத்தில், இந்த உடல்

வேறு என்றும், இதுவரை, இந்த உடலை வழி நடத்திக் கொண்டிருந்த மனம் (ஜீவன்) வேறு என்றும் புரிந்துக் கொள்வான்.

**ஸ்தூல சரீரம்** – (இருப்பிடம்) ஸ்தூல பஞ்சபூதங்கள் (பஞ்சீகரணம்).

எலும்பு, மஜ்ஜை, நரம்பு, சதை, இரத்தம், தோல் ஆகியனவற்றால் ஆன நம் பௌ தீக உடல் இந்த ஸ்தூல சரீரம்

**சூக்ஷ்ம சரீரம்** – (அனுபவம்) சூக்ஷ்ம பஞ்சபூதங்கள் (அபஞ்சீகரணம்). அவைகள் முறையே,

ஐந்து ஞானேந்திரியங்கள்
(காது, தோல், கண், நாக்கு, மூக்கு)

ஐந்து கர்மேந்திரியங்கள்
(வாய், கைகள், கால்கள், எருவாய், கருவாய்)

ஐந்து பிராணன்கள்
(ப்ராண வாயு, அபான வாயு, வ்யான வாயு, உதான வாயு, ஸமான வாயு)

மனம் மற்றும் புத்தி என 17 அவையவங்களாகிய தத்துவங்களால் ஆனது சூக்ஷ்ம சரீரம். மேலும், இந்த 17 வாசனைகளையும் கொண்ட, பல்வேறு எண்ணங்களின் ஒட்டுமொத்த தொகுப்புதான் "**மனம்**" என்கிறோம்.

சூக்ஷ்ம சரீரம் வாஸனா மயமானது. நம்முடைய சாதாரண கண்களால் இந்த சரீரத்தைப் பார்க்க முடியாது. ஆனால், இருப்பதை உணர முடியும்.

எண்ணங்களும் சூட்சுமமாகவே இருக்கின்றன. எண்ணங்கள் ஐம்புலன்களால் அறியப்படுவதில்லை. எண்ணங்களை அறிய ஐம்புலன்கள் பயன்படாது. மற்றவர்கள்

ஒருவர் உங்களிடம் இணக்கமாக இருக்கிறார்களா? அல்லது இணக்கமாக இல்லையா? என்று உணரத்தான் முடியும்.

ஆனால், கண்களால் அந்த உணர்வைப் பார்க்க முடியாது. கண்களுக்கு எண்ணங்களைப் பார்க்கும் சக்தி கிடையாது.

உங்கள் எண்ணங்களை நீங்கள் அறிகிறீர்கள். ஆனால், உங்கள் கண்களால், உங்கள் எண்ணங்களையும், ஏன்? மற்றவர்கள் எண்ணங்களைகூட அறிய முடியாது.

அப்படியானால், எதைக்கொண்டு, எங்கு உங்கள் எண்ணங்களைப் பார்க்கிறீர்கள்?

அது அவரவர்களிடம் உள்ள பேருணர்வு அல்லது சைதன்யத்தின் உதவியால் மட்டுமே அறிகின்றோம்.

அந்த சைதன்யம் அல்லது ஆன்மா இருப்பதை அறியக்கூடிய அரிதானக் கருவிகள் எது என்றால், அது மனித உடலும், மனமும் மட்டுமே ஆகும்.

அதனால்தான், அந்த ஆன்மா எப்படிப்பட்டது என்று அறிய ஆவல் வரவேண்டும். அவனே மனிதன். அந்த ஆவல் வரவில்லை என்றால், அவன் மிருகம்.

அந்த வகையிலே, எவ்வளவு காலம் சூட்சும சரீரம் மற்றும் ஸ்தூல சரீரத்தினுள் அந்த ஆன்மா இருக்கிறதோ? அவ்வளவு காலம் இந்த இரண்டும் இயங்குகிறது.

அதிலே, இந்த ஸ்தூல சரீரம் இறந்து போனால் அங்கு சூட்சும சரீரம் தங்காது. அத்துடன், அந்த 17 தத்துவங்களைக் கொண்ட சூக்கும சரீரம் நீங்கிய பிறகு, இந்த ஸ்தூல சரீரம் எந்தச் செயலையும் செய்ய முடியாது. ஆகவே, இறப்பு என்பது ஸ்தூல சரீரத்திலிருந்து சூட்சும சரீரம் நீங்குவதேயாகும். அதற்குபிறகு, அந்த சரீரத்திற்கு எந்த உண்ர்ச்சியும் இருக்காது.

அதாவது, அழியக்கூடிய இந்த உடலைக் காட்டிலும், உணர்ச்சி தனியாக இருக்கிறது. இதற்குக் காரணமென்ன? என்றால், அதுதான் சூக்ஷ்ம சரீரம்.

அதாவது, ஸ்தூல சரீரம் என்பது, பூதவுடலைக் குறிக்கும். **‘ஸ்தூல’** என்றால் அறியக் கூடியது என்று அர்த்தம். **‘சரீரம்’** என்றால் தொடர்ந்து அழிந்துகொண்டிருப்பது என்று அர்த்தம்.

அத்தகைய இந்த பூதவுடல் மறையும்போது, மரணம் ஏற்படுகிறது. ஆக, பூமியில் விதைக்கப்படும் விதைப்போல, இந்தப் பூத உடலின் விதை, தாயின் கருவறையிலேயே விதைக்கப்படுகிறது.

எப்படிச் சிறிய விதையில் ஒரு பெரிய ஆலமரம் ஒடுங்கி இருக்கிறதோ? அதுப்போல, அப்பாவின் விந்துவில் ஒருவனின் அனைத்து விவரங்களும் அடங்கியிருக்கின்றன.

எப்படி? ஒரு இளஞ்செடி வளர்ந்து மரமாகிப் பூத்துப் பழங்களைத் தருகிறது. அதுப்போல, இந்த மனித உடலும், மரமும் இறுதியில் முடிவை அடைகின்றன.

அதாவது, அவைகள் இயற்கை எய்துகின்றன.

மரத்துக்கும் மனிதனுக்கும் உள்ள வேறுபாடு என்னவெனில், மரத்துக்கு **'தான்'** என்ற உணர்வு கிடையாது. மரத்திற்கு **'தான்'** என்ற உணர்வு இல்லாத காரணத்தால், மரம் எந்தப் போராட்டத்துக்கும் உட்படுவதில்லை.

ஆனால், மனிதனிடம் தோன்றும் அந்த **'தான்'** என்ற உணர்வு அவனை மற்றவைகளில் இருந்து பிரித்துக்காட்டி, அவனை பல்வேறு போராட்டங்களுக்கு உட்படுத்துகின்றது.

ஆகவே, இந்தப் பூதஉடலில் ஏற்படும் மாற்றங்கள் ஆறு வகையானவைகள் என்று ஏற்கனவே பார்த்தோம். அதாவது, வயிற்றில் இருத்தல், பிறத்தல், வளர்தல், மாற்றமடைதல், தேய்தல், இறுதியாக அழிதல் என்பதற்கு ஏற்ப, இந்த பரு உடல் அழிந்துவிட்டால், இந்த சூக்ஷ்ம உடல் அதில் இருக்க முடியாமல் வெளியேறி விடுகின்றது.

நம் ஒவ்வொருவரின் தனித்த சூக்ஷ்ம உடல் அனேக ஆசா, பாசங்களை உள்ளடக்கியது என்பதினால், என்றுமே அழியாமல் இருக்கின்றது. அதனால்தான், அது அவைகளை மீண்டும் அனுபவிக்க விரும்பி மறுபிறவி எடுக்கின்றது.

ஆத்மா என்ற ஒன்றை அறிந்துக்கொள்ள, இத்தனை விசயங்களையும் அறிந்துக் கொண்டால்தான், ஆத்மா எப்படிப்பட்ட தன்மை கொண்டது என்பதை புரிய வைக்க சாஸ்திரம் இவ்வளவு விளக்கத்துடன் போதிக்கின்றது.

# இந்திரியங்களும், அதிர்ஷ்டான தேவதைகளும்

அடுத்து ஒவ்வொரு இந்திரியங்களுக்கும், அதிர்ஷ்டான தேவதைகளைப் பற்றி சாஸ்திரம் குறிப்பிடுகின்றது.

ஸ்ரோத்ரம் த்வக் சக்ஷு: ரஸணா க்ராணம்
இதி பஞ்ச ஞானேந்த்ரியாணி |
ஸ்ரோத்ரஸ்ய திக்தேவதா | த்வசோ வாயு: |
சக்ஷுஷ: சூர்ய: ரஸணாய வருண: |
க்ராணஸ்ய அஸ்வினௌ |
இதி ஞானேந்திரிய தேவதா: |

ஸ்ரோத்ரஸ்ய விஷய: ஸப்தக்ரஹணம் |
த்வசோ விஷய: ஸ்பர்ஸக்ரஹணம் |
சக்ஷுஷோ விஷய: ரூபக்ரஹணம் |
ரஸனாயா விஷய: ரஸக்ரஹணம் |
க்ராணஸ்ய விஷய: கந்தக்ரஹணம் |

ஞானத்தையடைய ஐந்து கருவிகள் தேவைப்படுகிறது. அவைகள், கண், காது, மூக்கு, நாக்கு, தோல் (தொடு உணர்ச்சி சக்தி) என்பனவாகும்.

இதில் கண் என்பது பார்வை அதன் காரியம். அடுத்து காது என்பது கேட்டல் அதன் காரியம். அடுத்து, மூக்கு என்னும் உறுப்புக்கு நுகர்தல் அதன் காரியம். அடுத்து, நாக்கு என்னும் உறுப்புக்கு சுவைத்தல் என்பது அதன் காரியம். அடுத்து, தோல் என்பது தொடு உணர்ச்சியின் வாயிலாக உணர்தல் என்பது அதன் காரியம்.

இந்த கருவிகளுக்கு ஓரோர் ஆதார தேவதைகளை வேதாந்தம் வரிசைப்படுத்துகின்றது.

சூரியன் புறக் கண்களால் நம்மால் காணத்தக்க பிரம்மாண்டமான நெருப்பு பந்தாக உள்ளது. ஆகவே, கண்ணிற்கு சூரியன் ஆதார தேவதையாக அறிவிக்கப் படுகின்றது.

செவியாகிய காது, எல்லா திசைகளினின்றும் சப்தத்தை உள்வாங்குவதாலும், செவிப்புலனுக்கு ஆதாரமான ஆகாசம் திசைகளால் அறியப்படுதலாலும், கேட்கும் செவிக்கு திசைகள் ஆதார தேவதைகளாக அறிவிக்கப்படுகின்றன.

மூக்கு, நிலத்தின், தாதுக்களின் அம்சமான கந்தத்தை உள்வாங்குதலால், அஸ்வினி தேவர்கள் ஆதார தேவதை களாக அறிவிக்கப்பட்டனர்.

(தாதுக்களின் மருத்துவ குணம் அறிந்து, பிரயோகிக்கும் தேவலோக மருத்துவர்களே அஸ்வினி தேவர்கள்).

நாக்கு நீரின் அம்சமான ரஸத்தை உள்வாங்குவதால், நாக்குக்கு வருணன் ஆதார தேவதையாக உள்ளது. (வருணன் மழைக் கடவுளாக, நீருக்கு ஆதாரமாக அறியப் படுகின்றார்).

தோலாகிய த்வக், காற்றின் குணமாகிய ஸ்பரிசத்தை உள்வாங்குவதால், காற்றை புருஷ வடிவில் உருவகப்படுத்தி, தோலுக்கு வாயு ஆதார தேவதையாக அறிவிக்கப்படுகின்றது.

அடுத்து, கர்மேந்திரியங்களுக்கு தேவதைகளையும், அதன் தொழில்களையும் அறிமுகப்படுத்துகின்றது.

வாக்பாணிபாதபாயுபஸ்தானீ தி | பஞ்சகர்மேந்த்ரியாணி |
வாசோ தேவதா வஹ்னி: | ஹஸ்தயோரிந்த்ர: |
பாதயோர் விஷ்ணு: | பாயோர்ம்ருத்யு: | உபஸ்தஸ்ய பிரஜாபதி: |
இதி கர்மேந்த்ரிய தேவதா: |

வாசோ விஷய: பாஷணம் | பாண்யோர் விஷய: வஸ்துக்ரஹணம் |
பாதயோர் விஷய: கமனம் | பாயோர் விஷய: மலத்யாக: |
உபஸ்தஸ்ய விஷய: ஆனந்த இதி.

**'வாக்கு'** அல்லது வாய்க்கு அக்னியும், கைகளுக்கு இந்திரனும், கால்களுக்கு விஷ்ணுவும், எருவாய்க்கு யமனும், கருவாய்க்கு, பிரம்மனும் ஆதார தேவதைகள் என்கின்றது வேதாந்தம்.

அடுத்து, கர்மேந்திரியங்களான வாக்கு, கால்கள், கைகள், எருவாய், கருவாய் ஆகியவைகள் முறையே பேசுதல் (வசனம்), நடத்தல் (கமனம்), கையாளுதல் (தானம்), கழித்தல் (விசர்க்கம்), மகிழ்தல் (ஆனந்தம்) ஆகியன அவற்றின் தொழில்கள் என்பது பொருள்.

இதுப்போலவே, தமிழ் வேதாந்த நூலான சிவஞான சித்தியார் – சுபக்கம் என்னும் நூலில்,

'வாக்கோடு பாதம் பாணி பாயுவோடு உபத்தம் ஐந்தும் நீக்கினர்
முன்னே கன்மேந்திரியங்கள் என நினைத்தே ஆக்கிய வசன
கமன தானமும் விசர்க்க ஆனந்தம் ஊக்கமார் ஐந்தும் ஐந்தின்
தொழிலென ஓதினாரே' என்று அருணந்தி சிவாச்சாரியார்
இதே கருத்தை உரைக்கின்றார்.

அடுத்து, பஞ்சபூதங்களின், எல்லா ஆதார குணங்களின், ராஜஸ அம்சங்களின் தொகுப்பாகிய சமஷ்டி தத்துவத்தில் இருந்து தோன்றினவையே பிராணன்கள்.

இவைகள் ஐந்து வகைப்படுகின்றன.

அவைகள் பிராணன், அபானன், உதானன், சமானன், வியானன் என்பனவாகும்.

இயக்கங்கள் சார்ந்து, பிராணனாகிய வாயு, பத்து விதமாக பகுக்கப்படுகின்றது. வாயுவின் மேல் நோக்கிய இயக்கம் **பிராணன்** என்றும், அதாவது உள்ளே செல்லும் போது பிராணன் என்றும், கீழ் நோக்கிய இயக்கம் **அபானன்** என்றும், அதாவது, வெளியே வருகின்ற காற்றிற்கு அபானன் என்றும் அறிய வேண்டும். அத்துடன், உடலின் எல்லா பக்கங்களிலும் இயங்கும் தன்மை **வியானன்** என்றும் அழைக்கப்படுகின்றன.

மரண வேளையில் உயிர் வெளியேற உதவும் வாயு **உதானன்** ஆகும். உணவை ஜீரணிக்கவும், ரஸமாக மாற்றவும் உதவும் வாயு **சமானன்** ஆகும்.

வாந்தி, ஏப்பம் போன்ற இயக்கங்களுக்கான வாயு **நாகன்** ஆகும். கண் இமைகளை இயக்கும் வாயு **கூர்மன்** ஆகும். பசி மற்றும் தாகம் **க்ருகலன்** என்ற வாயுவாலும், கொட்டாவி **தேவதத்தன்** என்ற வாயுவாலும் நிகழ்கின்றன.

நம் உடலின் ஆரோக்யம், **தனஞ்ஜயன்** என்ற வாயுவால் சீராகப் பராமரிக்கப்படுகின்றது. எனினும், எளிமை கருதி, இவைகள் ஐந்தாகவும் பகுக்கப்பட்டதையே கண்டோம்.

அதாவது, தங்கம் ஒன்றே, அதுவே வளையலாகவும், காதணியாகவும், சிலம்பாகவும், இடையணியாகவும், தான் எடுத்த உருவத்திற்கேற்ப அழைக்கப்படுகின்றது.

நீரானது, பொழியும்போது, மழையாகவும், பொங்கிப் பிரவகிக்கும் போது, நதியாகவும், தேங்குவதால் குளமாகவும், விழுந்தால் அருவியாகவும் அழைக்கப்படுகின்றது.

அவ்வாறே, காற்றாகிய பிராணன் என்பதும் ஒன்றே, தன் செயல் வேறுபாடுகளாலும், வடிவின் வேறுபாடுகளாலும், பிராணன், அபானன், வியானன், உதானன் மற்றும் சமானன் என்றவாறெல்லாம் அழைக்கப்படுகின்றது.

நாம் அடுத்துக் காண இருக்கும் இந்த எண்ணங்களின் தொகுப்பை மனம் என்றும், புத்தி என்றும், சித்தம் என்றும், அஹங்காரம் என்றும் நான்கு கூறுகளாய் வேதாந்தம் பகுக்கும் நம் அகக் கருவியை மனம் என்ற ஒரு கருவியாகவே காண்கின்றது.

இதில் எண்ணங்களின் தொகுப்பு மனம் என்றும், மனம் சிந்திக்கின்ற சங்கல்பங்கள், விகல்பங்கள் முதலியவைகளில் நிச்சயமான முடிவு எடுப்பது புத்தி என்றும், மனதில் உள்ள பதிவுகளும், சம்ஸ்காரங்களும் சித்தம் என்றும், ஒரு எண்ணம் ஸ்தூல, சூக்ஷ்ம, காரண சரீரங்களை **"நான்"** என்று நினைப்பதை அஹங்காரம் என்றும் அழைக்கப்படுகின்றது.

## காரண சரீரம்

காரண சரீரம் கிம்?

காரண சரீரம் என்றால் என்ன?

ஸ்தூல மற்றும் சூக்ஷ்ம சரீரங்கள் இரண்டுக்கும் எது காரணமாக இருக்கின்றதோ? அதுவே **காரண சரீரம்** ஆகும்.

அனிர்வாச்யானாத்ய வித்யா ரூபம் ஸரீர த்வயஸ்ய காரணமாத்ரம்
ஸத் ஸ்வரூபாஜ் ஞானம் நிர்விகல்பக ரூபம் யதஸ்தி தத் காரண
ஸரீரம் |

பஞ்சபூதங்களான இவைகளை ஸ்தூலமாக நாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். இந்த ஸ்தூல பஞ்ச பூதங்கள் மூலமாக நமக்கு உடல் கிடைத்து விட்டது.

இந்த ஸ்தூல பஞ்ச பூதங்கள் சூக்ஷ்ம பஞ்சபூதங்களில் இருந்து வந்தது. சூக்ஷ்ம பஞ்சபூதங்களின் மூலமாக நமக்கு மனம் கிடைத்து விட்டது என்பதை நாம் அறிந்தோம்.

அதுப்போலவே, சூக்ஷ்ம பஞ்சபூதங்கள் எதிலிருந்து வந்தது? என்ற சந்தேகம் வரும் பொழுது, சாஸ்திரம் இது காரணசரீரத்தில் இருந்து வந்தது என்று கூறினாலும், அந்த காரணசரீரம் எதிலிருந்து வந்தது? என்ற கேள்வி உருவாகின்றது.

இதற்கு சாஸ்திரம் அதனை **“அநிர்வசனீயம்”** என அழைகின்றது. அதாவது அதை விளக்க முடியாது, அது அனாதி என்கின்றது. அதனை நாம் விளங்கிக் கொள்ளவும் முடியாது என்று கூறுகின்றது.

இவ்வாறு கூறுவதினால், தர்க்க வாதிகள் இதை ஏற்க முடியாது என்றும், இதற்கான காரணத்தை சரியாகக் கூறினால் மட்டுமே, அதை நாம் ஏற்போம் என்றும் வாதிட்டால், சாஸ்திரம் அப்படி கேள்வி கேட்டு வாதிடுபவர்களுக்கு கீழ்கண்ட விளக்கத்தைக் கொடுக்கின்றது.

அதாவது, ஒரு ஆலமரத்தின் விதையினுள், அதன் இலைகள், கிளைகள், பூக்கள், மற்றும் காய்கள் என

அனைத்தும் நிர்விகல்பமாக வேற்றுமையின்றி சூக்ஷ்மமாக மறைந்து இருக்கின்றதே, அதன் இருப்புத்தன்மையை விதையினுள் காட்ட முடியுமா?

அதுவே, அந்த ஆலமரத்தின் விதை விதைக்கப்பட்டு, அது வளர்ந்து மரமான பிறகுதான் இவைகளை ஸ்தூலமாக பார்க்க முடிகின்றது அல்லவா?

அதுப்போல, இந்த ஸ்தூல, சூக்ஷ்ம சரீரங்கள் தோன்றுவதற்கு முன்பு இருக்கின்ற அதன் இருப்புத் தன்மை ஒரு பெரிய ஆலமரமே கடுகு அளவு உள்ள அதன் விதையில் ஒளிந்துக் கொண்டு இருக்கும்போது, இந்த ஸ்தூல உடலும், சூக்ஷ்ம உடலும், நிர்விகல்பமாக வேற்றுமையின்றி சூக்ஷ்மமாக, காரண சரீரத்தில் மறைந்து இருப்பதால், இந்த **காரணசரீரம்** கால தேசத்திற்கு அப்பாற்பட்டது என்கின்றது.

பொதுவாக, நாம் உறங்கும்போது, உடலுக்கும், மனதுக்கும் வேலை இல்லாத நிலையில், நாம் சார்ந்திருப்பது, நம்மை சம்பந்தப்படுத்திக் கொள்வது, அல்லது தொடர்பு படுத்திக் கொள்வது, என அனைத்தும் காரண சரீரத்துடனேயே ஆகும்.

இதுவே, நம் **அறியாமைகளின்** மொத்த தொகுப்பு.

அதாவது, பரு உடலாகிய ஸ்தூல சரீரத்தால் படைக்கப்படும், அனுபவிக்கப்படும் எந்த விஷயத்துடனும், நம்மை நாம் தவறாக **“நான்”** என்று சம்பந்தப்படுத்திக் கொள்வதில்லை.

அதாவது, நம்முடைய விழிப்பு நிலையில், நனவுலகின் நாம் எந்தப் புறப்பொருளோடும், நிகழ்வோடும் சம்பந்தப் படுவதில்லை.

அதுப்போன்றே, சூக்ஷம சரீரத்தால், உறங்கும்போது, கனவு நிலையில் படைக்கப்படும், அனுபவிக்கப்படும் எந்த விஷயத்துடனும், நம்மை நாம் **“நான்”** என்று சம்பந்தப்படுத்திக் கொள்வதில்லை. அதாவது, கனவுலகின் எந்தப் பொருளோடும், நிகழ்வோடும் நாம் சம்பந்தப்படுவதில்லை. ஆக, அங்கும் '**நான்**' தோன்றுவதில்லை.

அப்படியானால், இந்த '**நான்**' எங்கிருந்து அல்லது எதிலிருந்து தோன்றுகிறது?

உண்மையில், இந்த நான் என்ற தன்னுணர்வு அந்த தூய அறிவாகிய ஆன்மாவிற்கு சொந்தமானது. அது மட்டுமே தன்னை, எப்போதும், எல்லாக் காலங்களிலும் **“நான்”, “நான்”** என்று ஸ்புரணம் பண்ணிக் கொண்டே இருக்கும் தன்மை

கொண்டது. ஆனால், அந்நிலை நம்முடைய எதார்த்தம் என்பதினால், அதில் நாம் நம்மைப் பற்றிய அனுபவத்தை எதிர்ப்பார்க்க முடியாது.

அதாவது, **"நான் இருக்கின்றேன்"** என்று என்னை நான் எப்போதும் கூறிக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் இருக்காது.

பொதுவாக, எண்ணங்களினால் உண்டாகின்ற மனோ விகாரங்கள் காலம் மற்றும் இடத்தை ஆதாரமாகக் கொண்டே உண்டாகின்றது. பொதுவாக, உறக்கத்தில், நாம் **காலம், இடம்** ஆகியனவற்றை உணராமலேயே இருக்கின்றோம்.

காரணசரீரம், இடம், காலம் ஆகியவைகளை அறியாத நிலையில் (அறியாமையில்) நம்மோடு சம்பந்தப்படுகின்றது. அதனால், காரணசரீரம் மாறுதல் அடையாததாக உள்ளது.

அதுவே, காலமும், தேசமும் அனுபவத்திற்கு உட்பட்டது. எனவே, இரண்டு அனுபவத்திற்கு இடையில் உண்டாகும் இடை வெளியைக் **"காலம்"** என்றும், எவ்வளவு நேரம் இந்த அனுபவம் உண்டானது என்று, அந்த அனுபவத்தை அறியும் இடமாக, மனம் என்ற **தேசமும்** தேவைப்படுகின்றது.

இங்கு காரணசரீரத்தில் மட்டும்தான் நமது மனம் ஒடுங்கியுள்ளதால், அந்த மனதிற்கு எந்த அனுபவமும் தெரியாது. அது விதைப்போல ஒடுங்கியுள்ள நிலையில், **“காரண சரீரம்”** எப்பொழுது தோன்றியது என்பதை விளக்கவே முடியாது.

உதாரணமாக, நம்முடைய ஆழ்ந்த உறக்கத்தில் இவ்வளவு நேரம் நான் தூங்கினேன் என்ற **காலம்** எவ்வாறு தெரிவதில்லையோ? அவ்வாறே, காரண சரீரத்தின் காலமும் தெரிவதில்லை.

ஆழ்ந்த உறக்கத்தில் நமக்கு எப்படி எந்தவித அனுபவங்களும் இல்லையோ? அதுப்போலவே, காரண சரீரத்திற்கும் எந்தவித அனுபவம் இல்லாததனால், நம்முடைய மனம் வெளிப்படுவதில்லை.

நாம் உறங்கும்போது என்ன நிகழ்கின்றது? என்றால், இதுவரை விழிப்பு நிலையில், இந்த ஸ்தூல சரீரத்தினால், நாம் பெற்ற அனுபவங்கள் யாவும் ஒரு விதையாக, அதாவது, வெளிப்படாமல் அவ்யக்தமாக ஒடுங்குகின்றன.

அதுப்போன்றே, கனவு நிலையில் சூக்ஷ்ம சரீரத்தினால், நாம் பெற்ற அனுபவங்கள் யாவும் ஒரு விதைப்போன்று

அவ்யக்தமாக ஒடுங்குகின்றன. இவ்வாறு, மனம் ஒடுங்கும் இடமே **காரண சரீரம்** ஆகும்.

இந்த விழிப்பு, மற்றும் கனவு நிலை அனுபவங்கள் யாவும், ஆழ்ந்த உறக்கநிலையில் தோன்றாமல் இருக்கின்றன.

ஸ்தூல தேகத்துக்கும், சூக்ஷ்ம தேகத்துக்கும் இருக்கும் எல்லா உணர்வுகளும் ஒடுங்கிய நிலை இந்த **ஆழ்ந்த உறக்க நிலை** எனலாம்.

மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் ஆகிய எல்லாமே விதை வடிவில், பீஜமாக ஒடுங்கிய நிலை **ஆழ்ந்த உறக்கம்** ஆகும்.

நாம் உறக்கத்திலிருந்து விழிப்பு நிலைக்கு வரும் போது, நாம் காரண சரீரத்தை விடுத்து, ஸ்தூல சரீரத்தை அபிமானிக்கின்றோம். உடனே, இதுவரை விதையாக ஒடுங்கியிருந்த அனுபவங்கள் யாவும், வளர்ந்து, மனதின் வாயிலாக வெளிப்படுகின்றன.

நாம் உறக்கத்திலிருந்து கனவு நிலையை அடையும் போது, காரண சரீரத்தை விடுத்து, சூக்ஷ்ம சரீரத்தை அபிமானிக்கின்றோம்.

அப்போதும், அதுவரை விதையாக நம்மில் ஒடுங்கி இருந்த அனுபவங்கள் யாவும், கனவாக வெளிப்படுகின்றன.

இதனாலேயே, உறக்கத்திலிருந்து விழித்தவுடன், உறங்குவதற்கு முன் நின்ற நினைவுகள் யாவும், மீண்டும் விட்ட இடத்திலிருந்தே தொடர்கின்றன. பல நேரங்களில், கனவு அனுபவங்கள் விழித்த பின்னும், நினைவில் இருக்கின்றன.

நாம், எப்பொழுதெல்லாம், காரண சரீரத்துடன் சம்பந்தப்பட்டு இருக்கின்றோமோ? அப்பொழுதெல்லாம், எவ்வித அனுபவமும் இன்றி, ஏதும் அறியாத நிலையில் (ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதுப்போல) இருக்கின்றோம்.

இந்த நிலை **அறியாமை நிலை** அல்லது **அவித்யை நிலை** எனப்படும்.

அந்நிலையில், மனம், மற்றும் காலம் இல்லாததினால், அதை அறிந்துக் கொள்ள முடியாது. அங்கு, எந்த அனுபவமும் இல்லை.

ஆகவே, இது **அநாதி** ஆகும்.

காரணசரீரம் ஆத்மாவின்மீது ஏற்றி வைக்கப்பட்டுள்ளது. காரண சரீரம் ஆத்மாவை ஆதாரமாகக் கொண்டது.

இதை எப்படி சாஸ்திரம் கையாளுகின்றது என்று கவனித்தோமானால், கயிற்றின் மீது ஏற்றிப் பார்த்த பாம்பைப் போலக் கையாளுகின்றது.

அதாவது, காரணசரீரம் பாம்பு போல, கயிறு எப்பொழுதும் போல இருப்பதால், அந்த கயிறு ஆத்மா போல உள்ளது. ஆகவே, காரணசரீரம் ஆத்மாவின்மீது ஏற்றிப் பார்க்கப் படுகின்றது என்பதே உண்மை.

காரணத்தின் குணம், காரியத்தில் இருக்க வேண்டும் என்பது நியதி. அதாவது களிமண் என்ற காரணத்தை வைத்து பானைகள் செய்தால், அந்த பானையிலும் களிமண் நிச்சயமாக இருக்கும்.

அதுப்போலவே, தங்கத்தை வைத்து நகைகள் செய்தால், அந்த நகைகளிலும் தங்கம் இருக்கும்.

அதுப்போல, நாம் காணும் இந்த சூக்ஷ்ம சரீரத்தின் காரியத்தை, அதற்கு காரணமான காரண சரீரத்திடம் காணலாம்.

அதுப்போல, நம்முடைய மனதிடம் என்ன என்ன குணங்கள் இருக்கின்றதோ? அது நிச்சயமாக காரண சரீரத்திடமும் இருக்கும்.

எனவே, இந்த ஸ்தூல சரீரத்தில் **சத், ரஜஸ், தமஸ்** என்ற முக்குணங்களும் உள்ளதோ? அதேப்போல, காரண சரீரத்திடமும் இந்த மூன்று குணங்களும் இருக்கும்.

ஆக, அத்மாவைப் பற்றிய அறியாமை எவ்வாறு இந்த ஸ்தூல உடலுக்கு இருக்கின்றதோ? அதுப்போலவே, காரண சரீரத்திற்கும் ஆத்மாவைப் பற்றிய அறியாமை இருக்கின்றது.

இயற்கையாகவே தன்னைப் பற்றிய அறியாமை அனைத்து ஜீவரசிகளிடமும் இருக்கின்றது. இதனால், இந்த ஸ்தூல உடலைக் கொண்டு, மனதின் வாயிலாக நாம் அனுபவிக்கும் சுக, துக்கங்களுக்கு காரணமான பாவ, புண்ணியங்கள் இந்த காரண சரீரத்தில்தான் அடங்கியுள்ளது. அதனால்தன் அதை சீவர்களின் **"சஞ்சித கர்மா"** என்று அழைக்கின்றோம்.

காரணசரீரத்தை அறிந்துக்கொள்ள முடியாத நிலையை **"அநிர்வாச்சியம்"** அல்லது **"அநிர்வசனீயம்"** என்று சாஸ்திரம் கூறுகின்றது.

**"அநிர்வசனீயம்"** என்றால், சரியாக நிருபிக்க முடியாது என்று பொருள்.

எந்த சரீரத்தைப் பற்றி விளக்க முடியாதோ?

எதற்கு ஆரம்பம் இல்லையோ? எதில், அறியாமை குடிகொண்டுள்ளதோ? எது மற்ற இரண்டு சரீரங்களுக்கும் காரணமாக இருக்கிறதோ? எது தனது உண்மைத் தன்மையைப் பற்றி அறியாமலிருக்கிறதோ? எது மாறுபடாத உருவில் இருக்கிறதோ? அதுதான், **காரண சரீரம்.**

ஸ்தூல, சூட்சும சரீரங்களுக்குக் காரணமாக இருப்பது காரணச்சரீரம். காரண சரீரத்தில், ஸ்தூல மற்றும் சூக்ஷ்ம சரீரங்கள் விதைபோல், மாற்றத்துக்கு முந்தைய நிலையில் இருக்கின்றன.

அதாவது, உங்களுடைய தகுதிகள், சாதனைகள், நிறைவேற்றிய செயல்கள் என எல்லாமே, விதை வடிவில் காரண சரீரத்தில் காத்திருக்கின்றன.

காரண சரீரம் விளக்கத்துக்கு அப்பாற்பட்டது என்று ஏன் கூறுகிறோம் என்றால், அது மாற்றங்களற்ற நிலை (நிர்விகல்ப நிலை).

ஸ்தூல, சூக்ஷ்ம நிலைகள் பஞ்சபூதங்களால் ஆனதால், ஸ்தூல சரீரம் கண்களுக்குப் புலப்படுகிறது. சூக்ஷ்ம சரீரம் கண்களுக்குப் புலப்படாமல், சூட்சுமமாக இருக்கிறது.

ஆனால், அறியாமையின் வடிவான காரண சரீரத்துக் கென்று ஓர் உருவம் இல்லை. எனவே, அதைப் பற்றி விளக்கவோ? விவரிக்கவோ முடியாது. காரண சரீரத்தின் மூலமாகத் தன்னை, வெளிப்படுத்திக் கொள்ளும் **'நான்'** என்பதுதான் – **'பிரஞ்ஞை'** எனப்படும்.

ஸ்தூல சரீரத்துடன் கூடிய விழிப்பு நிலையிலும், சூட்சும சரீரத்துடன் இருக்கும் கனவு நிலையிலும், நம்மைப் பற்றி நாம் அறிவதில்லை. நமக்குப் புறப் பொருட்களைப் பற்றிய விஷய ஞானம் இருந்தபோதிலும் **'ஆத்ம ஞானம்'** இல்லை.

ஆழ்ந்த உறக்க நிலையில் காரணச் சரீரத்துடன் கூடி இருக்கையில் நம்மைப் பற்றியும் நம்மைச் சுற்றியுள்ள உலகைப் பற்றியும் நமக்கு எதுவும் தெரிவதில்லை.

**"நடந்தது எதுவும் எனக்குத் தெரியாது, என்னையே நான் அறியவில்லை"** என்று கூறும்போதெல்லாம், அந்த அனுபவத்தை ஆழ்ந்த **உறக்க நிலை** என அழைக்கிறோம்.

மூன்று நிலைகளை அல்லது மூன்று வித அனுபவக் களங்களை அனுபவிக்க, மூன்று வித உடல்கள் உள்ளன.

ஸ்தூலச் சரீரம் விழிப்பு நிலையிலும் (ஜாக்ரதம்), சூட்சுமச் சரீரம் கனவு நிலையிலும் (ஸ்வப்னம்), காரணச் சரீரம் ஆழ்ந்த உறக்கத்திலும் (சுசூப்தி) பொருந்துகிறது.

சூட்சும சரீரத்தைப் பற்றிக்கொண்டால் கனவுலகில் நுழைகிறோம். ஆழ்ந்த உறக்கம் வரும்போது, ஸ்தூல – சூட்சும சரீரங்களை ஒதுக்கி விட்டுக் காரணச் சரீரத்துடன் இருக்கிறோம்.

நம்மைச் சுற்றியுள்ள எதுவும் நமக்குப் புலப்படாத நிலையில் நம்மையே அறியாத நிலையில், ஆழ்ந்த உறக்கத்தின் அறியாமை ஒன்றே நமது அனுபவத்துக்குப் பொருளாகிறது.

ஸ்தூல சரீரத்தைப் பற்றிக் கொண்டிருக்கும்போது நாம் கனவு காண்பதோ? உறங்குவதோ இல்லை.

ஸ்தூல சரீரத்தின் துணையால் விழிப்பு நிலையில் நுகர்பொருள் நிறைந்த இவ்வுலகை அனுபவிக்கிறோம்.

சூட்சும சரீரத்தின் உதவியால், கனவை அரங்கேற்றி அதை அனுபவிக்கிறோம்.

அதுவே, காரண சரீரத்துடன் இருக்கையில் அங்கு எதையும் காண்பதோ? தோற்றுவிப்பதோ? இல்லை. ஆதலால், அங்கு இந்த உடலும், மனமும் அற்ற அந்த நிலையிலும், தற்காலிகமான **'ஆனந்தம்'** மட்டுமே அனுபவமாகிறது.

ஆக, நமக்கு நிலையான ஆனந்தம் உண்டாக வேண்டுமானால், இந்த காரண சரீரமும் அழிய வேண்டும்.

மூன்று சரீரங்களுக்கும் அப்பாற்பட்டது **ஆத்மா.**

# அவஸ்தைகளும், ஆத்மாவும்

அவஸ்தாத்ரயம் என்றால் என்ன? அல்லது, மூன்று அவஸ்தைகள் என்னென்ன?

ஜாக்ரத் ஸ்வப்ன ஸுஷுப்தியவஸ்தா: |

ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்தி என்ற மூன்று அவஸ்தைகளை விழிப்பு நிலை, கனவு நிலை, மற்றும் ஆழ்ந்த உறக்க நிலை என்று மூன்று நிலைகளை மூன்று அவஸ்தைகள் அல்லது அவஸ்தாத்ரயம் என்கின்றோம்.

ஜாக்ரத் அவஸ்தா என்றால் என்ன? அல்லது, விழிப்பு நிலை என்றால் என்ன?

ஸ்ரோத்ராதி ஜ்ஞானேந்த்ரியை: ஸப்தாதி விஷயை ஸசஜ்ஞாயதே
இதி யத்ஸா ஜாக்ரதாவஸ்தா |
ஸ்தூல ஸரீராபிமானீ ஆத்மா விஷ்வ இத்யுச்யதே|

அதாவது, காது முதலான ஞானத்தை கொடுக்கின்ற ஐந்து இந்திரியங்களை பயன்படுத்தி, சப்தம் என்ற விசயத்தை கிரகிப்பதுப் போல, மற்ற இந்திரியங்களின் துணைக் கொண்டு

மற்ற விசய அனுபவங்களைப் பெறுவதே இந்த ஸ்தூல ஸரீரம் ஆகும்.

இந்த ஸ்தூல உடலின் மீது அபிமானம் வைத்து அனுபவப்படுவது **“ஜாக்ரத் அவஸ்தை”** அல்லது **“விழிப்பு நிலை”** எனப்படும்.

இங்கு ஸ்தூல ஸரீர அபிமானியான **“நான்”** என்ற இந்த ஆத்மா **“விஸ்வன்”** என்று அழைக்கப்படுகிறான்.

ஸ்வப்ன அவஸ்தை என்றால் என்ன? அல்லது, கனவு நிலை என்றால் என்ன?

ஸ்வப்னாவஸ்தா கேதி சேத் ஜாக்ரதவஸ்தாயம் யத்த்ருஷ்டம்
யத்ஸ்ருதம் தத்ஜனிதவாஸனயா நித்ராஸமயே ய: ப்ரபஞ்ச: |
ப்ரதீயதே ஸா ஸ்வப்னாவஸ்தா: |
ஸூக்ஷ்ம ஸரீராபிமானீ ஆத்மா தைஜஸ இத்யுச்யதே |

கனவு நிலை என்றால் விழிப்பு நிலையில் எதையெல்லாம் நாம் பார்த்து அனுபவித்தோமோ? அவைகள் எல்லாம், சித்தத்தில் சம்ஸ்காரமாக சேகரிக்கப்பட்டுள்ளது.

அந்த சம்ஸ்காரங்கள் மேலெழுந்து, அவைகள் மூலமாக ஒரு உலகம் தோற்றுவிக்கப்பட்டு, அந்த உலகத்தை நாம்

சூக்ஷ்ம ஸரீரத்தில் அனுபவிப்பதுதான் **“கனவு நிலை”** அல்லது **“ஸ்வப்ன அவஸ்தை”** எனப்படும்.

சூக்ஷ்ம ஸரீர அபிமானியான **“நான்”** என்ற இந்த ஆத்மா **“தைஜஸன்”** என்று அழைக்கப்படுகிறான்.

ஸுஷுப்தி அவஸ்தை என்றால் என்ன? அல்லது, ஆழ்ந்த உறக்க நிலை என்றால் என்ன?

அஹம் கிமபி ந ஜானாமி ஸுகேன மயா நித்ரானுபூதய இதி
ஸுஷுப்த்யவஸ்தா |
காரணஸரீரபிமானீ ஆத்மா பிராஜ்ஞ இத்யுச்யதே |

ஆழ்ந்த உறக்கத்தில் இரண்டு விஷயங்கள் உள்ளன. ஒன்று அறியாமை, இனி ஒன்று ஆனந்தம் என உள்ளது.

உறங்கி விழித்தெழுந்தவுடன் நான் எதையும் அறியவில்லை என்றும், ஆனந்தமாக உறங்கினேன் என்றும் கூறுவதிலிருந்தே இந்த இரண்டும் இருப்பது தெரிகின்றது.

எங்கு முழுமையான அறியாமையும், முழுமையான ஆனந்தமும் அனுபவிக்கப்படுகின்றதோ? அது **ஆழ்ந்த உறக்கம்** எனப்படும். இந்த ஆழ்ந்த உறக்கத்தில், காரண சரீரத்தில்

மட்டுமே நம்முடைய அபிமானம் இருக்கும். காரண சரீர அபிமானியான “**நான்**” என்ற இந்த ஆத்மா “**பிராஜ்ஞன்**” என்று அழைக்கப்படுகிறான்.

இதுப்போன்று, ஜீவனானவன் **விஸ்வன், தைஜஸன், பிராஜ்ஞன்** என மூன்று நிலைகளிலும் இருக்கின்றான்.

ஆனால், ஆத்மாவோ, இந்த மூன்று அவஸ்தைகளுக்கும் சாட்சியாக (அவஸ்தா திரைய சாட்சியாக) இருக்கின்றது.

**ஆத்மா என்றால் என்ன?**

ஆத்மா என்றால், “**நான்**” என்று அறிந்து கொள்வது சிறப்பு. இதற்கு உதாரணமாக ஒருவர் என்னைப் பார்க்க காலையில் வருகின்றார். மற்றொருவர் மதியம் என்னைப் பார்க்க வருகின்றார். இனி ஒருவர் இரவு என்னைப் பார்க்க வருகின்றார்.

இதில் ஒருவர் வந்து என்னைப் பார்த்துவிட்டுச் சென்றதை மற்றவர்கள் அறிய முடியாது. ஆனால், இந்த மூவரும் வந்து விட்டுப் போனதை ஒருவர் மட்டுமே அறிவார். அவர் யாரென்றால், அது “**நான்தான்**”.

இதுப்போலவே, நம் ஒவ்வொருவருக்கும், மூன்று அவஸ்தைகளும் மாறி, மாறி வருகின்றது. இதில் விழிப்பு நிலையில் இருக்கின்ற நான் எனும் உணர்வு, கனவு நிலையிலோ, ஆழ்ந்த உறக்க நிலையிலோ அப்பொழுது இல்லை.

அதுவே, கனவு நிலையில் இருக்கின்ற நான் எனும் உணர்வு, விழிப்பு நிலையிலோ, ஆழ்ந்த உறக்க நிலையிலோ இல்லை.

அதுப்போலவே, ஆழ்ந்த உறக்க நிலையில் இருக்கின்ற நான் எனும் உணர்வு மேற்கண்ட இரண்டு நிலைகளிலும் இல்லை.

ஆனால், இந்த மூன்று நிலைகளையும் அறிகின்ற ஒருவன் உண்மையான **"நான்"** என்பதாக, எப்பொழுதும் இருக்கின்றான். அவன் மட்டுமே உண்மையில் இந்த மூன்று அவஸ்தைகளையும் அறிபவன் ஆவான். அவனது அதிர்ஷ்டா னத்தின்மீது ஏறி அமர்ந்துக் கொண்டு, இந்த மனம் தன்னை **'நான்', 'நான்'** என்று ஆர்பரித்துக் கொண்டுள்ளது.

ஆக, அந்த மனம் மற்றும் உடல் சார்ந்த **'நான்'** உண்மை நான் அல்ல!. ஆனால், இந்த மூன்று

அவஸ்தைகளையும், எப்போதும் எது அறிகின்றதோ? அதுவே, உண்மையான **“நான்”** அல்லது **“ஆத்மா”** ஆகும்.

என்னுடைய நான் என்ற அபிமானம் ஸ்தூல உடல் வரைக்கும் எவ்வளவு முழுமையாக செல்கின்றதோ? அப்படிப்பட்ட **“விஸ்வன்”** ஆகிய **“நான்”** ஸ்தூல ஸரீரம் வரை அபிமானம் வைத்து, ஜாக்ரத் அவஸ்தையில் (விழிப்பு நிலையில்) இந்த ஜாக்ரத் பிரபஞ்சத்தை அனுபவிக்கின்றேன்.

கனவு நிலையில் **“தைஜஸன்”** ஆகிய **“நான்”** ஸ்தூல சரீரத்தினுடைய அபிமானத்தை விட்டு விட்டு, சூக்ஷ்ம சரீரமான மனதுடன் மட்டும் அபிமானம் வைத்து, ஸ்வப்ன அவஸ்தையில், அதாவது, கனவு நிலையில், கனவு பிரபஞ்சத்தை உண்டாக்கி அனுபவிக்கின்றேன்.

அவ்வாறே, ஆழ்ந்த உறக்க நிலையில் **“பிராஜ்ஞன்”** ஆகிய **“நான்”** ஸ்தூல உடல், சூக்ஷும மனம் ஆகிய இரண்டின் மீதும் உள்ள அபிமானம் இன்றி, ஸுஷுப்தி அவஸ்தையில், அதாவது, ஆழ்ந்த உறக்கத்தில், காரண நிலையில் ஒடுங்கி இருப்பதால், அங்கு அறியாமையும், ஆனந்தமும் உண்டாகி என்னை மறந்த நிலையில் ஸ்தூல உடலை விட்டு, விட்டு இருக்கின்றேன்.

இதிலிருந்து நாம் அறிய வேண்டிய உண்மை என்னவெனில், நாம் ஸ்தூல, சூக்ஷ்ம, மற்றும் காரண உடல்களின் மீதுள்ள அபிமானத்தை விடவும், வைக்கவும் முடியும் என்றால், இது என்னுடைய உண்மை நிலை அல்ல என்பதை அறிய வேண்டும். ஆகவே, எது என்னுடைய உண்மையான நிலையோ, அதை ஒரு பொழுதும் என்னால் விட முடியாது.

உதாரணமாக, ஒருவனுடைய கை என்பது அவனது உடலுடன் சேர்ந்த ஓர் உறுப்பு ஆகும். ஆனால், அவனது கையில் கட்டியிருக்கும் கைக்கடிகாரம் அவனது உடலில் உள்ள ஒரு உறுப்பு அல்ல. எனவே, அவன் கைக்கடிகாரத்தின் மீது அபிமானம் உண்டாகும் போது, கையில் கட்டுவதும், அபிமானம் இல்லாத போது அந்த கைக்கடிகாரத்தை கையில் கட்டாமல் கழற்றி விடவும் முடியும்.

ஆனால் அவனது கையின் மீது அபிமானம் இருந்தாலும், இல்லையென்றாலும் அந்த கையை அவனால் விட முடியாது. இதுப்போல, எது என்னுடைய உண்மை ஸ்வரூபமோ அதை என்னால் விட முடியாது.

ஆனால், இந்த மூன்று சரீரங்களையும் வேண்டாம் என்ற பொழுது (அதாவது, மூன்று அவஸ்தைகள் மாறி, மாறி

உண்டகும் பொழுது) விட முடியும் என்றால், அது என்னுடைய உண்மை ஸ்வரூபம் அல்ல. அப்படியானால், இந்த மூன்று உடலுக்கும் வேறாக, இந்த மூன்று அவஸ்தைகளுக்கும் சாட்சியாக ஒன்று இருக்கின்றது என்றால், அதுவே **“நான்”** அல்லது **“ஆத்மா”**. அதுவே, என்னுடைய உண்மை ஸ்வரூபம் ஆகும்.

சரி! இந்த ஆத்மாதான் **“நான்”** என்றோ? அல்லது **“நான் இந்த உடல் அல்ல, ஆத்மா”** என்றோ தெரிந்து கொள்வதினால் என்ன பயன்?

இப்படி ஒரு கேள்வி எழும் பொழுது, நாம் இந்த மூன்று அவஸ்தைகளுக்கும் வேறாக, அதாவது **விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம்** என்ற மூன்று நிலைகளுக்கும் வேறாக நம்மைப் பார்க்காமல், இந்த மூன்று அவஸ்தைகளையும் அனுபவிப்பவனாகவே நம்மை நாம் பார்க்கின்றோம்.

இங்கு சாட்சி என்பது ஒரு சம்பவத்தினால் எந்தவித பாதிப்புக்களையும் அடையாமல் அந்த சம்பவத்தை வேடிக்கை மட்டும் பார்த்துக் கொண்டிருப்பது **“சாட்சி”** என்றும், ஆனால் அந்த சம்பவத்தில் அபிமானம் வைத்து பாதிப்புக்கு உள்ளாகுபவனை **“கர்த்தா”** அல்லது **“போக்தா”** என்றும் அழைக்கின்றோம்.

# எல்லாம் பரமா(ஆ)த்மா

சாஸ்திரம் நமக்கு என்ன அறிவுரை வழங்குகின்றது என்று கவனித்தோமானால், எவன் ஒருவன் இந்த உலகத்தில் செயல் செய்துக் கொண்டு வாழும் காலத்திலேயே, அந்த செயல்களுக்கும், சம்பவங்களுக்கும் என்னுடைய இந்த உடலோ, மனமோ காரணமில்லை.

இவைகளையெல்லாம் இந்த **உடல், மனம்** எனும், கருவிகளைக் கொண்டு, என்னுள்ளே சாட்சியாக இருந்து இயக்கிக்கொண்டிருப்பவன் ஒருவன் இருக்கின்றான்.

அவன் தான் உண்மையில் அந்த **ஆ**(பரமா)**த்மா** அல்லது **"நான்"** என்று அறிகின்றானோ? அவனே **"ஞானி"** ஆகின்றான்.

அவனே **"ஜீவன் முக்தன்"** என்று போற்றப்படுகின்றான்.

ஆனால், எவன் ஒருவன் இந்த செயல்களையெல்லாம் **"நான்"** செய்கின்றேன் என்று இந்த உடலின் மீதும், மனதின் மீதும் அபிமானம் (பற்று) கொண்டு செயல்படுகின்றானோ?

அத்துவன், அந்த சம்பவத்தில் கலந்துக் கொள்கின்றானோ? அவனை **சம்சாரி, போக்தா**, அல்லது **கர்த்தா** என்று சாஸ்திரம் அழைக்கின்றது.

அப்படிப்பட்டவனே தன் உடலை **"நான்"** என்று அறிந்து துயரத்திற்கு ஆளாகின்றான். அவனே தன் அறியாமையினால் **'அஞ்ஞானி'** ஆகின்றான்.

இங்கு இன்னொரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். செயல் செய்வது பரமாத்மா என்றால், எனக்கு எப்படி கர்மம் உண்டாகும் என்ற சந்தேகம் வருகின்றது.

இதற்கு சாஸ்திரம் என்ன விளக்கம் கொடுக்கின்றது என்று பார்த்தோமானால், எவன் ஒருவன் தான் செய்யும் காரியங்களின் மீது அது என்னுடைய செயல் என்று பற்று இல்லாமல், தான் செய்கின்ற காரியங்களினால் உண்டாகும் பலன்களை ஈஸ்வரார்பண புத்தியுடன் செய்கின்றானோ? அவனது செயல்கள் **"நிஷ்காமிய கர்மம்"** ஆக (ஆசைகளற்ற செயல்களாக) மாறிவிடுகின்றது.

இதனால், நிஷ்காமிய கர்மத்தில் அவனுக்கு எந்த விதமான பாவ, புண்ணியங்களும் உண்டாகாமல் தடுக்கப்படுகின்றது.

(இங்கு ஈஸ்வரார்ப்பண புத்தி என்பது, தன்னுடைய செயல் எதுவுமில்லை, **“எல்லாம் அவன் செயல்”** என்ற பற்று இல்லாத, உயர்ந்த மனோ நிலை ஆகும். இந்த உயர்ந்த மனோ நிலையின் முதிர்ச்சிதான் அவனுக்கு சாஸ்திரத்தின் **“அஹம் பிரமாஸ்மி”** என்ற மஹா வாக்கியத்தின் பொருளை உணர்த்துகின்றது.)

ஆனால், எவன் ஒருவன் தன்னுடைய செயல்களை இந்த உடலும், மனமும் செய்கின்றதாக நினைத்து, **“நான்”** என்ற அஹங்காரத்தில் செயல்படும் பொழுது, அவன், செய்கின்ற செயல்களினால், கிடைக்கின்ற பலன்கள் **“காமிய கர்மம்”** (ஆசைகளுடன் கூடிய செயல்கள்) ஆக மாறுவதால், அந்த செயல்களுக்கு உண்டான பலன்களாக, அவனுக்கு பாவ, புண்ணியங்கள் உண்டாகின்றது.

இந்த பாவ, புண்ணியங்களுக்கு ஏற்ப அவனுக்கு மீண்டும், மீண்டும் பிறப்பு, இறப்பு உண்டாகின்றது.

இதுப்போல, அவன் எண்ணற்ற பலப் பிறவிகளில் பல விதமான உடல்களை அடைந்து, சுக, துக்கங்களை அனுபவிக்கும் காலத்தில், அதிக புண்ணிய வசத்தினால் மீண்டும் அவனுக்கு மனிதப் பிறவி கிடைத்து, அந்தப் பிறவியில் அவனுக்கு, சாஸ்திரத்தை படிக்க தக்க சத்குருவும் கிடைத்து,

அந்த குருவின் வாயிலாக சாஸ்திரத்தின் மஹாவாக்கியத்தின் பொருளை உணர்ந்து, **“ஆத்ம ஞானம்”** பெறாமல், **“மோட்சம்”** என்ற பெரு நிலையை அடைய முடியாது.

இதுவரை ஆத்மா என்பதை அறிந்து கொள்ளவே ஆத்மாவிற்கு வேறான அனாத்மாக்களை (தத்துவங்களை) விசாரித்து அறிந்து வருகின்றோம்.

இனி, ஆத்மாவை மறைக்கின்ற **பஞ்ச கோஷங்கள்** பற்றி விசாரித்து அறிய முயற்சிப்போம்.

# பஞ்ச கோஷங்கள்

पंचकोशातीतः **பஞ்சகோஷாதி** – ஐந்து உறைகளைக் கடந்தது. ஆத்மா என்பது ஐந்து உறைகளுக்கு அப்பாற்பட்டது. உதாரணமாக, பனிப்பிரதேசத்தில் வாழும் ஒரு மனிதன் பனியில் இருக்கும் போது, அந்த பனியினால் உண்டாகும் கடுங்குளிரைத் தாங்கிக் கொள்ள, பலவாறான துணி அடுக்குகளை அணிந்துக் கொள்கிறான்.

அதுவே, அவன் அவனது வீட்டிற்கு திரும்பியதும், உடைகள் அனைத்தையும் அகற்றுகிறார். அதுப்போல, ஆன்மா ஐந்து அடுக்குகளில் மூடப்பட்டிருக்கின்றது. இந்த ஐந்து உறைகளும் வெளியில் இருந்து வந்தவைகள்: உணவு உறை (அன்னமயம்), முக்கிய காற்று உறை (பிரணமயம்), மன உறை (மனோமயம்), அறிவுசார் உறை (விஜானமயம்) மற்றும் பேரின்ப உறை (ஆனந்தமயம்).

அன்னமய உணவு உறையானது, ஸ்தூல உடலாகிய மொத்தப் பரு உடலை உருவாக்குகிறது.

அதுப்போலவே, காற்று உறை (பிராணமய கோஷம்), மனோ உறை (மனோமய கோஷம்) மற்றும் அறிவுசார் உறை

(விஜ்ஞானமய கோஷம்) ஆகியவை இணைந்து நுட்பமான உடல் அல்லது சூக்ஷ்ம உடலை உருவாக்குகின்றன.

பேரின்ப உறை அல்லது ஆனந்தமய கோஷம் காரண உடலை உருவாக்குகிறது.

ஆத்மா ஐந்து உறைகளுக்கு அப்பால் இருப்பதன் காரணம் என்னவெனில், *"நான் உறைகளோ அதன் மகிழ்ச்சியோ துன்புறுத்தலோ அல்ல. நான் உறையிலிருந்து வேறுபட்டவன். நான் ஒரு தற்காலிக குடியிருப்பாளர் மட்டுமே. நான் அவர்களுடன் அடையாளம் காணப்படவில்லை. நான் வித்தியாசமானவன் அவைகளுக்கு முற்றுலும் வேறானவன்"* என்கின்றது.

ஆக, கோஷங்கள் என்றால் மறைப்பது என்று பொருள். அதாவது, ஒரு பொருளை மூடி மறைக்கின்ற உறை என்று அழைக்கலாம்.

இப்படி ஆத்மாவை மூடி மறைக்கின்ற இந்த ஐந்து கோஷங்களும் (உறைகளும்) மூன்று சரீரங்களினால் உண்டானவைகள் ஆகும்.

இந்த ஆத்மாவை மூடி மறைக்கின்ற கோஷங்களை, நாம் சாதரணமாக நம் கையில் கட்டுகின்ற கைக்கடிகாரத்தை மூடி மறைக்கின்ற மேல் பெட்டியுடன் ஒப்பிடக்கூடாது.

ஏனெனில், அந்த கடிகாரத்தை மேலே மூடி மறைக்கப்பட்ட பெட்டி அந்த கைக்கடிகாரத்தை விட நிச்சயமாக பெரிதாக இருக்கும். அப்பொழுதுதான் அதனை மூடி மறைக்க முடியும்.

ஆனால், ஆத்மாவை மூடி மறைக்கின்ற மூன்று உடல்களினால் உண்டான இந்த ஐந்து கோஷங்களும் நிச்சயமாக ஆத்மாவை விட பெரிதாக இருக்க முடியாது. இருக்கவும் முடியாது.

காரணம், இந்த இடத்தில் மறைத்தல் என்றால், இவைகள் ஆத்மாவை விட பெரிதாக இருந்து ஆத்மாவை மறைக்கவில்லை. ஆத்மாவிடமிருந்து நம் கவனத்தை இந்த மூன்று உடல்களும் ஈர்த்து விட்டதினால், உண்மையில் ஆத்மா மறைக்கப்பட்டதுப் போல, நமக்குத் தெரிகின்றது.

உதாரணமாக, நாம் ஒரு திரையரங்கினுள் படம் பார்க்க சென்றவுடன் அங்கு மிகப் பெரிய ஒரு திரையைக் காண்கின் றோம்.

அதே திரையில், திரைப்படம் ஓட ஆரம்பித்தவுடனேயே, நம் கவனம் முழுவதும், அந்த திரையை விட்டு விட்டு, அங்கு அசைந்துக் கொண்டிருக்கின்ற திரைப்படத்தின்மீது ஈர்க்கப்

பட்டு விட்டது. இது எப்படி நம்மைப் பொருத்தவரை, உண்மையாகத் தெரிகின்றதோ? அதுப்போல, இந்த மூன்று உடல்களையும் (திரைப்படத்தை) கவனிக்க ஆரம்பித்த வுடனேயே ஆத்மாவை (திரைச் சீலையை) மறந்து விடுகின்றோம் என்பதே உண்மை.

அந்த திரையை ஆதாரமாகக் கொண்டுதான் திரைப்படம் இருக்கின்றது. அதைப்போல, ஆத்மாவை ஆதாரமாகக் கொண்டுதான் இந்த மூன்று உடல்களும் உள்ளன.

இந்த மூன்று உடல்களினால் உண்டான இந்த ஐந்து கோஷங்களும் நம்முடைய கவனத்தை ஆத்மாவிடமிருந்து திருப்பி, இந்த ஸ்தூல உடல், மற்றும் சூக்ஷ்ம மனம் ஆகிய இவைகளின் மீது ஈர்த்து விடுவதால், நமக்கு ஆத்மாவை இவைகள் மறைப்பதுப் போல உள்ளது.

ஐந்து கோசங்களும் ஒன்றிலிருந்து ஒன்றுக்கு தொடர்பு கொண்டுதான் இயங்குகின்றது.

அதாவது, உணவுடலை மூச்சு உடல் இயக்குகிறது. மூச்சு உடலை மனோ உடல் இயக்குகிறது. மனோ உடலை அறிவு உடல் இயக்குகிறது. அறிவு உடலை அதற்கு

மேலிருக்கின்ற இன்ப உடல் இயக்குகிறது. அந்த இன்ப உடலை அதற்கு மேலிருக்கின்ற பேரின்ப உடல் எனும் ஈஸ்வரன் இயக்குகிறது. ஈஸ்வரன் என்பதைத்தான் ஏற்கனவே பரப்பிரஹ்மத்தின் ஆற்றல் என்று பார்த்தோம்.

பஞ்சகோஸா: கே?

**பஞ்ச கோஷங்கள் என்றால் என்ன?**

அன்னமய: பிராணமய: மனோமய: விஞ்ஞானமய:
ஆனந்தமயஸ்சேதி |

அன்னமய கோஷம்
பிராணமய கோஷம்
மனோமய கோஷம்
விஞ்ஞானமய கோஷம்
ஆனந்தமய கோஷம் என **ஐந்து கோஷங்கள்** உள்ளன.

1. **அன்னமய கோசம்** = உணவால் தோன்றி உணவால் வளர்ந்து உணவின் மூலமாகிய மண்ணில் சிதைந்து அழிகிற உடல்.

**2. பிராணமய கோசம்** = மூச்சாக உள் வந்து உடலின் அனைத்து இயக்கங்களையும் செயல் படுத்துகின்ற காற்று.

**3. மனோமய கோசம்** = எண்ணங்களுக்கும் உணர்வுகளுக்கும் ஆதாரமாக இருக்கின்ற மனம்.

**4. விஞ்ஞானமய கோசம்** = பகுத்தறிவும் சிந்தனைத் திறனும் கொண்டு இருக்கின்ற அறிவு.

**5. ஆனந்தமய கோசம்** = புலன்களுக்கு அப்பாற்பட்டு இருக்கின்ற பேரின்பம்.

அன்னமய: க:?

**அன்னமய கோஷம் என்றால் என்ன?**

அன்ன ரஸேனைவ பூத்வா அன்ன ரஸேனைவ வ்ருத்திம் ப்ராப்ய அன்னரூபப்ருதிவ்யாம் யத்விலீயதே ததன்னமய: கோஸா: ஸ்தூல ஸரீரம் |

நம்முடைய ஸ்தூல சரீரம் அன்னமய கோஷம் ஆகும். உணவின் விகாரம்தான் இந்த ஸ்தூல சரீரம். அதாவது நாம் உண்ட உணவின் மாற்றம் இந்த உடல் எனப்படும்.

இந்த ஸ்தூல உடல் உணவினால்தான் தோன்றி, உணவினால்தான் வளர்ந்து, பிறகு, மற்ற உயிர்களுக்கு உணவாகவே மாறிவிடுகின்றது.

இந்த உடலைப் புதைத்தால், மற்ற புழு, பூச்சிக்கு உணவாகவும், எரித்து சாம்பல் செய்து விட்டால், அந்த சாம்பல் தாவரங்களுக்கு உரமாக மாறிவிடுகின்றது. இப்படிப்பட்ட ஸ்தூல சரீரமே **அன்னமய கோஷம்** ஆகும்.

திருமந்திரம் கூறும்போது,

இரதம் உதிரம் இறைச்சிதோல் மேதை
மருவிய அத்தி வழும்பொடு மச்சை
பரவிய சுக்கிலம் பாழாம் உபாதி
உருவ மலால் உடல் ஒன்றெனலாமே (பாடல் – 2125)

அன்னமய கோஷத்தினால் ஆன இரதமாகிய இந்த பருவுடல் இரத்தம், சதை, தோல், நரம்புடன் கூடிய கொழுப்பொடு, மூளை, எலும்பு, மச்சை, பரவிய சுக்கிலம் ஆகியவற்றால் உருவான உடல், உண்ட உணவின் சாரத்தால் மாறி அமையும் தன்மை கொண்டது.

எனவே, இந்த உடலை ஒரு பொருட்டாக எண்ணுதலாகாது. இவ்வுடல் மாயை.

நம் எல்லோருக்கும் தொண்டை பகுதியில் இரு குழாய்கள் உள்ளன. ஒன்று உடல் வளர்க்கும் உணவுப் பாதை, மற்றொன்று உயிர் வளர்க்கும் மூச்சுப் பாதை.

இதுவே அன்னமய கோஷம், மேலும் இது பிராணமய கோஷத்தின் ஆதாரம். இரண்டும் இணைந்து மனோன்மய கோஷம் உருவாகிறது. புத்தி விகாரத்தில் விஞ்ஞானமய கோஷமும் சித்தத்தில் ஆனந்தமய கோஷமும் அனுபவமாகிறது.

பிராணமய: க:?

**பிராணமய கோஷம் என்றால் என்ன?**

ப்ராணாத்யா: பஞ்சவாய: வாகாதீந்த்ரியபஞ்சகம் ப்ராணமய: கோஸ: |

ஐந்து வாயுக்களே **பிராணமய கோஷம்** ஆகும்.

மனோமய: கோஸ: க:?

**மனோமய கோஷம் என்றால் என்ன?**

மனஸ்ச ஜ்ஞானேந்த்ரிய பஞ்சகம் மிலித்வா பவதி ஸ மனோமய: கோஸ: |

ஐந்து ஞானேந்திரியங்களுடன் மனது சேர்வது **மனோமய கோ**ஷம் ஆகும்.

இந்த ஜடமாகிய ஸ்தூல உடலுக்கும், அறிவாகிய ஆன்மாவிற்கும் இடையில்தான் மனம் உள்ளது. மனமானது ஜட, இந்திரிய விவகாரங்களில் அலைந்து, திரிந்தால், அதன் வாயிலாக வினைகள் பெருகி, துன்பம் விளையும்.

அதுவே, இந்த மனமானது ஜட விவகாரங்களை விடுத்து, உள்முகமாகக் குவிந்து, ஆன்மாவாகிய அறிவில் கலந்து நின்றால், வினைத்துயர் நீங்கிப் பிறவி ஒழியும்.

விஞ்ஞானமய: க:?

**விஞ்ஞானமய கோஷம் என்றால் என்ன?**

புத்தி ஞானேந்த்ரிய பஞ்சகம் மிலித்வா பவதி ஸ விஞ்ஞானமய: கோஷ: |

ஐந்து ஞானேந்திரியங்கள் மற்றும் புத்தி சேர்வது **விஞ்ஞானமய கோஷம்** ஆகும்.

ஆனந்தமய: க:?

**ஆனந்தமய கோஷம் என்றால் என்ன?**

ஏவமேவ காரணஸரீர பூதாவித்யாஸ்தமலினஸத்த்வம்
ப்ரியாதிவ்ருத்தி ஸஹிதம் ஸத் ஆனந்தமய: கோஷ: |
ஏதத் கோஸபஞ்சகம் |

அவித்யா ரூபமான காரண சரீரமே **ஆனந்தமய கோஷம்** ஆகும்.

மூன்று அவஸ்தைகளைக் கடந்து, மூன்று சரீரங்களுக்கும், ஐந்து பிராணன்களுக்கும், ஐந்து கோஷங்களுக்கும், ஐந்து இந்திரியங்களுக்கும் வேறுபட்டதாக இருப்பது எதுவோ? அதுவே, **"ஆத்மா"** ஆகும்.

ஆனால், நாம் அறியாமையினால், இந்த 21 தத்துவங்களையும் பிடித்துக்கொண்டு, **"நான்"** என்று நம்மை தவறாகவே நினைத்துக் கொண்டிருக்கின்றோம்.

# அறியாமையும், ஆனந்தமும்

இனி காரண சரீரத்தில் உள்ள **‘அறியாமை’** மற்றும் **‘ஆனந்தம்’** என்ற இரண்டு நிலைகளை ஒவ்வொன்றாக காணலாம்.

முதலில் அறியாமை பற்றிப் பார்க்கலாம்.

சாஸ்திரம் மாயைப் பற்றிக் கூறும் பொழுது, மூன்று குணங்களைப் பற்றியும் கூறுகின்றது. இவைகள் சத்துவ குணம், ரஜோ குணம், மற்றும் தமோ குணம் என்று மூன்று வகைகள் உள்ளன.

இந்த மூன்று குணங்களையும் கொண்ட மாயையிலிருந்து இந்த உலகம் வந்ததால், இந்த உலகத்தில் உள்ள அனைத்து ஜீவ ராசிகளுக்கும் இந்த மூன்று குணங்களும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

தமோ குணம் என்றால் **ஜட ஸ்வரூபம்** எனப்படும். அதாவது, அறிவற்ற தன்மை எனலாம். எங்கெல்லாம் செயல்

உள்ளதோ? அவை ரஜோ குணம் என்றும், பிறகு அறியும் சக்திக்கு சத்துவ குணம் என்றும் சாஸ்திரம் கூறுகின்றது.

இந்த மூன்று குணங்களும் ஒரு விதமான சக்தி எனப்படுகின்றது. இந்த உலகத்தில் உள்ள ஜடப்பொருட்கள் முதற்கொண்டு உயிர் பொருட்கள் வரை அனைத்துமே இந்த மூன்று குணங்களின் சேர்க்கையும், மாற்றத்தையும் கொண்டதாக இருக்கின்றது.

ஆனால், அவைகளிடத்தில் இந்த மூன்று குணங்களில் வேற்றுமைகள் காணப்படுகின்றன. நாம் பார்க்கின்ற இந்த பிரபஞ்சம் தமோ குணத்திலும், மற்ற உயிரினங்கள் ரஜோ குணத்திலும், மனிதன் என்ற ஒருவனிடத்தில் இந்த மூன்று குணங்களும் உள்ளன.

ஆனால், இந்த மூன்று குணங்களில் எந்த குணம் அதிகம் ஒருவனிடத்தில் மேலோங்கியுள்ளதோ? அந்த குணத்தைப் பொருத்து அவன் இருப்பான் என்பதை நாம் கண்கூடாகக் காண முடிகின்றது.

ஒருவனுக்கு தமோ குணம் அதிகம் ஆகின்ற பொழுது, அந்த குணம் அவனிடத்தில் உள்ள ரஜோ குணத்தையும், சத்துவ குணத்தையும் அடக்கி மேலே வரும்.

அதுப்போலவே, சத்துவ குணம் ஒருவனுக்கு அதிகம் ஆகின்ற பொழுது, மற்ற இரண்டு குணங்களையும் அடக்கி இது மட்டும் மேலோங்குகின்றது.

ஒருவனுக்கு ஆழ்ந்த உறக்கத்தில் தமோ குணமானது மேலே வந்து ரஜோ குணமும், சத்துவ குணமும் அடங்கி விடுகின்றது.

இதனால்தான் அவன் நன்றாக ஆழ்ந்து உறங்க முடிகின்றது. இதிலிருந்து நன்றாக ஆழ்ந்து உறங்குவதற்கு தமோ குணமும் அவசியம் என்பது தெரிகின்றது.

ஆழந்த உறக்கத்தில் நாம் அனுபவிக்கின்ற இந்த அறியாமையும், ஆனந்தமும், தமோ குணத்தினாலேயே உண்டாகின்றது.

அதற்குக் காரணம், ஆழ்ந்த உறக்கத்தில் இந்த தமோ குணமானது, ரஜோ குணத்தையும், சத்துவ குணத்தையும் அடக்கி விடுவதினால், அங்கு நமக்கு எதைப்பற்றியும் ஞானம் கிடையாது. அதனால், அங்கு அறியாமை மட்டும் உள்ளது. மேலும் ரஜோ குணமும் அடங்கியுள்ளதால், அங்கு ஆனந்தமும் உண்டாகின்றது.

ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் பொழுதோ, காரண சரீரத்தில் இருக்கும் பொழுதோ, அல்லது ஆனந்தமய கோஷத்தில் இருக்கும் பொழுதோ நாம் தமோ குணத்தில் இருக்கின்றோம்.

இங்கு நாம் ஒன்றை நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும். அடிப்படையிலேயே மனிதர்களாகிய நாம் அனைவரும் சத்துவ குணம் பிரதானமாகக் கொண்டவர்கள்.

அந்தோ பரிதாபம், நாம் அந்த நிலையில் தொடர்ந்து இருக்க முடியாமல், இதுப்போன்ற சூழல்களில் நம்முடைய அறியாமையினால், தமோ குணம் மற்றும் ரஜோ குணத்தின் ஆதிக்கத்திற்கு நாம் அதிகம் சென்று விடுகின்றோம்.

இங்கு ஆழ்ந்த உறக்கத்தில் சத்துவ குணம் தன்னுடைய சக்தியை இழந்து விடுவதினால், நாம் தமோ குணத்தின் ஆதிகத்தில் இருக்கின்றோம்.

அதனால், இங்கு காணப்படும் நம்முடைய சத்துவ குணத்தை **“மலின சத்துவ குணம்”** என்று சாஸ்திரம் அழைக்கின்றது.

மலின சத்துவ குணம் என்றால், தமோ குணத்தினால் பீடிக்கப்பட்ட சத்துவம் என்று பொருள். அதாவது அறிகின்ற சத்துவ குணத்தை உடைய மனிதன் ஆழ்ந்த உறக்கத்தில் தமோ குணத்தினால் அறியாமையின் பிடியில் சிக்கிக் கொள்வதினால், இங்கு நாம் மலின சத்துவ குணம் உடைய நிலைக்கு தள்ளப்படுகின்றோம்.

இங்கு காரண சரீரத்தில் எப்பொழுதும் இருக்கின்ற அவித்யா என்ற அஞ்ஞானம் குடி கொண்டுவிடுகின்றது. இத்துடன் அறியாமையைப்பற்றி விசாரித்து அறிவதை நிறுத்திக் கொண்டு, அடுத்து, ஆனந்தம் பற்றி விசாரித்து அறிந்து கொள்ளலாம்.

காரண சரீரம் என்றால் அவித்யா என்ற அறியாமை நிலையும், மற்றும் ஆனந்தம் என்ற இன்ப நிலையும் ஆக, இரண்டு நிலைகளில் உள்ளது என்றும், இதில் ஸுஷுப்தி அவஸ்தா என்ற ஆழ்ந்த உறக்க நிலையில் ஆனந்தமய கோஷம் செயல்படுகின்றது என்றும் அறிந்தோம்.

ஆனால், ஒருவன் ஜாக்ரத் அவஸ்தை என்ற விழிப்பு நிலையில் இருந்துக்கொண்டு ஆனந்தத்தை அனுபவிக் கின்றான் எனில், அப்பொழுது, அவன் ஆனந்தமய கோஷத்திற்கு வந்து விடுகின்றான் என்றும் அறிய வேண்டும்.

இப்படிப்பட்ட இந்த ஆனந்தத்தை அனுபவிக்கும் மூன்று படி நிலைகளை சாஸ்திரம் கீழ்க்கண்டவாறு பிரித்து விளக்கம் அளிக்கின்றது.

அவைகள் முறையே,

**பிரியம்,**

**மோதம்**

**பிரமோதம்** என்ற மூன்று நிலைகளில் ஆனந்தத்தை அனுபவிக்க முடியும்.

நாம் ஒரு பொருளைப் பார்த்து, அதன் மீது ஈர்ப்பு வந்து அதை அடைய விரும்புகின்றோம் என்பதில் உருவாகும் ஆனந்தத்தை "**பிரியம்**" என்றும், அந்த பொருளையே நாம் அடைந்து விட்டால், அதன்மூலம் கிடைக்கும் ஆனந்தத்தை "**மோதம்**" என்றும், அடைந்த அந்த பொருளை அனுபவிக்கும் போது கிடைக்கும் ஆனந்தத்தை "**பிரமோதம்**" என்றும் சாஸ்திரம் அழைக்கின்றது.

மேற்கண்ட இந்த மூன்று விருத்திகளும், விழிப்பு நிலையில் உண்டாகி இதனால் கிடைக்கின்ற ஆனந்தம் ஆனந்தமய கோஷத்தில் உண்டாகின்றது.

இதுப்போலவே, ஸ்தூல சரீரத்தில் அன்னமய கோஷத்தில் இருந்துக்கொண்டு, விழிப்பு நிலையில், கண்களை மூடிக் கொண்டு பகல் கனவு காண்கின்ற போது, நாம் பிராணமய, மனோமய, விஞ்ஞானமய கோஷங்களில் சூக்ஷ்ம சரீரத்துடன் இணைந்து விடுகின்றோம்.

இவ்வாறு இந்த மூன்று அவஸ்தைகளுடன் கூடிய, ஐந்து கோஷங்களும் சேர்ந்த மூன்று சரீரங்களான இந்த 11 தத்துவங்களும் அனாத்மா (ஆத்மா அல்ல) என்று சாஸ்திரம் விளக்கம் அளிக்கின்றது.

**ஆத்மா என்றால் என்ன?**

இதற்கு, ஆத்மா அல்லாத அனாத்மாக்களை விளக்கம் கொடுத்து, இவைகளுக்கு அப்பாற்பட்டது **"ஆத்மா"** என்று அறிய வைக்கின்றது.

இந்த ஞானத்தை அடைந்த நாம் இந்த ஐந்து கோஷங்களில் நிச்சயமாக ஏதாவது ஒரு கோஷத்தில் இணைந்து இருப்போம்.

இதை எப்படி நாம் அறிவது எனில், நம் கவனம் உடை, சிகை அலங்காரம் முதலானவைகளின் மீது ஒன்றி இருந்தால்

உடல் பற்று காரணமாக **“அன்னமய கோஷத்தில்”** இருக்கின்றோம் என்றும், ஏதாவது கற்பனை செய்து கொண்டு நம் உடலை மறந்த நிலையில் இருந்தால் **“மனோமய கோஷத்தில்”** இருக்கின்றோம் என்றும், அடிக்கடி பசி எடுத்துக் கொண்டு எதையாவது சாப்பிட்டுக் கொண்டு இருந்தால் **“பிராணமய கோஷத்தில்”** இருக்கின்றோம் என்றும், அறிவுப் பசி உண்டாகி எதையாவது படித்துக்கொண்டு இருந்தால் **“விஞ்ஞானமய கோஷத்தில்”** இருக்கின்றோம் என்றும், இந்த எந்தவிதமான பற்றும் உண்டாகாமல் ஆழ்ந்த உறக்கத்தில் தன்னை மறந்து இருக்கும் பொழுது **“ஆனந்தமய கோஷத்தில்”** இருக்கின்றோம் என்றும் அறிந்து கொள்ளலாம்.

இந்த ஆழ்ந்த உறக்கத்தில் கிடைக்கின்ற ஆனந்தம் விழிப்பு நிலையிலேயே உண்டாக வேண்டும் என்று ஆசைப்படுபவர்களுக்கு சாஸ்திரம் கூறும் அறிவுரை என்ன வெனில், வேதாந்த சாஸ்திர விசாரம் செய்து, தன்னைப் பற்றி அறிந்து, இந்த **உலகம், இறைவன்**, மற்றும் **ஜீவன்** ஆகிய நான், என்ற இந்த மூன்றும் ஒன்றேயான அந்த **“பரமா(ஆ)த்மா”** என்பதை அறியும் ஞானம் கிடைத்து விட்டால், அவனே ஞானி என்ற நிலைக்கு உயர்ந்து, வாழும் இந்த உலகில் ஜீவன் முக்தனாகவே என்றும், எப்பொழுதும், ஆனந்தமய கோஷத்துடனேயே இணைந்து ஆனந்தமாக இருப்பான் என்று அறிவுறுத்துகின்றது.

மதியம் ஸரீரம் மதியா: ப்ராணா: மதியம் மனஸ:
மதீயா புத்திர்மதீயம் ஜ்ஞானமிதி ஸ்வேனைவ ஜ்ஞாயதே
தத் யதா மதீயத்வேனஜ்ஞாதம் கடககுண்டலக்ருஹாதிகம்
ஸ்வஸ்மாத்பின்னம் ததா பஞ்சகோஸாதிகம்
மதீயத்வேன ஜ்ஞாதமாத்மா ந பவதி ||

இனி இந்த தத்துவங்கள் எவையும் **“நான்”** அல்ல என்றும், இந்த தத்துவங்களை நீக்கிப் பார்த்தால் **“நான்”** என்பது **“ஆத்மா”** என்பதை அறிந்தோம்.

இந்த **“நான்”** என்பதை எந்த இடத்தில் பயன்படுத்த வேண்டும். எந்த இடத்தில் பயன்படுத்தக் கூடாது என்பதில் சாஸ்திரத்தில் திருக், திருஷ்ய விவேகம் என்ற விசாரத்தின் மூலம் அறியப்படுகின்றது.

**“திருக் திருஷ்ய விவேகம்”** என்றால் பார்ப்பவன் பார்க்கப்படும் பொருளைப் பற்றி விசாரம் என்று பொருள். இங்கு அறிபவன் வேறு, அறியப்படும் பொருள் வேறு என்று ஒரு விசாரம் செய்யப்படும். இதில் யார் அறிவது, அறியப்படும் பொருள் எது என்று விசாரித்து அறிவது ஆகும்.

இதுப்போன்றே இங்கு நாம் இதுவரை விசாரம் செய்து வந்தோம். அதாவது, ஆத்மா என்பது அறிவது, அனாத்மா என்பது

அறியப்படும் பொருள் என்ற விதத்தில் இதுவரை விசாரம் செய்தோம்.

இதனால், இந்த உடலைக் கொண்டு நம்மிடமிருந்து வேறாகப் பார்க்கப்படுகின்ற காதுகளில் போடுகின்ற தோடு, வசிக்கின்ற வீடு, போன்ற பொருள்கள் எல்லாம் நாம் அனுபவிக்கப்படுகின்ற பொருட்கள் என்று நாம் அறிவோம். எனவே, அவைகள் **“நான்”** அல்ல! என்று நன்கு அறிந்துள்ளோம்.

ஆனால், இங்கு சாஸ்திரம் இன்னும் ஒரு படி மேலே போய் **“நான்”** என்று நினைத்துக் கொண்டிருக்கின்ற இந்த உடல், மனம், புத்தி, மற்றும் கோஷங்கள் போன்றவைகளும் நான் அல்ல என்று விசாரித்து, அவைகளும் அனுபவிக்கப்படுகின்ற பொருட்கள்தான் என்று விளக்கம் அளிக்கின்றது.

இது என்னுடைய உடல், இது என்னுடைய மூச்சு, இது என்னுடைய மனம், இது என்னுடைய புத்தி, இது என்னுடைய அறியாமை என்றும், இத்துடன் ஐந்து கோஷங்களும் என்னுடையது என்று அனைத்தையும் அறிகின்ற **“அறிவு”** ஒன்று உண்டு என்றால், அதுதான் அறிபவன் (திருக்), மேற்கண்ட அனைத்தும் அறியப்படுகின்ற

(திருஷ்யம்) அல்லது அனுபவிக்கப்படுகின்ற பொருட்கள் என்று புரிந்துக் கொள்ள வேண்டும்.

அப்படியானால், அறிகின்ற அறிவு, அல்லது அனுபவிப்பவன் யார்? என்ற கேள்வி உண்டாகின்றது.

இங்கு இதுவரை **"நான்"** என்பது **"இந்த உடல்"** என்று அறியாமையில் நினைத்துக் கொண்டிருந்த நிலையில், அதுவும் அனுபவிக்கப்படுகின்ற ஒரு பொருள்தான் என்று சாஸ்திரம் கூறுவதிலிருந்து, அந்த அறிகின்றவனாகிய அல்லது அனுபவிப்பவனாகிய **"நான்"** என்பது **"யார்"** என்ற சந்தேகம் உண்டாவது இயல்பே.

இங்கு எது என்னுடையது என்று கூறுகின்றோமோ, அது நிச்சயமாக **"நான்"** இல்லை. உதாரணமாக இது என்னுடைய வீடு, இது என்னுடைய கடிகாரம், இது என்னுடைய சட்டை என்று எதையெல்லாம் என்னுடையது என்று கூறுகின்றோமோ, அது **"நான்"** இல்லை என்பது நமக்கு நன்றாகத் தெரியும்.

அதுப்போலவே, இது என்னுடைய உடல், என்னுடைய மனது, என்னுடைய புத்தி, என்னுடைய பிராணன், மற்றும் என்னுடைய இந்திரியங்கள் என்று எதையெல்லாம்

என்னுடையது என்று கூறுகின்றோமோ? அதுவும் நிச்சயமாக **“நானாக”** இருக்க முடியாது.

எனவே, இவைகளெல்லாம், என்னுடையது என்றால் அப்பொழுது **“நான்யார்?”** என்ற சந்தேகம் வருகின்றது.

இந்த சந்தேகம் யாருக்கெல்லாம் வருகின்றதோ? அவன் மட்டுமே **“நான்யார்?”** என்று விசாரித்து அறிய முற்படுவான். அப்படி விசாரித்து அறிய விரும்பி பக்கத்து வீட்டுக்காரனிடம் சென்று கேட்டால், அவன் என்ன கூறுவான் என்றால், நீ இன்னாருடைய மகன், மகள், கணவன், மனைவி என்றோ, அல்லது, தொழிலை வைத்து நீ மருத்துவர், வணிகர், காவலர் அல்லது வழக்கறிஞர் என்றோ, சாதியை வைத்து நீ பிராமணன், செட்டியார், கவுண்டர் அல்லது கிருஸ்துவன், முஸ்லீம் என்று உங்களை அடையாளம் காட்டுவார்.

இதைத்தான் சாஸ்திரம் அறியாமை என்று கூறி, எவன் ஒருவன் சாஸ்திரத்தை நாடி **“நான்யார்?”** என்று விசாரித்து அறிய முற்படுகின்றானோ, அவனுக்கே சாஸ்திரம் **“நான்யார்?”** என்ற கேள்விக்கு சரியான அறிவைக் கொடுத்து, **‘நான்’, ‘நான்’** என்று நீ கூறிக்கொண்டிருக்கின்றாயே அது சாட்சாத் **“பரமா(ஆ)த்மா”** என்று அறிவுறுத்துகின்றது.

எங்கும் பரவியுள்ள அந்த பரம்பொருள் உன்னுள்ளே இருந்து இயங்குவதினாலேயே நீ இயங்க முடிகின்றது. நீ, காண்பதும், கேட்பதும், உணவை ருசிப்பதும், உடலில் எறும்பு ஊறுவதை உணர்வதும் ஆக அனைத்துமே அவன் இன்றி ஒரு அணுவும் அசையாது.

அந்த அவன் இல்லையென்றால், எந்த உடலிலும் கண்ணிருந்தும் காணாது, காது இருந்தும் கேட்காது, நாக்கிருந்தும் ருசிக்காது, எறும்பு ஊறுவதை உணராது, ஆக, அது இறந்த பிணம் என்பதை அறிந்துக் கொள்.

இதிலிருந்து என்னுடையது என்பது எதுவும் நானல்ல, எது நானோ அது என்னுடையது இல்லை என்பதை நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

ஆக, மூன்று சரீரங்கள், மூன்று அவஸ்தைகள், ஐந்து கோஷங்கள், ஐந்து பிராணன்கள் மற்றும் ஐந்து இந்திரியங்கள் என இந்த 21 தத்துவங்களும் நான் அல்ல, நான் என்பது ஒன்றேயான அந்த ஏக வஸ்துவான **ஆ(பரமா)த்மா** மட்டுமே என்றும், இந்த அனாத்மாக்களை அறிந்து கொண்டு இவைகளை நீ நீக்கி விட்டால் முடிவில் அந்த ஆத்மாவைத் தவிர எதுவும் இல்லை, அந்த ஆத்மாதான் நீ என்றும் நமக்கு சாஸ்திரம் தெளிவுபடுத்துகின்றது.

உடனே சிஷ்யன் குருவைப் பார்த்து கேட்கின்றான்.

ஆத்மா தர்ஹி க:?

அப்படியானால், **எதுதான் ஆத்மா?**

ஸச்சிதானந்தஸ்வரூப: |

சத் சித் ஆனந்தம்

சச்சிதானந்தமே ஆத்மா என்று குரு பதில் கூறுகின்றார். அதாவது சத், சித், ஆனந்த என்ற மூன்றும் ஆகிய சத் ஸ்வரூபம், சித் ஸ்வரூபம், ஆனந்த ஸ்வரூபம் என்ற இந்த மூன்றும் சேர்ந்ததுதான் ஆத்மா என்று கூறுகின்றார்.

ஸத்கிம்?

**ஸத் என்றால் என்ன?**

காலத்ரயேSபி திஷ்டதீதி ஸத் |

மூன்று காலங்களிலும் இருப்பது எதுவோ? அதுவே **“ஸத்”** ஆகும்.

சித் கிம்?

**சித் என்றால் என்ன?**

ஜ்ஞானஸ்வரூப: |

சித் என்பது **“அறிவு ஸ்வரூபம்”** ஆகும். அதாவது, அறியப்படும் பொருள்கள் மாறுகின்றது, ஆனால், அறிவு எப்பொழுதும் இருக்கின்றது. இந்த அறிவைத்தான், **“சித்ஸ்வரூபம்”** அல்லது **“ஞானஸ்வரூபம்”** என்கின்றோம்.

எந்த ஒன்றினால் அனைத்தையும் ("நான்") அறிகின்றேனோ, அந்த **“நான்”** தான் **“ஆத்மா”** எனப்படும்.

ஆனந்த: க:?

**ஆனந்த என்றால் என்ன?**

ஸுகஸ்வரூப: |

ஏவம் ஸச்சிதானந்த ஸ்வரூபம் ஸ்வாத்மானம் விஜானீ யாத் |

ஆனந்தம் என்பது **“சுகஸ்வரூபம்”** ஆகும். ஆனந்தம் வரையறுக்கப்படாதது. மூன்று காலங்களிலும் எப்பொழுதும் இருப்பதுவும், அனைத்தையும் அறிகின்ற அறிவாகவும் எது இருக்கின்றதோ? அதுவே **“ஆத்மா”** என்றும், அந்த ஆத்மாவானது என்றுமே **“ஆனந்த ஸ்வரூபமே”** ஆகும். எனவே, சத்சித்ஆனந்த ஸ்வரூபமே **“ஆத்மா”** ஆகும்.

ஒரு உதாரணம் வாயிலாக, இன்னும் ஆத்மாவை அறிந்து கொள்ள முயற்சிக்கலாம்.

அதாவது ஜாக்ரத அவஸ்தையில் (விழிப்பு நிலையில்) அறியப்படும் பொருள் இருந்தால் அறிபவனும் இருப்பான். அறியப்படும் பொருள் இல்லையென்றால், அறிபவனும் இல்லை.

இதை எப்படிப் புரிந்து கொள்ளலாம் என்றால், நீங்கள் மழைக்காலத்தில் ஒரு வானவில்லைப் பார்க்கின்றீர்கள். அது அறியப்படும் பொருளாக உங்கள் கண் முன் தோன்றியுள்ளது. உடனே நீங்கள் உங்களது கண்ணின் சக்தியால் அறிபவனாக அதைக் காணுகின்றீர்கள். சிறிது நேரம் கழித்து அந்த வானவில் மறைந்து விடுகின்றது.

இப்பொழுது அறியப்படும் பொருள் இல்லை. அதேப்போல அறிபவனும் இல்லை.

அதாவது, அறிபவனான கண் சக்தியினால்தான் அந்த அறியப்படும் பொருள் (வானவில்) தெரிந்தது, அதே அறிபவனான கண் சக்தியினால்தான் அந்த அறியப்படும் பொருள் (வானவில்) மீண்டும் தெரியவில்லை.

ஆக, அறியப்படும் பொருளும் (வானவில்), அறிபவனும் (கண் சக்தி) இருந்தாலும், அந்த இரண்டையும் அறியும் "அறிவு" ஒன்று வேண்டும். அதுவே **"ஆத்மா"** ஆகும்.

எப்படியென்றால், அதை வானவில் என்று எப்படி அறிந்தீர்கள் என்றால், அதே கண்ணின் சக்தியால்தான் என்றாலும், அந்த அறிபவனாகிய கண் சக்தி அது வானவில் என்று எப்படி தெரிந்து கொண்டது என்றால், உங்கள் உள்ளே உள்ள அறிவு மட்டுமே அதை வானவில் என்று உங்களுக்கு உணர்த்த முடியும்.

அதாவது அறியப்படும் பொருள் தோன்றி மறைந்தது போல, அறிபவனும் தோன்றி மறைந்தான். ஆனால், அந்த அறிபவனுக்குள் இருக்கும் **"அறிவு"** என்றும் மறையாது.

இதில் அறியப்படும் பொருள் வந்து போகும், அறிபவன் வந்து போகலாம், ஆனால், அறிபனிடம் இருக்கின்ற அந்த **“அறிவு”** என்றும் இருக்கும். இந்த அறிவைத்தான் **“சித் ஸ்வரூபம்”** அல்லது "ஞான ஸ்வரூபம்" அல்லது சைதன்ய ஸ்வரூபம் அல்லது **“ஆத்மா”** என்கின்றோம்.

இன்னும் ஒரு உதாரணமாக, ஒரு கார் இருக்கின்றது, அந்த காரை சக்தியுடன் இயக்கக்கூடிய எஞ்சின் அதனுள் பொருத்தப்பட்டுள்ளது. ஆனால், அந்த எஞ்சின் இயங்கி, அந்த கார் இயங்க வேண்டும் என்றால், எரிபொருள் எப்படி மிக,மிக அவசியமோ? அதுப்போல, உடலில் ஐந்து புலன்கள் மட்டும் இருந்து பயனில்லை, அந்த புலன்களினால் அறிந்து கொள்ளக் கூடிய சக்தி இருந்தும் பயனில்லை, அந்த சக்தியைக் கொடுக்கக்கூடிய ஆ(பரமா)த்மா அந்த உடலில் இருக்க வேண்டும். இல்லையென்றால், நிறுத்தி வைக்கப்பட்ட காரைப் போன்றே, இந்த உடலும் ஒரு ஜடப்பொருள்தான்.

இவ்வாறு, ஒரு உடலை இயக்கக்கூடிய அந்த சைதன்ய ஸ்வரூபம் என்றுமே அழியாதது. அது மூன்று காலங்களிலும் என்றும் இருப்பது, அறிவு ஸ்வரூபமானது, ஆனந்த ஸ்வரூபமானது. இது கால, தேசங்களுக்கு அப்பாற்பட்டது. இது எல்லையில்லாதது. எங்கும் இருப்பது, எப்பொழுதும் நிறைவானது. இதுவே **“ஆத்மா”** ஆகும்.

இத்தகைய சச்சிதானந்த ஸ்வரூபமாக எது இருக்கின்றதோ? அதைத்தான் **“நான்”** என்று நம் ஞானத்தினால் அறிய வேண்டும்.

எப்பொழுதும் நம்மை விட்டு அகலாத சுகம் என்பது, அந்த இறைவன் மட்டுமே, என்றும், அவன் ஆத்மாவாகவே அனைத்திலும் ஊடுறுவி இருக்கின்றான் என்பதை எவன் உணர்ந்து கொள்கிறானோ? அவனுக்குப் பெயர் **“பிரம்ம இரசாச வார்த்தி”** என்று சாஸ்திரம் அழைக்கின்றது.

அதாவது, மகரந்தத்தின் சுவையை அனுபவிக்கும் **‘தேனி’** போல, பிரம்ம இரசத்தை அனுபவிக்கும் **‘ஞானி’** என்று சாஸ்திரம் அவனை போற்றுகின்றது.

அப்படிப்பட்டவன் என்றுமே ஆனந்தக் களிப்பில், ஆத்மானந்தத்தில் இருப்பான்.

ஆனந்தோ ப்ரஹ்மேதி வ்யஜானாத் |
ஆனந்தாத்யேவ கல்விமானி பூதானி ஜாயந்தே ||
ஆனந்தேன ஜாதானி ஜீவந்தி |
ஆனந்தம் ப்ரயந்த்யபி ஸம்விசந்தீ ||

உலகில் காணப்படும் எல்லாப்பொருட்களும் ஆனந்த மயமான அந்த பரமா(ஆ)த்மாவைத் தவிர வேறானதொன்று மில்லை என்று வேதங்கள் நமக்கு தெரிவிக்கிறது.

எல்லா ஜீவராசிகளும் அந்த ஆனந்தத்திலிருந்தே வந்திருக்கிறார்கள். அதனாலே எல்லோருக்கும் அந்த ஆனந்தத்தை அடைய வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே இருக்கிறது. ஆனால், உண்மையான ஆனந்தம் எது? என்றுதான் தெரியாமல் இருக்கின்றார்கள்.

உலகில் உள்ள சிறிய எறும்பிலிருந்து அனைத்தையும் படைக்கும், மிகப் பெரிய பிரம்மா முதலான அனைத்தும் ஆனந்தத்தை நோக்கியே பயணிக்கின்றன.

எல்லா ஜீவன்களும் ஏதோ ஒரு ஆசையை வைத்துக் கொண்டே ஜீவிக்கின்றன. எல்லா ஜீவன்களுக்கும் சந்தோஷம் அல்லது சுகம் என்பது முக்கியக் குறிக்கோளாக இருக்கிறது.

மனிதன் தனக்குக் கொடுக்கப்பட்டுள்ள இந்திரியங்கள் மூலமாக சுகங்களை அனுபவிக்கிறான். அதாவது, கண்களால் அழகான காட்சிகளைப் பார்க்கும் போதும், காதுகளால் இனிய இசையைக் கேட்கும் போதும், வாயால் சுவையான பதார்தங்களைச் சுவைக்கும் போதும், மூக்கால் மகரந்தமான

வாசனையை நுகரும் போதும் மகிழ்ச்சியடைந்து சுகத்தை அனுபவிக்கிறான்.

இவ்வாறு எல்லா இந்திரியங்களினாலும் தற்காலிகமான சுகங்களை அனுபவிக்கிறான். அவன் அனுபவிக்கும் சுகத்திற்கு ஒரு எல்லையுண்டு. சுகத்தை அனுபவித்தப் பிறகு, துக்கம் என்பது அவனைத் தொடர்கிறது. இந்தச் சுகத்தையும், துக்கத்தையும் மாறிமாறி அனுபவிக்க நேர்கிறது. அவனுக்கு சுகம் கிடைக்கும்போது சந்தோஷ மடைந்து அதுவே, ஆனந்தம் என்று நினைக்கிறான்.

ஒரு சிந்தாமணியோ, ஒரு கற்பகவிருக்ஷமோ கிடைத்தால்கூட ஒருவன் நினைத்ததைப் பெறமுடியும். ஆனால், அவனால் உண்மையான ஆனந்தத்தை பெற இயலாது.

மனிதன் ஆனந்தத்தை அடைய வேண்டும் என்பதற் காகவே பகவான் இந்த உலகத்தைப் படைத்து, இந்த உலக உயிரினங்களுக்குள் தானும் நுழைந்தான். இதை வேதம் *"ஆனந்த அத்யேவயதேஷ ஆகாஸ ஆனந்தோ தஸ்யாத"* என்பதாகக் கூறுகிறது.

இதற்கு ஆச்சாரியர்கள் விளக்கம் கொடுக்கும்போது, **"ஆனந்தோத்ரேக: கருணாபூர்ணவரப்ரத"** என்று கூறுகிறார்கள்.

அதாவது, பகவானின் விஸ்த்தாரமான சம நோக்குடன் கூடியதான மனமும், தனிச்சிறப்புடன் கூடியதான கருணையும், ஜீவன்களைப் படைத்து ஆனந்தத்தை அறிய வைத்து முக்திக்கு வழிவகுக்கவும்தான், இந்த ஸ்ருஷ்டி மேற் கொள்ளப்படுவதாக அறிகிறோம்.

ஆனந்தமயமான பரமா(ஆ)த்ம ஸ்வரூபத்தை அறிய ஒருவன் எத்தனையோ கோடி ஜன்மங்கள் எடுத்து சாதனைகள் புரியவேண்டும். இந்த சாதனைகளில் இரண்டு விதமுண்டு.

ஒன்று, ஒருவன் தன்னிச்சையாக, ஞானவைராக்கிய பக்தியுடன் அமர்ந்து தவம் செய்து, பகவானை அறிய முற்படுவது. இதற்கு உதாரணமாக, ஸ்ரீபீஷ்மாச்சார்யரைச் சொல்லலாம்.

மற்றொன்று, யதார்த்த பக்தியை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு பகவானை அறிந்துக்கொள்வது. இதற்கு கோபியர்களை உதாரணமாக மேற்கோள் காட்டலாம்.

ஒவ்வொருவரும் தம் ஹிருதயத்தில் வாமனரூபியாக அமர்ந்திருக்கும் பரமா(ஆ)த்மனை அறிந்துக்கொள்வதே ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடியது.

இறைவன் கண்ணுக்கு தெரியாத அந்தர்யாமியாக இருக்கிறார். எனவே அவரை தெரிந்துக் கொள்வது என்பது, ஒரு தனி மனித முயற்சியால் மட்டுமே சாத்தியம் ஆகும்.

எவன் ஒருவன் தன்னைப் பற்றியும், தனக்கு வேறாக இருக்கும் இந்த பிரபஞ்சம் பற்றியும், இந்த இரண்டுக்கும் ஆதாரமான இறைவனைப் பற்றியும் அறியக்கூடிய ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றானோ? அந்த எந்த அளவிற்கு **ஆன்மவியல்** பாடங்களை அவன் கற்றுக் கொள்ளும் வாய்ப்புகளை, அந்த ஈஸ்வரனே சத்குருவாக வந்து, பிரத்யக்ஷயமாக கண்ணுக்கு புலப்படும்படியாக நம்மிடையே நடமாடிக் கொண்டு, நம்மை வழி நடத்திச் செல்கின்றார் என்ற புரிதல் உண்டாக வேண்டும். அதுவே, பாமரன் பரமன் ஆகும் வழி.

அதாவது, நம் ஒவ்வொருவருக்கும் கல்வி எனும் கற்றல் என்பது, ஒரு தனி மனிதனின் சீரிய முயற்சியால் மட்டுமே அடையப்படும் ஒன்று.

இதை, இங்கு திருக்குறள் தரும் செய்தியாகப் பார்க்கலாம்.

**தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு.**

அதாவது, கடற்கரையில் உள்ள பிரம்மாண்டமான மணல் பரப்பில் ஏதேனும் ஒரு இடத்தில், சிறிது தோண்டினால்கூட அங்கு நீர் ஊறும். அதுப்போல, மனிதர்களும் இந்த ஆன்மவியல் கல்வியைக் கற்றுக் கொள்கின்ற அளவிற்கு அவர்கள் அறிவு ஊறும் அல்லது மலரும்.

**கற்றிலன் ஆயினும் கேட்க அஃதுஒருவற்கு**
**ஒற்கத்தின் ஊற்றாம் துணை.**

ஒருவன் தானே முயன்று கற்றுக்கொள்ளும் நிலை கைகூடா விட்டால் கூட, கற்றுக்கொண்டவர்களிடம் கேட்டுக் கொண்டாவது அறிவைப் பெற வேண்டும் என்கின்றது.

அவ்வாறு, அவன் கற்றுக் கொண்ட **ஆன்மவியல்** கல்வியானது அவனது உடலும், மனமும் தளர்ச்சி அடையும் போதுகூட ஊன்றுகோல் உதவுவதுப்போல உதவும்.

**அறிவுடையார் எல்லாம் உடையர் அறிவிலார்**
**என்னுடைய ரேனும் இலர்.**

இந்த அறிவை உடையவர்கள் ஒன்றும் வைத்துக் கொள்ளாதவராயினும், அவரிடம் உள்ள அவ்வறிவால் எல்லாம் உடையவராகிறார்.

அதுவே, அவ்வறிவு இல்லாதவர்கள் எல்லாம் உடையவராக இருப்பினும், ஒன்றும் இல்லாதவராகவே இருக்கிறார் என்கின்றது இக்குறள்.

ஆகவே, நாம் ஒவ்வொருவரும் ஆசிரியர் என்பவர் இன்னார், அவருக்கான இலக்கணம் இது என்று கற்றுக் கொடுக்கும் ஆசிரியரைப் பற்றி அதிகம் ஆராயாமல், அவரைப்பற்றி வரையறை செய்யாமல், யார் யாரெல்லாம் அறிவுடையவர்களோ? அவர்களிடமெல்லாம் அறிவைப் பெற்றுக் கொள்க! என்று பொதுவாகப் பேசுகிறது திருக்குறள்.

# ஈஸ்வர விசாரம்

இதுவரை, **ஜீவ விசாரம்** செய்து முடித்தோம். இனி ஈஸ்வர விசாரத்தை தொடங்கலாம்.

நாம் இதுவரை ஜீவன் என்ற ஒரு தத்துவத்தை **“வியஸ்டி”** (ஒன்று) என்ற முறையில் பல தத்துவங்களுடன் கூடிய அனாத்மாக்களாக விசாரித்து முடித்தோம்.

இனி ஈஸ்வரன் என்ற ஒன்று எப்படி **“சமஸ்டி”** (பலவாக) என்ற முறையில் பல தத்துவங்களாக உற்பத்தியானது என்பதையும் காணலாம்.

**அத சதுர்விம்ஸதி தத்வோத்பத்தி பிரகாரம் வக்ஷ்யாம:**
**ப்ரஹ்மாஸ்ரயா ஸத்வரஜஸ்தமோ குணாத்மிகா மாயா அஸ்தி ||**

இப்பொழுது, 24 தத்துவத்தினுடைய சிருஷ்டி உற்பத்தி பிரகாரத்தைப் பற்றி பார்க்கப்போகின்றோம்.

அதாவது, நாம் பார்த்து அனுபவிக்கின்ற இந்த உலகம் முதற்கொண்டு அனைத்தும் எப்படி தோன்றின? என்ற

**'சிருஷ்டி'** பற்றிய ஒரு தெளிவை, சாங்கிய தத்துவத்தின்படி பார்த்து புரிந்துக் கொள்ளப்பட்டது.

படைத்தவன் (ஈஸ்வரன்) முதற்கொண்டு, படைக்கப்பட்ட அனைத்தும் இந்த 24 தத்துவங்களாக பிரிக்கப்பட்டு, இந்த உலகம் எப்படி தோன்றியது என்பதை இன்னும் சற்று விசாரித்து அறியலாம்.

இந்த ஈஸ்வரன் முதற்கொண்டு, அவனால் படைக்கப்பட்ட அனைத்தும் எப்படி தோன்றின என்பதை நம்முடைய சாஸ்திரம் விளக்குகின்ற அளவிற்கு மற்ற எந்த மத நூல்களும் விளக்கம் கொடுக்க முடியாது.

காரணம், மற்ற அனைத்து மதங்களும் இந்த சனாதன தர்மம் (இது மதம் அல்ல! மார்க்கம்) என்ற ஒரு நீண்ட நெடும் பாதையின் கிளைப் பாதைகள் என்றால் அது மிகையாகாது.

(**குறிப்பு:–** இங்கு ஈஸ்வரன் என்றவுடன் சிவன் என்று அர்த்தம் கொள்ளக்கூடாது. காரணம், இந்து மதத்திலும் நம்மிடையே சில அஞ்ஞானிகளினால் இதுபோன்ற சைவம், வைணவம் என்ற மத பேதங்களை மக்களிடையே புகுத்தி, அதனால் ஆதாயம் அடைய முற்படுபவர்கள் நம்மிடையேயும் காணப்படுகின்றார்கள். நாம் அவர்களிடமிருந்து சற்று விலகி,

சனாதன தர்மத்தின் ஆணிவேராக நம்முடைய சாஸ்திரம் எதைக் கூறுகின்றது என்பதை ஆராய்ந்து அறிவது ஒன்றே நாம் நம்முடைய எதிர்கால இளைய சமுதாயத்தை சரியான பாதையில் அழைத்துச் செல்லும் மகத்தான நற்பணி ஆகும்.)

யாரிடமிருந்து இந்த உலகம் தோன்றியதோ அவனே ஈஸ்வரன். ஈஸ்வரன் என்பவன் சிருஷ்டி கர்த்தா ஆவார்.

அதாவது, ஜீவ விசாரத்தில் நம்மைப் பற்றி விசாரம் செய்யும் பொழுது, நம்முடைய உடல், மனம் மற்றும் புலன்கள் என்று நாம் அறிந்த விஷயங்களை அனுபவித்து எளிதாக புரிந்துக் கொண்டோம்.

ஆனால், இங்கு **ஈஸ்வர விசாரம்** என்று வரும்பொழுது, இந்த வெட்டவெளியையும், பிரபஞ்சத்தையும் மனதளவில் மட்டுமே அறிய முடியுமே தவிர, அனுபவித்து அறிவது என்பது கடினம்.

எனவே இனி, வரும் பகுதிகளைக் கவனத்துடன் படிக்க வேண்டும், அப்பொழுதுதான் எளிதாக புரிந்துக் கொள்ள முடியும்.

நம்மிடையே (ஜீவனிடத்தில்) மூன்று சரீரங்களை பார்த்தோம். அதுப்போல, இந்த முழு பிரபஞ்சத்தையும் இனி மூன்றாகப் பிரிக்கலாம்.
அவைகள் முறையே,

**1. ஸ்தூல பிரபஞ்சம்**
**2. சூக்ஷ்ம பிரபஞ்சம்**
**3. காரண பிரபஞ்சம்** என்ற மூன்று ஆகும்.

நாம் பார்த்து அனுபவிக்கும் அனைத்தும், சூரியன், சந்திரன் மற்றும் இந்த உலகமும் **'ஸ்தூல பிரபஞ்சம்'** ஆகும்.

ஸ்தூல பஞ்சபூதங்கள் தோன்றும் முன்பு சூக்ஷ்ம பஞ்ச பூதங்கள் இருந்த நிலை, மேலும், நம் அனைவருடைய சூக்ஷ்ம மனங்கள் (சமஸ்டி) அனைத்தும் சேர்ந்தது இந்த **'சூக்ஷ்ம பிரபஞ்சம்'** ஆகும்.

ஸ்தூல பிரபஞ்சமும் (உலகம்), சூக்ஷ்ம பிரபஞ்சமும் (சூக்ஷ்ம பஞ்ச பூதங்கள், மற்றும் அனைவரின் மனங்களும்) இரண்டும் தோன்ற காரணமாக எது இருந்ததோ அதுவே **'காரண பிரபஞ்சம்'** ஆகும்.

ஜீவன் (நாம்) ஆனவன் ஆழ்ந்த உறக்க நிலைக்கு போகும் பொழுது, எப்படி உடல், மனம் போன்ற அனைத்தையும் மறந்து காரண ஸரீரத்தில் ஒடுங்குகின்றதோ, அதுப்போலவே, ஈஸ்வரனுக்கும், சிருஷ்டி செய்து முடித்து ஓய்வு தேவைப்படும் பொழுது, இந்த ஸ்தூல பிரபஞ்சமும், சூக்ஷ்ம பிரபஞ்சமும் காரண பிரபஞ்சத்தில் ஒடுங்குகின்றது.

இதைத்தான் **“பிரலயம்”** என்று அழைக்கின்றோம்.

அதாவது, ஜீவன்களாகிய நாம் வேலை செய்து ஓய்வு எடுத்து உறங்கும்போது, காரண சரீரத்தில் ஒடுங்கினால், அதை **“லயம்”** என்றும், ஈஸ்வரன் இந்த சிருஷ்டியை படைத்தது போதும் என்று நிறுத்தி, ஓய்வு எடுத்து உறங்கும் போது காரண பிரபஞ்சத்தில் ஒடுங்கினால், அதை **“பிரலயம்”** என்றும் சாஸ்திரம் அழைக்கின்றது.

இவ்வாறு, ஈஸ்வரன் காரண பிரபஞ்சத்தில் ஒடுங்கும் போது, ஜீவன்களாகிய நம் அனைவருடைய தனித்தனி (வியஸ்டி) காரண ஸரீரங்களும், இந்த ஒட்டுமொத்த (சமஸ்டி) காரண பிரபஞ்சத்தில் சென்று ஒடுங்கி விடுகின்றது.

இந்த காரண பிரபஞ்சத்தைத்தான் சாஸ்திரம் **“மாயா”** என்று அழைக்கின்றது.

மாயா என்றால், “**காரண பிரபஞ்சம்**” என்று பொருள்.

காரண சரீரத்தை “**அவித்யா**” என்று அழைப்பதுப்போல, காரண பிரபஞ்சத்தை “**மாயை**” என்று அழைக்கின்றோம்.

அவித்யா என்றால், அறியாமை என்றும், மாயை என்றால் இருப்பதுப்போல காணப்படும், ஆனால் உண்மையில் இல்லை என்றும் பொருள்.

ஜீவர்களான நம்மிடையே இருக்கும் அறியாமை என்பது, எதை அறிந்துக்கொள்ள வேண்டுமோ? அதை அறிந்துக் கொள்ளாமல், மற்ற தேவையற்ற விசய ஞானங்களில் நம்முடைய மனதையும், புத்தியையும் நுழைத்துக் கொண்டு, மனம் போனபடி, வாழுகின்ற வாழ்க்கையை மட்டுமே **அஞ்ஞானம்** அல்லது **அறியாமை** என்று சாஸ்திரம் கூறுகின்றது.

உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம்
தெள்ளத் தெளிந்தவர்க்குச் சீவன் சிவலிங்கம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
கள்ளப்புலன் ஐந்தும் காளாமணி விளக்கே – திருமூலர்

இறைவன் குடிகொண்டிருக்கும் உள்ளம் என்னும் பெருங்கோயிலாகிய கருவறைக்கு செல்லும் வாசலாகிய இந்த உடம்பு என்னும் ஆலயத்தின் நுழைவாயில்கள் ஆகிய புலன்களைக் காரிருளில் உள்ள கருவறைக்கு வெளிச்சத்தை தருகின்ற விளக்குகள்போலப் பயன்படுத்தி, அதன்வாயிலாக **அன்பே சிவம்** என்று தெள்ளத் தெளிந்தவர்க்கு இந்த சீவன் சிவமாகத் தெரியும் என்கின்றார் திருமூலர் பெருமான்.

அதைவிடுத்து, கள்ளப்புலன்கள் காட்டும் வழியில் கண்டபடி மனம் போனால், கடைசியில் அவன் அழிவைத்தான் அடைய வேண்டும் என்கின்றனர் ஞானிகள்.

**'கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே'** என்று புலன்களை **'கள்ளப் புலன்'** என்றும், அதுவே, அவனது கட்டை அழிக்க வல்லது என்றும் மணிவாசகப் பெருமானும் சுட்டிக் காட்டுகின்றார். அதாவது, நாம் நம் புலன்களை எப்படிப் பயன் படுத்துகின்றோம் என்பதில்தான் எல்லாம் அடங்கி இருக்கின்றது.

விறகில் தீயினன் பாலில்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன் நிற்குமே! – திருநாவுக்கரசர்.

விறகில் உள்ள தீயையும், பாலில் உள்ள நெய்யையும் எப்படி நம்மிடம் உள்ள இந்த சாதாரணப் புலன்களைக் கொண்டு அறிந்துக் கொள்ள முடியாதோ? அதுப்போல, எங்கும் மறைந்து நின்றுக் கொண்டிருக்கின்ற அந்த மாமணிச் சோதியனை நம்மிடம் உள்ள புலன்களால் அறிந்துக் கொள்ள முடியாது. அதுவே, புனிதமான விசயங்களில் புலன்களைப் பயன்படுத்தி, அதன்வாயிலாக உண்டான உள்ளம் அடையும் **அன்பு** உணர்வினால், அந்த ஏக இறைவனும் இரண்டறக் கலந்துவிடவும் முடியும்.

அதனால்தான், **“அன்பே சிவம்”** என்றனர் நம் முன்னோர்கள்.

ஆக, இதிலிருந்து நம்மால் என்ன தெரிந்துக் கொள்ள முடிகின்றது என்றால், **பக்தி** என்றாலும், **அன்பு** என்றாலும், அது அந்த ஆன்மாவை (அறிவை) உணரக்கூடிய உன்னத வழியில் மட்டுமே இருக்க வேண்டும்.

அதைவிடுத்து, கள்ளப்புலன்களின் கட்டுப்பாட்டில், மனம் போன போக்கில் போய்க்கொண்டு, ஆசைகளினால் சூழப்பட்ட மனதிற்கு அதுவேண்டும், இதுவேண்டும் என பக்தி செய்வது, நம்முடைய அறியாமையை காட்டுகின்றது என்றே அறியப்பட வேண்டும்.

# ஈஸ்வரனும், மாயையும்

பரமா(ஆ)த்மாவை அறிய முடியாமல் நம்முடைய அவித்யா என்ற அறியாமையின் வடிவில் மாயை தடுக்கின்றது. இப்படிப்பட்ட இந்த மாயை (காரண பிரபஞ்சம்) என்ற தத்துவத்திலிருந்து தான் இந்த சூக்ஷும பிரபஞ்சமும், ஸ்தூல பிரபஞ்சமும் தோன்றியது. இப்படிப்பட்ட மாயை **"பிரம்மாஸ்ரயா"** என்று அழைக்கப்படுகின்றது. அதாவது, மாயை என்பது பரப்பிரம்மம் என்ற ஒன்றைச் சார்ந்து இருப்பது ஆகும்.

அதாவது, இங்கு சார்ந்து இருப்பது என்பதை எப்படிப் புரிந்துக் கொள்ள வேண்டுமென்றால், நாம் மதிய நேரம் சூரிய ஒளியில் சாலையில் நடந்து செல்லும்போது, நம்முடைய உடலின் நிழல் நம்மைச் சார்ந்து பின் தொடர்வதுப் போல, பரப்பிரம்மம் என்ற ஒன்றிடமிருந்து, அதன் நிழல்போல இந்த மாயை தோன்றியதால், அதுவும் பரப்பிரம்மத்தைச் சார்ந்துதான் இருக்கும் என்று அறிய வேண்டும்.

பரப்பிரம்மம் சுதந்திரமாக தனித்து இருந்தாலும், மாயை அதைச் சார்ந்து இருக்கின்றது என்பது, களிமண்ணிலிருந்து செய்யப்பட்ட பானைகள் களிமண்ணைச் சார்ந்து இருப்பதுப் போல, தங்கத்திலிருந்து செய்யப்பட்ட நகைகள் தங்கத்தைச்

சார்ந்து இருப்பதுப்போல, பரப்பிரம்மத்திலிருந்து தோன்றிய மாயை பரப்பரப்பிரம்மத்தைச் சார்ந்து இருக்கின்றது.

ஆதனால், மாயைக்கு தனித்து நிற்கும் சக்தி கிடையாது. இந்த மாயை பரப்பிரம்மம் போன்று சுதந்திரமாக தனித்து இல்லாததால், இதனை **“மித்யா”** என்று சாஸ்திரம் அழைக்கின்றது.

மித்யா என்பது, ஒன்றை சார்ந்து இருப்பது ஆகும். அதற்கு என்று ஒரு தனித்த சுயம் கிடையாது. அப்படிப்பட்ட மாயை என்ற ஒரு தத்துவத்திடமிருந்துதான் இந்த உலகம் தோன்றியுள்ளது. இந்த உலகம் எந்த தன்மையுடன் விளங்குகின்றதோ? அந்த தன்மையைத்தான் மித்யா என்கின்றோம்.

இந்த மாயையானது தன்னளவில் ஜடமாக உள்ளது. இந்த மாயை பரப்பிரம்மத்தை சார்ந்துள்ளதினால், பரப்பிரம்மத்தினிடம் இருக்கின்ற குணங்களையெல்லாம் தன்னிடம் இருப்பதுப் போலக் காட்டிக்கொள்ளும்.

இதில், இரண்டு தத்துவங்களைப் பரப்பிரம்மத்தினிடம் இருந்து மாயை வாங்கிக் கொண்டு, அதை தன்னிடமிருப்பதுப் போல வெளிப்படுத்திக் காட்டிக்கொள்கின்றது.

அவைகளில், ஒன்று **இருத்தல்** என்ற இருப்பு நிலை (சத்), மற்றொன்று **சைதன்யம்** என்ற சேதனம் அல்லது உணர்வு நிலை. இதைத்தான் **அறிவு** (சித்) என்று கூறுகின்றோம்.

இதில் இருத்தல் (இருப்பு) என்பது பரப்பிரம்மத்தின் **"சத்"** ஸ்வரூபம், சேதனம் (சைதன்யம்) என்பது பரப்பிரம்மத்தின் **"சித்"** ஸ்வரூபம் என்று ஏற்கனவே கண்டோம்.

இந்த இரண்டு குணங்களையும் வாங்கிக்கொண்டு மாயையானது எப்படி வெளிப்படுத்துகின்றது என்றால், சூரியனின் பிரகாசமான ஒளியை ஒரு கண்ணாடி வாங்கிக் கொண்டு, அதை வெளிப்படுத்தும் பொழுது, அந்த சூரிய ஒளியை அந்த கண்ணாடித் தன்னிடம் இருந்து வெளிச்சமாக வெளிப்படுத்துவதுப் போல காட்டிக்கொள்கின்றது. அதுப்போல, மாயை பரப்பிரம்மத்தின் குணங்களை வாங்கிக் கொண்டு, அதைத் தன்னிடமிருந்து வெளிப்படுத்துவதுப்போல காட்டிக் கொள்கின்றது.

இதை எவ்வாறு அறியலாம் என்றால், நாம் ஏற்கனவே கண்டதுப்போல, நாம் நடந்து சென்றால், நம் நிழலும் நடந்து செல்கின்றது. உடனே நம்மைப்போன்றே, நடக்கும் அறிவு

நிழலுக்கு உண்டு என்று, நாம் நிச்சயமாக நம்பமாட்டோம். காரணம், அது நம்முடைய செயலினால் பிரதிபிம்பிக்கின்றது.

அதுப்போல, பரப்பிரம்மத்தின் இருப்பை மற்றும் அறிவை மாயை பிரதிபிம்பிக்கின்றது என்று அறிய வேண்டும்.

அதாவது மாயா என்ற தத்துவம் பரப்பிரம்மத்திடமிருந்து **இருத்தல்** (சத்), **அறிவு** (சித்) என்ற இரண்டு தத்துவங்களை வாங்கிகொண்டு பிரதிபிம்பிக்கின்றது என்பதே உண்மை.

இவ்வாறு பரப்பிரம்மத்தின் இரண்டு குணங்களை வாங்கிக்கொண்டு, வெளிப்படுத்தும் மாயைக்கு மற்றொரு பெயர்தான் **“ஈஸ்வரன்”** என்பதாகும்.

எனவே பரப்பிரம்மத்தின் துணைக்கொண்டு, பிரம்மத்தின் குணங்களான **இருப்பும்** (சத்), **அறிவும்** (சித்) தன்னுடைய ஸ்வரூபமாக வெளிப்படுத்துகின்ற மாயைக்கு **“ஈஸ்வரன்”** என்று பெயர். அதாவது பரப்பிரம்மத்துடன் கலந்த சிருஷ்டிகர்த்தாவான மாயையே ஈஸ்வரன் என்பதாகும். **பிரம்மனும், மாயையும் சேர்ந்தது ஈஸ்வரன்** என்பதாகப் புரிந்துக் கொள்ள வேண்டும்.

மாயைக்குள் இருக்கின்ற அறிவு ஸ்வரூபமான ஈஸ்வரன் இந்த உலகத்தைப் படைத்தார் என்பதை அறிந்துக் கொண்டு, இப்படிப் படைக்கப்பட்ட இந்த பிரபஞ்சத்தில் கோடாணுகோடி விண்மீன்களும், கோள்களும், சூரிய, சந்திரன்களும் இருப்பதுப்போல, இந்த பிரபஞ்சத்தில் பூமியில் மனிதர்களாக அந்தப் பரப்பிரம்மத்தின் **இருப்பு** (சத்), **அறிவு** (சித்), மற்றும் **ஆனந்தம்** ஆகிய இந்த மூன்று குணங்களையும் பிரதிபிம்பிக்கின்ற ஒரு உபாதியாக, ஜீவர்களாகிய நாமும் இருக்கின்றோம். அப்படிப்பட்ட நாம் நம்மை அறிந்து கொண்டால், மற்ற அனைத்தையும் எளிதில் அறிந்து கொள்ளலாம் என்பதை நம் ஆன்றோர்கள் அறிவுறுத்துகின்றார்கள்.

தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தானிருந்தானே. – திருமூலர்.

அதன் அடிப்படையில் மனித ஜீவர்களாகிய நாம் பெற்ற அந்த அறிவின் துணைக்கொண்டு, சாஸ்திரத்தினை கற்றறிந்து, அதன் வாயிலாக **ஈஸ்வரன், ஜீவன்,** மற்றும் இந்த **பிரபஞ்சம்** ஆகியவைகளை சரியாகப் புரிந்துக் கொண்டு, தன் மூலமாகவே இந்த மாயையின் (ஈஸ்வரனின்) துணைக் கொண்டு, பரப்பிரம்மத்தை அறிய முயற்சிக்கும் அரிதான

வித்தைக்குத்தான் (கல்விக்குத்தான்) **“பராவித்யா”** அல்லது “**பிரம்மவித்யா”** என்று பெயர்.

இதில், பிரம்மம் என்பது **நிர்குணம்.** மாயை என்பது **சற்குணம்** எனப்படுகின்றது. ஆக, பிரம்மம் சத்தியம், மாயை மித்யா என்றும் பார்த்தோம். எதனுடைய இருப்புக்கு எந்த ஒரு சார்பும் இல்லையோ? அது பிரம்மம். எதனுடைய இருப்புக்கு இன்னொன்றை சார்ந்து இருக்கின்றதோ அது மித்யா அல்லது மாயை.

ஆக, இந்த மாயை பிரம்மத்தைச் சார்ந்து இருக்கின்றது. மேலும், இந்த மாயை மாற்றத்தை அடைந்து சிருஷ்டியாக வெளிப்பட்டவுடன் மூன்று குணங்களையுடைய, ஈஸ்வரனின் உடலாக இருக்கின்றது.

இங்கு இதை மாயையாகப்பார்த்தால் **“அனித்யம் அசுகம் லோகம்”** என்று இந்த உலகம் நிலையற்றது, சுகங்களற்றது என்றும், ஈஸ்வரனாகப் பார்த்தால், நானே இந்த உலகமாக இருக்கின்றேன். இந்த உலகத்தில் உள்ள அனைத்தும் நானே என்றும் பகவான் கிருஷ்ணர் கிதையில் கூறியுள்ளதை புரிந்து கொள்ள வேண்டும். இந்த உலகத்தை கீழானது, மிகவும் மோசமானது என்று ஒதுக்கவும் செய்யலாம். அல்லது இந்த உலகத்தை ஈஸ்வரனாகப் பார்த்து வணங்கவும் செய்யலாம்.

இந்த இடத்தில், இதை எப்படிப் புரிந்துக்கொள்ள வேண்டும் என்றால், நமக்கு இந்த உலகத்தின் மீது, அதிகமான ஈர்ப்பு உண்டாகி, அதன் வாயிலாக, மோகம் (ஆசை) கொண்டோமானால் இதை **“மித்யா”** என்று ஒதுக்க வேண்டும். அதுவே, இந்த உலகம் நிலையற்றது, சாஸ்வதம் கிடையாது, என்று குரோதம் (வெறுப்பு) கொண்டோமானால், இதை ஈஸ்வரனாகப் பார்த்து அனைத்தையும் வழிபட வேண்டும்.

பொதுவாக, நாம் நம்முடைய நடைமுறை வாழ்க்கையில் ஒன்று விருப்பம் வைப்போம் அல்லது வெறுப்பு வைப்போம். நமக்கு வேண்டியவர்களுடன் ஆசை வைத்து அவர்களுடன் விருப்பமுடன் இருப்போம். அல்லது நமக்கு வேண்டாதவர்கள் என்று சிலருடன் வெறுப்பு வைத்து அவர்களுடன் சண்டையிட்டுக்கொண்டு இருப்போம்.

இங்கு நம்முடைய புரிதல்தான் மிக முக்கியம். அதாவது, நாம் எதனுடனும் பற்று இன்றியும், அதேசமயம் எதனுடனும் வெறுப்பும் இன்றியும், இருமைகள் இல்லாத சமமான மன நிலையில் வாழ்வது என்பது மட்டுமே **சாட்சி பாவனையுடன்** கூடிய, உண்மை நிலை என்பதை அறிந்துக் கொள்ள வேண்டும்.

# தத்துவங்கள்

இந்த மாயையிடமிருந்து ஏற்பட்ட மாற்றத்தினால், இந்த உலகம் எப்படி தோன்றியது? என்று பார்த்தால், இந்த சிருஷ்டியானது நான்கு நிலைகளாக உண்டாகியுள்ளது. அதில் முதலில் சூக்ஷ்ம பஞ்சபூத சிருஷ்டியாகவும், பிறகு, சூக்ஷ்ம சரீரங்களாகவும், அதன்பிறகு ஸ்தூல பஞ்சபூத சிருஷ்டியாகவும், அதன்பிறகு ஸ்தூல சரீரங்களாகவும் நான்கு நிலைகளாகத் தோன்றியுள்ளது.

இப்படிப்பட்ட இந்த நான்கு நிலைகளில் உண்டான இந்த உலகம் 24 தத்துவங்களை உடையது. ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், மற்றும் மண் என்ற ஐந்து சூக்ஷ்ம பூதங்களிடமிருந்து 19 சூக்ஷ்ம சரீரங்கள் வருகின்றது.

தத: ஆகாஸ: ஸம்பூத: | ஆகாஸாத்வாயு | வாயோஸ்தேஜ: |
தேஜஸஆப: | அத்ப்ய: பிருத்வி: |

மாயையுடன் சப்தத்தை சேர்க்கும் பொழுது ஆகாசம் தோன்றியது. இந்த ஆகாசத்துடன் ஸ்பரிசம் என்ற தொடு உணர்வு சேரும்பொழுது வாயுவும், இந்த வாயுவுடன் ரூபம் என்ற காட்சி சேரும்பொழுது அக்னியும், அக்னியுடன் ரஸம்

என்ற சுவை சேரும்பொழுது நீரும், நீருடன் கந்தகம் என்ற மணம் சேரும்பொழுது, பிருத்வி என்ற மண்ணும் ஆகிய **ஸப்த, ஸபரிச, ரச, ரூப, கந்த** மென்னும் ஐந்தும் **"பஞ்ச தன்மாத்திரைகள்"** எனும், ஐந்து குணங்களும் கொண்டதாக, இந்த 24 தத்துவங்கள் மூலம், இந்த சிருஷ்டி உண்டானது.

ஏதேஷாம் பஞ்சதத்த்வானாம் மத்யே ஆகாஸஸ்யஸாத்
விகாம்ஸாத் ஸ்ரோத்ரேந்திரியம் ஸம்பூதம் |
வாயோ: ஸாத்விகாம்ஸாத் த்வ கிந்திரியம் ஸம்பூதம் |
அக்னே: ஸாத்விகாம்ஸாத் ஸக்ஷுரிந்திரியம் ஸம்பூதம் |
ஜலஸ்ய ஸாத்விகாம்ஸாத் ரஸனேந்த்ரியம் ஸம்பூதம் |
ப்ருதிவ்யா: ஸாத்விகாம்ஸாத் க்ராணேந்த்ரியம் ஸம்பூதம் |
ஏதேஷாம் பஞ்சதத்த்வானாம் ஸமஷ்டி ஸாத்விகாம்ஸாத்
மனோபுத்தயஹங்காரசித்தாந்த: கரணானி ஸம்பூதானி |

ஆகாசத்தின் சத்வகுண தத்துவத்திலிருந்து ஞானேந்திரியங்களும் ரஜஸ் எனும் குணத்திலிருந்து, பிராணன் மற்றும் கர்மேந்திரியங்களும், தமோ குணத்திலிருந்து ஸ்தூல, சூக்ஷும சரீரங்களும் தோன்றுகின்றன.

ஐந்து ஞானேந்திரியங்களும், ஐந்து பூதங்களின் சத்வ அம்சத்திலிருந்து தோன்றின.

ஆகாசத்தின் சத்வ அம்சத்திலிருந்து ஸ்தோத்திர இந்திரியமான கேட்கும் சக்தியும், வாயுவின் சத்வ அம்சத்திலிருந்து தொடு உணர்ச்சி சக்தியும், அக்னி சத்வ அம்சத்திலிருந்து ரூபமும், நீரின் சத்வ அம்சத்திலிருந்து சுவைக்கும் சக்தியும், பூமியின் சத்வ அம்சத்திலிருந்து நுகரும் சக்தியும் தோன்றின.

ஐந்து பூதங்களின் சத்வ அம்சம் சேர்ந்து **மனம், புத்தி, அஹங்காரம்** மற்றும் **சித்தம்** முதலிய அந்தக்கரணம் தோன்றியது.

**ஸங்கல்ப விகல்பாத்மகம் மன:**

ஆசைப்படும் பொருளை நினைத்துக் கொண்டே இருப்பது **சங்கல்பம்.** சஞ்சலப்படுவது **விகல்பம்**. சஞ்சலமும், ஆசையையும் கொண்டது **மனம்** ஆகும்.

**நிஸ்சயாத்மிகா புத்தி:**

இதுதுதான் என்று நிர்ணயிப்பது புத்தி ஆகும்.

**அஹம்கர்த்தா அஹங்காரஹ: |**

நான் செய்கின்றேன் என்று நினைப்பது அஹங்காரம் ஆகும்.

**சிந்தனகர்த்ரு சித்தம் |**

மனதில் ஏற்படும் பதிவுகள் சித்தம் ஆகும்.

**மனஸோ தேவதா சந்த்ரமா: | புத்தே: பிரம்மா | அஹங்காரஸ்ய ருத்ர: | ஸித்தஸ்ய வாஸுதேவ: |**

மனதிற்கு அதிர்ஷ்டான தேவதை சந்திரன். புத்திக்கு அதிர்ஷ்டான தேவதை பிரம்மா. அஹங்காரத்திற்கு அதிர்ஷ்டான தேவதை ருத்ரன். சித்தத்திற்கு அதிர்ஷ்டான தேவதை வாஸுதேவன்.

ஏதேஷாம் பஞ்ச தத்த்வானாம் மத்யே ஆகாஸஸ்ய ராஜஸாம்யாத் வாக்கிந்திரியம் ஸம்பூதம் |
வாயோ: ராஜஸாம்யாத் பாணிந்திரியம் ஸம்பூதம் |
அக்னே: விஷய: ராஜஸாம்யாத் பாதேந்திரியம் ஸம்பூதம் |
ஜலஸ்ய ராஜஸாம்யாத் குதேந்த்ரியம் ஸம்பூதம் |
ப்ருதிவ்யா: ராஜஸாம்யாத் உபஸ்தேந்திரியம் ஸம்பூதம் |
ஏதேஷாம் ஸமஷ்டி ராஜஸாம்யாத் பஞ்சப்ராணா: ஸம்பூதா: |

ஐந்து பூதங்களின் ரஜோ குணத்திலிருந்து ஐந்து கர்மேந்திரியங்கள் தோன்றின. ஆகாசத்தின் ரஜோ குணத்திலிருந்து பேசும் சக்தியான வாக்கும், வாயுவின் ரஜோ குணத்திலிருந்து கைகளும், அக்னியின் ரஜோ குணத்திலிருந்து கால்களின் நடக்கும் சக்தி, நீரின் ரஜோ குணத்திலிருந்து சிறு நீர் கழிக்கும் சக்தியும், பூமியின் ரஜோ குணத்திலிருந்து உபஸ்தம் தோன்றின.

**ஏதேஷாம் பஞ்சதத்த்வானாம் தாமஸாம்ஸாத்**
**பஞ்சீக்ருத பஞ்சதத்வானி பவந்தி |**

பஞ்சீகரணம் கதம் இதிசேத் |
ஏதேஷாம் பஞ்ச தத்வானாம் தாமஸாம்ஸ ஸ்வரூபம் |
ஏகமேகம் பூதம் த்விதா விபஜ்ய ஏகமேகமர்தம் ப்ருதக் தூஷ்ணீம் வ்யவஸ்தாப்ய அபரம பரமர்தம் சதுர்தாம் விபஜ்ய ஸ்வார்த்த பின்னேஷு அன்யேஷு அர்தேஷு ஸ்வபாக
சதுஷ்டய ஸம்யோஜனம் பஞ்சீகரணம் பவதி |

பஞ்சீகரணம் என்பது பஞ்சபூதங்களின் தாமஸ அம்சங்கள் ஒவ்வொன்றும் முதலில் இரு பாதிகளாகப் பிரிக்கப் படுகின்றது. ஒருபாதி அப்படியே வைத்துக்கொள்ளப்படுகின்றது. மற்றொரு பாதி நான்கு பாகங்களாகப் பிரிக்கப்படுகின்றது. பிரிக்கப்பட்ட ஒவ்வொரு பாகமும் 1/8 என்ற பாகங்கள்.

ஒவ்வொன்றும் மற்ற நான்கு பூதங்களின் அரை பாகங்களுடன் சேர்வதே **“பஞ்சீகரணம்”** எனப்படும்.

**எதேப்ய: பஞ்சீக்ருத பஞ்சமஹா பூதேப்ய: ஸ்தூல ஸரீரம் பவதி |**
**ஏவம் பிண்ட பிரஹ்மாண்ட யோரைக்யம் ஸம்பூதம் ||**

இந்த பஞ்சீகரணத்திற்கு பிறகு, பஞ்ச பூதங்கள் தோன்றி, அதன்பிறகு ஸ்தூல சரீரங்கள் தோன்றுகின்றன.

ஸ்தூல ஸரீராபிமானி ஜிவநாமகம் ப்ரஹ்ம ப்ரதிபிம்பம் பவதி |
ஸ ஏவ ஜீவ: ப்ரக்ருத்யாஸ் வஸ்மாத் ஈஸ்வரம் பின்னத்வேன ஜானாதி |
அவித்யோபாதி: ஸன் ஆத்மா ஜிவ இத்யுச்சதே
ஏவம் உபாதி பேதாத் ஜீவேஸ்வர பேதத்ருஷ்டி: யாவத் பர்யந்தம் திஷ்டதி தாவத் பர்யந்தம் ஜன்ம மரணாதி ரூப ஸம்ஸாரோ ந நிவர்ததே |

காரண பிரபஞ்சத்தையே மாயா அல்லது அவித்யா என்று சொல்கிறோம்.

**மாயாவின் தன்மை என்ன?**

1. பிரமாஸ்ரயா மாயா. பிரம்மனைச் சார்ந்திருப்பது மாயா.

2. மாயையை மித்யா ஸ்வரூபம் என்கிறோம்.

மித்யா பிரம்மனை சார்ந்து உள்ளது. மாயை ஜடம். அது பிரம்மனிடம் உள்ள சில குணங்களை தன்னிடம் உள்ளதுப் போல காட்டிச் செயல்படுகின்றது. மாயை பிரம்மனிடமிருந்து பொய்யாக தன் இருப்பை வாங்கியுள்ளது. பிரம்மனுடைய ஸ்வரூபம் **சத் சித் ஆனந்த** ஸ்வரூபம்.

இதில் மாயா பிரம்மனிடம் உள்ள குணங்களை ஒரு கண்ணாடியானது சூரியனுடைய பிரதிபிம்பத்தை வாங்கி காட்டுவதுப்போல, பிரம்மனின் குணங்களை காட்டிக் கொள்கின்றது.

அவித்யா என்ற உபாதியால், ஆத்மாவிற்கு “இவன்” என்ற பெயர் உண்டாகின்றது. மாயா என்ற உபாதியால் ஆத்மாவிற்கு **“ஈஸ்வரன்**” என்ற பெயர் உண்டாகின்றது.

எந்த ஒன்று மற்றொன்றின் மீது ஏறிக்கொண்டு, தன் தன்மைகளை அதற்குள் பொய்யாக புகுத்துமோ? அது **“உபாதி”** எனப்படும். உதாரணமாக, ஒரு கண்ணாடி ஸ்படிகத்தின் அருகில், சிவப்பு நிறம் கொண்ட பூவை வைத்தால் ஸ்படிகம் சிவப்பு நிறத்தைக் கொண்டதுப் போல காணப்படும். இந்த இடத்தில் சிவந்த மலர்தான் **உபாதி** என்று புரிந்துக் கொள்ள வேண்டும். மாயையில் பிரதிபலிக்கும் சைதன்யம் **“ஈஸ்வரன்”.**

பிரம்மத்தினுடைய பிரதிபலிப்பு ஈஸ்வரனாகவும், ஜீவனாகவும் இரு வேறு, வேறு தத்துவங்கள் இருப்பதுப்போல தோன்றுகின்றது. இந்த வேற்றுமை எவ்வளவு காலம் இருக்குமோ? அவ்வளவு காலம் நமக்கு சம்சாரம் இருக்கும்.

உபாதி வேற்றுமையால் ஜிவனும், ஈஸ்வரனும் வேறு, வேறு என்ற எண்ணம் இருக்கும் வரை, சம்சாரம் நீங்காது. அந்த சம்சாரம் நீங்கும்வரை, ஜீவனுக்கு தொடர்ந்து **பிறப்பு, இறப்பு** இருந்துக் கொண்டே இருக்கும்.

**தஸ்மாத் காரணான் நஜீவாஸ்வரயோர் பேபுத்தி: ஸ்வீகார்யா |**

ஆகையால், ஜீவ – ஈஸ்வர வேற்றுமையை ஏற்றுக் கொள்ளக்கூடாது.

# ஜீவனும், ஈஸ்வரனும்

நனு ஸாஹங்காரஸ்ய கிஞ்சிஜ்ஞஸ்ய ஜீவஸ்ய நிரஹங்காரஸ்ய ஸர்வஜ்ஞஸ்ய ஈஸ்வரஸ்ய தத்வமஸீதி மஹாவாக்யாத்கத்ம பேதபுத்தி: ஸ்யாதுபயோ: விருத்த: தர்மாக்ராந்தத்வாத் |

ஜீவனுக்கும், ஈஸ்வரனுக்கும் இரண்டுவித உறவுகள் உள்ளது. ஈஸ்வரன் உலகத்தைப் படைத்தவர், நாம் படைக்கப்பட்டவர்கள். நாம் கர்மம் செய்பவர்கள், ஈஸ்வரன் கர்மத்தின் பலனைக் கொடுப்பவர். ஈஸ்வரன் ஆட்சி செய்பவர். நாம் ஆளப்படுபவர்கள். நாம் பந்தப்பட்டவர்கள், ஈஸ்வரன் முக்தன். பிரபஞ்சத்தின் அனைத்து நியதிகளும் ஈஸ்வரனுக்கு உட்பட்டு உள்ளன.

ஜீவனிடம் இருக்கின்ற காரண, சூக்ஷ்ம, ஸ்தூல சரீரங்களான அனாத்மா என்பது, ஆத்மாவை ஆதாரமாகக் கொண்டுள்ளது. இப்படிப்பட்ட ஆத்மாவும், அனாத்மாவும் சேர்ந்தது **ஜீவன்** ஆகும்.

ஆத்மா நித்யஸ்வரூபம், என்றும் அழியாதது. ஆத்மா சத், சித், அறிவு ஸ்வரூபம்.

காரண சரீரத்தினுள் ஜீவனின் புண்ணிய பாவங்கள் உள்ளன. சூக்ஷ்ம சரீரம் சைதன்யத்தைப் பிரதிபலிக்கும் சக்தி கொண்டுள்ளது.

கண்ணாடி சூரிய பிம்பத்தை பிரதிபிம்பிக்கின்றதுப் போல **'சித்'** நம் மனதில் பிரதிபலிக்கும்பொழுது அது **'சிதாபாசம்'** எனப்படுகின்றது.

மனது ஜடம். ஆனால் **'சித்'** என்ற ஆத்மாவின் பிரதிபிம்பம் (சிதாபாசம்) மனதில் பிரதிபிம்பிக்கும் பொழுது மனது உணர்வு ரூபமாக மாறுகின்றது.

ஒரு ஜீவன் இறக்கும் பொழுது சிதாபாசமும், சூக்ஷ்ம சரீரமும் ஸ்தூல சரீரத்தை விட்டுப் போய்விடுகின்றன. ஜீவன் உயிருடன் இருக்கும்பொழுது சிதாபாசம் உடலுக்கு உணர்வைக் கொடுத்து, உலகை அனுபவிக்க வைக்கின்றது.

காரண சரீரத்திற்கும், மாயைக்கும் உபாதி என்ற பெயரும் உள்ளது. அனாத்மாவை உபாதி என்றும் அழைக்கின்றோம். ஆத்மாவைத் தவிர அனைத்தும் உபாதி.

ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண சரீரங்கள் மற்றும் மாயை முதலியவைகள் தங்களுடைய குணங்களை ஆத்மாவின் குணங்கள் போன்று காட்டுகின்றன.

ஈஸ்வர தத்துவத்தை இனியும் சிறிது விளக்கமாகவும், எளிமையாகவும் காணலாம்.

பரப்பிரம்மத்தைச் சார்ந்து **மாயா** என்ற ஒரு தத்துவம் இருக்கின்றது. அந்த மாயா என்ற ஒரு தத்துவம் பிரம்மத்தைச் சார்ந்து இருப்பதினால், அது சுதந்திரமாக இருக்கின்ற சக்தி அற்றதாக இருக்கின்றது.

இப்படிப்பட்ட மாயைக்கு **சத், ரஜஸ், தமஸ்** என்ற மூன்று குணங்கள் இருக்கின்றன.

இப்படிப்பட்ட மாயையிலிருந்து இந்த சிருஷ்டியானது தோன்றுகின்றது. அதாவது மாயையின் மாறுபாடாக இந்த உலகம் வந்துள்ளது. இப்படிப்பட்ட இந்த மாயையும், பிரம்மமும் சேர்ந்ததுதான் **ஈஸ்வரன்** ஆகும்.

ஆகவே ஈஸ்வரனின் உடல் இந்த மாயை என்றால், ஈஸ்வரனின் உடலே இந்த உலகம் என்று புரிந்துக் கொள்ள வேண்டும்.

இப்படிப்பட்ட இந்த உலகம் முதலில் மாயையிடமிருந்து சூக்ஷ்மமான ஆகாசம் என்ற பூதமாக மாறியது. பிறகு, அந்த ஆகாசத்திடமிருந்து **வாயு, அக்னி, நீர், நிலம்** என்று படிப்படியாக ஐந்து சூக்ஷ்ம பூதங்கள் உண்டாயின. இப்பொழுது இவ்வாறு வெளிப்பட்ட ஐந்து சூக்ஷ்மமான பூதங்கள் மாயையிடம் உள்ள **சத், ரஜஸ்** மற்றும் **தமஸ்** என்ற அந்த மூன்று குணங்களைக் கொண்டிருக்கும்.

இப்படிப்பட்ட ஒவ்வொரு பூதத்திடம் உள்ள சத்துவ குணத்திடமிருந்து, **ஐந்து ஞானேந்திரியங்கள்** தோன்றின. அதற்குப்பிறகு, ஐந்து பூதங்களின் ஒட்டுமொத்தமான சத்துவ குணத்திடமிருந்து **மனம், சித்தம், புத்தி, அஹங்காரம்** என்ற அந்தக்கரணங்கள் தோன்றின. இத்துடன் சத்துவத்தின் காரியம் முடிவடைந்தது.

அடுத்து, ஒவ்வொரு பூதத்திடம் உள்ள ரஜோ குணத்திடமிருந்து ஐந்து கர்மேந்திரியங்கள் தோன்றின. அதற்குப்பிறகு, ஐந்து பூதங்களின் ஒட்டுமொத்தமான ரஜோ குணத்திடமிருந்து ஐந்து பிராண தத்துவங்கள் தோன்றின.

இதன்பிறகு, சூக்ஷ்மமான ஐந்து பூதங்களிடமிருந்து மீதமுள்ள தமோ குணம் அம்சத்திலிருந்து நாம் பார்த்து அனுபவிக்கின்ற இந்த **ஸ்தூல பஞ்ச பூதங்கள்** தோன்றின.

இவ்வாறு பஞ்ச பூதங்களின் கலப்பைத்தான் **“பஞ்சீகரணம்”** என்று ஏற்கனவே பார்த்தோம்.

இவ்வாறு தோன்றிய பஞ்ச ஸ்தூல பூதங்களிடமிருந்து ஸ்தூல சரீரங்கள் தோன்றியுள்ளன. அதாவது இந்த ஸ்தூல பஞ்ச பூதங்களிடமிருந்து இந்த உயிர்கள் வாழுகின்ற புவனம் என்ற இந்த பூமி உண்டாகியுள்ளன.

மேலும், பஞ்ச பூதங்களின் விகித்தாச்சார கலவை இந்த பூமியில் மட்டுமே உயிர்கள் வாழத்தகுதியாக இருக்கின்றன. மற்ற கிரகங்களில் இதுப்போன்ற ஸ்தூல தேகம் கொண்ட உயிரினங்கள் வாழக்கூடிய சூழல் இல்லை என்பதை இன்றைய நவீன அறிவியலும் ஒப்புக்கொள்கின்றது.

விஞ்ஞானம் வளர ஆரம்பிக்கும் முன்பே நம்முடைய மெய்ஞ்ஞானிகளாகிய முன்னோர்கள் இதை பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே அறிந்திருந்தனர்.

இப்படிப்பட்ட ஸ்தூல பஞ்ச பூதங்கள்தான் அண்டத்தில் உள்ளதைப்போல, இந்த ஸ்தூல தேகமான நம்முடைய பிண்டத்திலும் காண முடிகின்றது.

அண்டம் என்றால், இந்த உலகம், பிண்டம் என்றால், நம்முடைய இந்த உடல். ஆகவே, ஈஸ்வனின் உடலாகிய பஞ்ச பூதங்களால் ஆன இந்த உலகமே, நமக்கும் பஞ்ச பூதங்களால் ஆன உடலாக இருக்கின்றது என்பதை அறியும் பொழுது, நாம் ஈஸ்வனிடத்திலிருந்து வேறுபட்டவர்கள் அல்ல என்பதும் புலனாகின்றது.

இதை ஜீவ, ஈஸ்வர ஐக்கிய விசாரம் என்றும் அழைக்கலாம். தத்துவ விசாரத்தில் மூன்று விஷயங்களை எடுத்துக்கொண்டு விசாரம் செய்தோம். அவைகள் **ஈஸ்வரன், ஜீவன்** மற்றும் **ஜகத்** என்ற இந்த மூன்று விஷயங்களின் உண்மைத்தன்மை என்ன? இதில் நான் யார்? இந்த உலகம் எப்படிப்பட்டது? போன்ற விஷயங்களை பார்த்துவருகின்றோம்.

# மஹா வாக்கிய விசாரம்

இங்கு ஜீவனுக்கும், ஈஸ்வரனுக்கும் என்ன சம்பந்தம் உள்ளது என்பதை இனி பார்க்க உள்ளோம். ஜீவனாகிய நமக்கும், இந்த உலகத்தையும், நம்மையும் படைத்த ஈஸ்வனுக்கும் என்ன தொடர்பு உள்ளது? என்பதை ஆராய்வதே இந்த மஹா வாக்கிய விசாரம் ஆகும்.

நமக்கும், ஈஸ்வரனுக்கும் இடையே நாம் இரண்டு விதமான உறவு முறைகளைப் பார்க்கப் போகின்றோம்.

அதில் ஈஸ்வரன் படைப்பவர். நாம் அவரால் படைக்கப்பட்டவர்கள். நாம் கர்மம் செய்பவர்கள், ஈஸ்வரன் அந்த கர்மத்திற்கு ஏற்ற பலனைக் கொடுக்கின்ற கர்மபல தாதாவாக ஈஸ்வரன் உள்ளார் என்று அறிவோம்.

ஈஸ்வரன் ஆட்சி செய்பவர். நாம் அவருக்கு கீழ் ஆளப்படுபவர்கள். ஈஸ்வரன் எதிலும் பந்தப்படாத முக்தர். நாம் அனைத்திலும் பந்தப் பட்டுக்கொண்டுள்ள பக்தர்கள். இது போல எண்ணற்ற வேற்றுமைகள் நமக்கும், ஈஸ்வரனுக்கும் உள்ளது.

இதுப்போல ஜீவனாகிய நமக்கும், பரமாத்மாவாகிய ஈஸ்வனுக்கும் துவைத பேதத்துடன் கூடிய வேற்றுமைகள் பல காணப்படுகின்றன. இதுப்போன்ற ஒரு உறவு முறையில்தான் நாம் ஈஸ்வரனை பக்தி செய்கின்றோம்.

இனி இன்னொரு அடிப்படையில் ஜீவர்களாகிய நமக்கும் ஈஸ்வரனுக்கும் உள்ள உறவு முறையைப் பார்க்கலாம்.

முதலில் ஜீவன் என்ற சொல்லை எடுத்துக் கொண்டு மீண்டும் விசாரத்தில் ஈடுபட உள்ளோம். இந்த ஜீவனிடத்தில் அனாத்மாவாகிய **ஸ்தூல, சூக்ஷ்ம, காரண** சரீரங்கள் உள்ளன.

இந்த மூன்றும் **'ஆத்மா'** என்ற ஒன்றை ஆதாரமாகக் கொண்டுதான் இருக்கின்றன. என்றும் ஏற்கனவே பார்த்தோம்.

இதில் ஆத்மா என்பது நித்தியமானது, சத்தியமானது, அழியாதது. இது சித் ஸ்வரூபம் அல்லது அறிவு ஸ்வரூபம் என்றும் பார்த்தோம்.

இந்த ஆத்மாவிடம் காரண சரீரம் மற்றும் சூக்ஷ்ம சரீரம் என்ற இரண்டு சரீரங்கள் உள்ளன. இதில் மாயையின் சிறு

அணுவாக உள்ள காரண சரீரத்திடமிருந்துதான் சூக்ஷ்ம சரீரம் வருகின்றது.

ஆத்மா எல்லா இடத்தில் நிறைந்து இருந்தாலும் இந்த சூக்ஷ்ம சரீரத்திடமிருந்துதான் ஆத்மாவின் அறிவு வெளிப்படு கின்றது.

உதாரணமாக சூரியனின் ஒளி எல்லா இடங்களிலும் நிறைந்து இருந்தாலும், அது ஒரு கண்ணாடித் துண்டு என்ற உபாதியில் பட்டு ஒரு சிறு பிரகாசமாக பிரதிபிம்பிப்பதுப்போல, ஆத்மா அறிவு ஸ்வரூபமாக எல்லா இடங்களிலும் நிறைந்து இருந்தாலும், அது ஜீவனிடத்தில் உள்ள சூக்ஷ்ம சரீரமான மனம் என்ற உபாதியின் வாயிலாக ஜீவனின் சிற்றறிவாக வெளிப்படுகின்றது.

அதாவது, ஆத்மாவினுடைய சித் என்ற ஒரு அறிவு ஸ்வரூபம் ஜடமான சூக்ஷ்ம சரீரமான மனதினிடத்தில் வியாபிக்கும் போது, **“சிதாபாசம்”** என்று அழைக்கப்படுகின்றது.

ஆதாவது ஆபாசம் என்றால் சஸ்க்ருதத்தில் போலியான, அல்லது பொய்யான என்று பெயர். ஆக, சிதாபாஸம் என்றால் **போலியான அறிவு** என்று பெயர்.

இப்பொழுது ஜடமான சூக்ஷ்ம சரீரமான மனம் சிதாபாசத்தினால் ஒரு உணர்வு ரூபமாக மாறிவிட்டது.

இப்படிப்பட்ட சூக்ஷ்ம சரீரமான மனம் சிதாபாசமாக இந்த ஸ்தூல சரீரத்தின் வாயிலாக அனைத்தையும் அனுபவிக்கிறது.

சூக்ஷ்ம சரீரமான ஜடமான மனமும், ஆத்மாவிடமிருந்து வெளிப்பட்ட அறிவு ஸ்வரூபமான **சித்** என்ற பிரதி பிம்பமாகிய சிதாபாசமும் கூடிய இதைத்தான் நாம் **"ஜீவன்"** என்றும் **"உயிர்"** என்றும் அல்லது **"ஆவி"** என்றும் அழைக்கின்றோம்.

இந்த '**ஆவி**' யானது ஸ்தூல உடலை விட்டு விட்டாலும், சூக்ஷ்மமாக (கண்ணுக்குத்தெரியாமல்) இருக்கின்ற உடல், அதாவது, **காரண சரீரம்** அதன் பாவ, புண்ணியத்திற்கு ஏற்ப அடுத்த ஸ்தூல உடல் கிடைக்கின்றவரை காத்திருக்கும்.

இந்த காரண உடல் இருக்கின்றவரைக்கும், பிறப்பு – இறப்பு என்ற **மறுபிறவி** இருக்கும். இங்கு ஜீவன் அல்லது ஆவி என்பதை சிதாபாசனுடன் கூடிய உயிர்ப்புள்ள சூக்ஷ்ம **மனம்** என்றும் அறியலாம்.

ஆதலால், ஜீவன் என்றவுடன், அது உயிர்ப்பு தன்மையுள்ள ஒன்றாக இருப்பதினால், அதை **உயிர்** என்று அழைக்கின்றோம்.

அதாவது, ஜீவன் என்பதற்கு ஸ்தூல சரீரம் இருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம். ஜீவன் என்பவன் ஆத்மாவும், சிதாபாசமும், சூக்ஷ்ம சரீரமும் கூடியது ஆகும்.

(**ஜீவன்** = சூக்ஷ்ம சரீரம் + சித் + சிதாபாசம்).

காரணசரீரம் என்பது நம்முடைய பாவ, புண்ணியங்கள் அடங்கிய **"சஞ்சித கர்மா"** என்று ஏற்கனவே பார்த்துள்ளோம்.

சூக்ஷ்ம சரீரம் கொண்ட ஜீவன், ஸ்தூல சரீரம் கிடைத்தவுடன் அனைத்தையும் அனுபவிக்கின்றது. இந்த ஸ்தூல சரீரம் கிடைப்பதே ஜீவனுடைய பாவ, புண்ணியங்களை அனுபவிப்பதற்காகவே கிடைக்கின்றது என்பதை அறிய வேண்டும்.

இதுவரை ஜீவன் என்பவன் சித்தும், சிதாபசமுடன் கூடிய **சூக்ஷ்ம சரீரம்** என்றும் பார்த்தோம்.

இனி, ஈஸ்வரன் என்பவன் மாயை என்ற ஒன்றையும், அந்த மாயை எதைச் சார்ந்து உள்ளதோ? அந்த பிரம்மமும் சேர்ந்த தத்துவம் என்று பார்த்தோம்.

(**ஈஸ்வரன்** = மாயை + பிரம்மம்).

இந்த மாயையைத் தனியாக காண இயலாது. இதை பிரம்மத்துடன் சேர்ந்துதான் காண இயலும். இந்த மாயையும் ஜடம் ஆகும்.

இந்த மாயை பிரம்மத்திடமிருந்து சைதன்யத்தை (அறிவை) வாங்கிக் கொண்டு ஈஸ்வரன் ஆகின்றது.

எனவே, பிரம்மத்திடமிருந்து பிரதி பிம்பிக்கின்ற சேதனத்தை பெற்ற மாயையை **“ஈஸ்வரன்”** என்று அழைக்கின்றோம்.

ஜீவனுக்கும், ஈஸ்வரனுக்கும் இருக்கும் உறவைப் பார்த்தோமானால், நாம் ஏற்கனவே பார்த்தது போல அவர் படைப்பவர், நாம் படைக்கப்பட்டவர். அவர் பேரறிவாளன், நாம் சிற்றறிவாளன்.

இதைத்தான் சாதாரணமாக நாம் அறிந்துக் கொண்டுள்ள விஷயம். ஜீவனிடமிருக்கின்ற சிதாபாசம், ஈஸ்வரனிடம் இருக்கின்ற மாயை என்ற இரண்டுக்கும் அடிப்படையில் நாம் பார்த்தோமானால் பிரம்மம் ஒன்றே உள்ளது.

ஆகவே, நாம் மற்றொரு கோணத்தில் இந்த ஈஸ்வரனுக்கும், ஜீவனுக்கும் ஆதாரமான பிரம்மத்தை அடிப்படையாகக் கொண்டு பார்த்தோமானால், ஈஸ்வரனிடம் இருக்கின்ற **சத், சித், ஆனந்தமும்**, ஜீவனிடம் இருக்கின்ற **சத், சித், ஆனந்தமும்** ஒன்றேயான அந்த பரப் பிரம்மத்திடமிருந்து வந்துள்ளன என்பதினால், உண்மையில் ஜீவர்களாகிய நாமும், ஈஸ்வரனும் ஒன்றே என்ற உறவு வெளிப்படுகின்றது.

இத்தகைய ஜீவனும், பிரம்மமும் ஒன்றே என்பதை வலியுறுத்தி வேதங்களில் கூறப்பட்ட வாக்கியங்களைத்தான் **“மஹா வாக்கியங்கள்”** என்று சாஸ்திரம் அழைக்கின்றது.

இந்த மஹா வாக்கியங்கள் பல இருப்பதற்குக் காரணம், வேதங்களை பலவாறாக பிரித்து படிக்கின்றமையால், ஒவ்வொரு வேதங்களிலும் பல மஹா வாக்கியங்கள் காணப்படுகின்றன.

அவைகளில் சில **“பிரஹ்ஞானம் பிரம்மம்”, “தத் துவம் அஸி”, “அஹம் பிரம்மாஸி”, “அயம் ஆத்மா பிரம்மம்”,** என்று பல மஹா வாக்கியங்களாகக் காணப்படுகின்றன.

இந்த அனைத்து மஹா வாக்கியங்களும் கூறுகின்ற விசயம் ஒன்றே. இதை விசாரித்து அறிந்துக் கொண்டால், அது ஜீவர்களாகிய நாமும், அந்த பரப்பிரம்மமும் ஒன்றே என்பதை பல வேத விளக்கங்களுடன் பல ரிஷிகளால் கூறப்படுகின்றன.

எந்த ஒரு வேத வாக்கியம் ஜீவனையும், ஈஸ்வரனையும் ஒன்று என்று கூறுகின்றதோ? அந்த வாக்கியம் **மஹாவாக்கியம்** என்று சாஸ்திரம் அழைக்கின்றது. இதை அறிவதே **ஞானம்** ஆகும். இந்த ஞானத்தை எந்த வாக்கியம் உபதேசிக்கின்றதோ? அந்த வாக்கியம் மஹா வாக்கியம் ஆகும்.

ஜீவன் என்ற சொல்லை பயன் படுத்தினாலேயே, அது உணர்வுமயமான ஒரு சேதன தத்துவத்தினை கூறுவதாகும். இந்த ஜீவனானவன் பிரம்மத்தினுடைய பிரதிபிம்பமாக இருக்கின்றான்.

ஒரே பிரம்மம் ஒரு இடத்தில் பிரதி பிம்பித்தால் அந்த இடத்திற்கு **ஜீவன்** என்றும், அதே பிரம்மம் மற்றொரு இடத்தில் பிரதிபிம்பித்தால் அது **ஈஸ்வரன்** என்றும் அழைக்கப்படுகின்றது.

அதாவது, இங்கு அனைத்து ஜீவன்களின் காரண சரீரங்கள் சேர்ந்த நிலையில் உள்ள மாயை ஆனது சமஸ்டி என்றும், இதில் பிரம்மம் பிரதிபிம்பிக்கின்றபோது, இதை **'ஈஸ்வரன்'** என்றும், தனித்த சூக்ஷ்ம சரீரம் ஒடுங்கிய காரண சரீரத்தை வியஸ்டி என்றும், இதில் பிரம்மம் பிரதிபிம்பிக்கின்ற போது, இதை **'ஜீவன்'** என்றும் அழைக்கப்படுகின்றது.

இதுப்போன்று ஆத்ம ஞானத்திற்காக தத்துவத்தை விசாரம் செய்து அதைப்பற்றிய விஷயத்தைக் கேட்டல் என்பது **சிரவணம்** என்றும். இதுவரை செய்த விசாரத்தின் வாயிலாக வருகின்ற சந்தேகத்தை நீக்குவதற்காக மேற்கொள்ளும் விசாரம் **மனனம்** என்றும், இதுவரை மேற்கொண்ட சிரவண, மனனத்தின் வாயிலாக தெரிந்த விசயங்களை நடை முறை வாழ்க்கையில் அமுல்படுத்துவது **நிதித்யாஸனம்** என்றும் அழைக்கப்படுகின்றது.

இதிசேத் ந |
ஸ்தூல சூக்ஷ்ம ஸரீராபிமானீ த்வம்பத வாச்யார்த: |
உபாதி வினிர்முக்தம் ஸமாதி தஸாசம்பன்னம் சுத்தம் சைதன்யம் த்வம் பத லக்ஷ்யார்த: |
ஏவம் ஸர்வஜ்ஞுத்வாதி விஸிஷ்ட ஈஸ்வர: தத் பத வாச்யார்த: |
உபாதி சூன்யம் சுத்த சைதன்யம் தத் பத லக்ஷ்யார்த: |
ஏவம் ச ஜீவேஸ்வரயோ: சைதன்யரூபேணாऽபேதே பாதகாபாவ: |

இதுப்போன்று சிரவணத்தினால் அஞ்ஞான நிவர்த்தி உண்டாகி, மனனத்தினால் சந்தேகம் தெளிந்து ஞானத்தை அடையும் வழிமுறைகள் கூறப்பட்டன.

ஒருவருக்கு எவ்வாறெல்லாம் சந்தேகம் உண்டாகும் என்றால், அஹங்காரத்தையும், அல்ப அறிவைக் கொண்ட ஜீவனும், அனைத்தையும் அறிந்த, அஹங்காரமே இல்லாத ஈஸ்வரனுக்கும் எப்படி ஐக்கியம் உண்டாக முடியும்? என்று இதுப்போன்ற சந்தேகம் வரலாம்.

மேலும் **“தத்வமஸி” (நீ அதுவாகவே இருக்கின்றாய்)** என்ற மஹா வாக்கியத்தின் வாயிலாக துவைத பேதங்கள் அற்ற அபேத புத்தி எப்படி உண்டாகும்?, இங்கு தத் என்பது ஈஸ்வரன், துவம் என்பது ஜீவன், அஸி என்பது இருக்கின்றாய்

என்பதை கேட்டவுடன் “**நீ அதுவாகவே இருக்கின்றாய்**”, அதாவது நீ ஈஸ்வரனாகவே இருக்கின்றாய் என்பதை கேட்டவுடனே நமக்கு ஞானம் வந்துவிடுவதில்லை.

ஈஸ்வரன் என்பவர் அனைத்தையும் அறிந்தவர். ஜீவன் என்பவர் அல்ப அறிவு கொண்டவர். இப்படிப்பட்ட ஜீவனும், ஈஸ்வரனும் எப்படி ஒன்றாக இருக்க முடியும்? என்ற சந்தேகம் இதுவரை ஜீவ – ஈஸ்வர விசாரம் செய்தும் வருகின்றது என்றால், இதற்குக் காரணம் இதுபோன்ற உபதேசங்களைக் கேட்பதினால் மட்டுமே ஒருவருக்கு ஞானம் வந்து விடாது.

அதாவது ஸ்ரவணம் மட்டுமே செய்து ஞானத்தை அடைதல் என்பது அனைவருக்கும் சாத்தியம் இல்லை. ஆனால், சிரவணத்தினால் கேட்ட விஷயங்களை, சந்தேகம் தீர்த்து தெளிவு உண்டாக்கிக்கொள்ளும் முயற்சியாக மனனம் என்ற அடுத்த படி நிலைக்கு வந்து, இதுவரை கேட்ட அல்லது அறிந்துக் கொண்ட விஷயங்களில் ஏற்பட்ட சந்தேகங்களை தக்க குருவினை அணுகி, நேரடியாக அவர் மூலமாக தெளிவு உண்டாக்கிக் கொண்டால் மட்டுமே அடைந்த ஆத்ம ஞானத்தில் ஒருவர் நிலைப் பெற முடியும்.

சிரவணத்தை தொடர்ந்து நமக்கு வருகின்ற சந்தேகங்களை நீக்கும் வழிக்கு “**மனனம்**” என்று பெயர்.

மனனத்தின் வாயிலாக சந்தேகம் தெளிவு ஏற்படுவதற்கு சாஸ்திரம் **வாட்சியார்த்தம், லட்சியார்த்தம்** என்ற இரண்டு புதிய வார்த்தைகளை அறிமுகப்படுத்தி, அதற்கான விளக்கத்தையும் கொடுக்கின்றது.

**வாட்சியார்த்தம்** என்பது ஒரு வார்த்தையை கேட்டவுடன் வருகின்ற அறிவு. **லட்சியார்த்தம்** என்பது அந்த வார்த்தையோடு சம்பந்தப்பட்ட தெளிந்த அறிவு.

இதை எப்படி ஒரு உதாரணம் மூலம் பார்க்கலாம் என்றால், ஒரு மேட்சில் இந்தியா, இலங்கையுடன் விளையாடுகின்றது என்ற வார்த்தைகளில் இரண்டு ஜடமான நாடுகள் எப்படி விளையாட முடியும்? அதாவது, இங்கு நாடுகள் என்பது தேசத்தைக் குறிக்கும் சொல். ஆனால், அந்த நாடுகளின் விளையாட்டு வீரர்கள் விளையாடுவார்கள் என்பதை நாம் இதிலிருந்து அறிந்து கொள்கின்றோம்.

இதில் வார்த்தைகளை கேட்டவுடன் இரண்டு நாட்டு வீரர்கள்தான் விளையாடுவார்கள் என்பதை புரிந்து கொள்வது **“வாட்சியார்த்தம்”** என்றும், அதற்குப்பிறகு, இந்தியாவில் மற்றும் இலங்கையில் வசிக்கின்ற விளையாட்டு வீரர்கள்தான் விளையாடுகின்றார்கள் என்பதை நேரடியாக பொருள்

கொள்வதை **“லட்சியார்த்தம்”** என்றும் அறிந்துக் கொள்ள வேண்டும்.

இதில் உடலை பிரதானமாக கொண்ட ஜீவனை, ஈஸ்வரனுடன் ஐக்கியப்படுத்தி பார்க்க முயல்வது வாட்சியார்த்தம் என்று அறிந்துக் கொள்ள வேண்டும்.

இதுப்போல, ஜீவன் என்ற சொல்லில் இருக்கின்ற உடல் என்ற அநாத்மாவை தியாகம் செய்து, சைதன்யத்தை மட்டும் எடுத்துக் கொள்வது லட்சியார்த்தம் என்று அறிந்துக் கொள்ள வேண்டும்.

ஈஸ்வரன் என்ற சொல்லில் இருக்கின்ற இந்த உலகம், மாயையை நீக்கி அங்கு இருக்கின்ற சைதன்யத்தை மட்டும் எடுத்துக் கொண்டு பார்த்தால் அதுவும் லட்சியார்த்தம்.

ஆனால், ஜீவனும், ஈஸ்வரனும் ஒன்று என்று கூறும் பொழுது அந்த இரண்டுக்கும் உள்ள வாட்சியார்த்தத்தை நன்கு புரிந்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு புரிந்துக் கொண்டால், ஜீவனும், ஈஸ்வரனும் பிரம்மத்தின் பிரதிபிம்பத்தினால் உண்டான சைதன்யத்தின்படி ஒன்றுதான் என்பதை அறிந்துக் கொள்ள வேண்டும். இதைத்தான் **லட்சியார்த்தம்** என்று அழைக்கின்றோம்.

பொதுவாக ஜீவனும், ஈஸ்வரனும் வேறு, வேறு என்பது விபரீத பாவனை. இந்த பாவனை பழக்க தோஷத்தால் வருகின்றது. தீவிர சிரவணத்தின் வாயிலாக விசாரம் செய்து, மனனத்தின் வாயிலாக சந்தேகம் தெளிந்து ஞானத்தின் வாயிலாக விபரீத பாவனையை நீக்க வேண்டும்.

எனவே, உடலுடன் கூடிய ஜீவனை, ஈஸ்வரனுடன் ஐக்கியப்படுத்தி பார்க்காமல், ஜீவனுக்கும், ஈஸ்வரனுக்கும் உள்ள அந்த சேதனத்தை மட்டும் ஐக்கியப்படுத்தினால் இரண்டும் ஒன்று என்பது சாத்தியமாகும்.

இவ்வாறு மஹாவாக்கியம் எந்த வகையில் சரி என்பதை புரிந்துக் கொள்ள முயற்சிப்பது மனனம் என்கின்றோம்.

ஸ்தூல, சூக்ஷ்ம சரீரங்களின் மீதும் அபிமானம் வைக்கின்ற ஒருவன் **“நீ அதுவாக இருக்கின்றாய்”** என்ற வார்த்தையை கேட்டதும், அது அவனுக்கு **“வாட்சியார்த்தம்”** ஆகும்.

இனி நம்முடைய சரீரத்திற்கு அல்லது அனாத்மாவுக்கு இனியொரு பெயர் **உபாதி** என்றும் அறிந்துள்ளோம்.

இப்படிப்பட்ட உபாதியை நீக்கிக் கொள்வது என்பது நம்முடைய அறிவினால் மட்டுமே முடியும்.

அதனால், விசாரத்தின் வாயிலாக ஜீவனும், ஈஸ்வரனும் ஒன்று என்ற ஞானம் உண்டாகி விட்டபிறகு **“நீ அதுவாக இருக்கின்றாய்”** என்ற வார்த்தையைக் கேட்டால் அது **“லட்சியார்த்தம்”** என்று அறிய வேண்டும்.

உதாரணமாக, ஒரு ஸ்படிகத்தின் அருகில் வைக்கப்பட்ட சிகப்பு நிற வர்ணம் கொண்ட ஒரு மலரோ, அல்லது துணியோ இருந்தால், அந்த ஸ்படிகம் பார்ப்பதற்கு சிகப்பு நிறம் அடைந்தது போலக் காணப்படும்.

ஆனால், உண்மையில் அந்த ஸ்படிகம் தூய்மையான நிறமற்ற பொருள் என்பதை நம்முடைய அறிவினால் அறிந்துக் கொண்டு, அந்த சிகப்பு நிற உபாதியை நீக்கி ஸ்படிகம் தூய்மையானது என்பதை அறிவதுப்போல, இந்த ஜீவனிடத்தில் உள்ள உபாதியான ஸ்தூல, சூக்ஷ்ம சரீரங்களின் மீது ஏற்றி வைக்கப்பட்டுள்ள உண்மைத் தன்மையை நம்முடைய அறிவினால் அறிந்துக் கொண்டு, இந்த சரீரங்கள் ஆத்மாவின் மீது பொய்யாக ஏற்றி வைக்கப்பட்டுள்ளது என்பதை அறிவதே **“ஞானம்”** எனப்படும்.

இவ்வாறு அதன் ஜீவ, ஈஸ்வர உண்மைத்தன்மையை அறிந்த ஞானிக்கு **"நீ அதுவாக இருக்கின்றாய்"** என்பது லட்சியார்த்தமாக இருக்கும்.

சிரவண, மனனத்திற்கு பிறகு, நாம் அடைந்த அந்த ஞானத்தை ஞான நிஷ்டையாக மாற்றிக் கொள்வதும், இவ்வாறு நாம் அந்த அறிவு மயமாகவே மாறிவிடுவதும் **"நிதித்யாஸனம்"** எனப்படும்.

இத்தகைய **சிரவணம், மனனம், நிதித்யாஸனம்** என்ற மூன்றும் சேர்ந்தது **"ஞானயோகம்"** என்றும், சாதன சதுஷ்டய சம்பத்தியைக் கொடுக்கும் சாதனையை **"கர்மயோகம்"** என்றும், உபாசனை, பூசைகள், வழிபாடு போன்ற சாதனைகளைக் கொண்டது **"பக்தி யோகம்"** என்றும் அழைக்கப்படுகின்றது.

# ஞானத்தின் பலன்

**ஞானத்தினால் கிடைக்கும் பலன் என்ன?**

ஏவம் ச வேதாந்தவாக்யை: ஸத்குரு பதேஸேன ச ஸர்வேஷ்வபி பூதேஷு யேஷாம் ப்ரஹ்ம புத்திருத்பன்னாதே ஜீவன்முக்தா: இத்யர்த: |

வேதாந்தம் நமக்கு உபதேசித்த ஞானத்தினால் கிடைக்கும் பலன் **"முக்தி"** ஆகும்.

இந்த முக்தியை இரண்டு விதமாக அழைக்கப் படுகின்றது. ஜீவன் உயிருடன் இருக்கும் பொழுதே தன்னிடம் உள்ள குறைகளைக் கலைந்து சோகம், நிறைவின்மை, ஆழ்மனக்குறைகள், பொறாமை, மற்றும் மரணபயம் போன்ற அனைத்திலிருந்தும் விடுதலை அடையும் திருப்தி நிலையை **"ஜீவன் முக்தி"** என்றும், இந்த ஜீவன்முக்தனுக்கு சரீரம் அழிவதைப் பற்றி கவலை இன்றி, என்றும் அழியாத சைதன்யம் மட்டுமே **"நான்"** என்ற மன நிலையில் இனி பிறப்பு, இறப்பு சக்கரத்தில் சிக்காத சூழலை அடைகின்றவனே முக்தன் என்றும், இவன் தன்னுடைய தேகத்தை விட்டவுடன் அனைத்து கர்ம வினைகளும் நீங்கப்பெற்ற நிலையில்

அடைகின்ற முக்திக்கு **"விதேக முக்தி"** என்றும் சாஸ்திரம் அழைக்கின்றது.

விதேக முக்தி என்றால், **"பிறவாமை"** என்று பொருள்.

இந்த வேதாந்த வாக்கியத்தினை குருவின் வாயிலாகத்தான் கேட்டுப் பெற வேண்டும். குரு ஸ்தோத்திரியராகவும், பிரம்மநிஷ்டராகவும் இருக்க வேண்டும். அவர் குரு பரம்பரையில் படித்து வந்த சத்குருவாக இருக்க வேண்டும்.

இந்த உலகத்தில் இருக்கின்ற எல்லா ஜீவராசிகளிடத்திலும், அவைகளை பிரம்மம் என்ற நிலையில் நேசித்து **"இருப்பதெல்லாம் இறைவனே"** என உயர்ந்த மனோ நிலையில் பார்க்கின்ற அறிவு கொண்டவராக யாரெல்லாம் இருக்கின்றார்களோ? அவர்களே **ஜீவன் முக்தர்கள்** ஆகின்றார்கள்.

ஜீவன் முக்தர்கள் என்பவர்கள் சம்சாரத்தில் இருந்த பொழுது, எந்த உடலுடனும், எந்தெந்த புலன்களுடனும், இந்த உலகத்தோடு தொடர்பு கொண்டு வாழ்ந்து இருந்தார்களோ? அதே உடல், அதே புலன்கள் என அனைத்தையும் அப்படியே வைத்துக் கொண்டு, உயிருடன் இருக்கும் பொழுதே,

தன்னுடைய அஞ்ஞானம் நீங்கப் பெற்று, புதிய அறிவு கொண்டு கிடைக்கப்பெற்ற ஞானத்துடன், அதே சரீரம், அதே புலன்களைக் கொண்டு அதே மனதினால், இதே உலகத்தில் வாழ்கின்றார்கள்.

இவர்கள் தாங்கள் அடைந்த ஞானத்தினால், இந்த உலகம் எந்த விதத்திலும் அவர்களை பாதிக்காதவாறு, அவர்கள் பிராரப்த கர்மா தீருகின்ற வரையில் அதே உடலுடன், தன்னுடைய மனதின் சம்ஸாரம் மட்டும் நீங்கிய நிலையில், என்றும் திருப்தியுடன், சந்தோசத்துடன் வாழ்கின்றார்கள்.

இப்படி ஆனந்தமாக சாதாரண மனிதன் போன்றே வாழ்கின்றவர்களே **ஜீவன் முக்தர்கள்** ஆவார்கள்.

**நனு ஜீவன் முக்த: க:?**

**ஜீவன் முக்தன் என்றால் என்ன?**

யதா தேஹோSஹம் புருஷோSஹம் ப்ராஹ்மணோஹம் ஸூத்ரோSஹமஸ்மீதி த்ருட நிஸ்சய: ததா நாஹம் ப்ராஹ்மண: ந ஸூத்ர: நபு ருஷ: கிந்து அஸங்க: சச்சிதானந்த ஸ்வரூப: ப்ரகாஸரூப: ஸர்வாந்தர்யாமீ சிதாகாஸரூபோSஸ்மீதி த்ருட நிஸ்சய ரூபோSபரோக்ஷஜ்ஞானவான் ஜீவன் முக்த:

அபரோக்ஷ ஞானத்தை உடையவன் ஜீவன் முக்தன். **பரோக்ஷம், அபரோக்ஷம்** என்ற இரண்டு விஷயங்கள் உள்ளன. உதாரணமாக, பரோக்ஷம் என்றால் தூரத்தில் புகை வருவதை வைத்து அங்கு நெருப்பு இருக்கின்றது என்று அறிந்துக் கொள்வது, அபரோக்ஷம் என்பது நெருப்பை கண்களால் பார்த்து நிச்சயம் செய்வது.

இந்த வகையில் ஞானத்தில் நிச்சயத்தன்மை அடைந்த ஞானி **ஜீவன் முக்தன்** எனப்படுகின்றான்.

ஞானத்தை அறிந்து கொண்டாலும் தெளிவில்லாத நடைமுறையில் இருப்பவர்கள் பரோக்ஷஞானம் உடைய வர்கள் என்று கூறுவார்கள்.

இதுப்போல பிரம்மம் இருக்கின்றது என்று அறிவது பரோக்ஷ ஞானம் என்றும், அந்த பிரம்மமாக நானே இருக்கின்றேன் என்று அறிவது அபரோக்ஷ ஞானம் என்றும் அறிதல் வேண்டும்.

இதுப்போன்ற மிகத் தெளிவாகவும், உறுதியாகவும் அபரோக்ஷ ஞானத்தை உடையவன் **ஜீவன் முக்தன்** என்று அழைக்கப்படுகின்றான்.

பொதுவாக அறியாமையில் இருந்த பொழுது, அதாவது சாஸ்திரத்தின் வாயிலாக ஞானத்தை பெறாதபோது, நாம் இந்த உடலை **“நான்”** என்று எந்த அளவிற்கு நாம் நம்பினோம். மேலும் நான் ஆண், அல்லது நான் பெண், என்ற எண்ணம். பிறகு, சாதி அபிமானத்தினால் நான் பிராம்மணம், நான் சூத்திரன் என்று இப்படி திடமான நிச்சயத்துடன் எப்படி இருந்தோமோ? அதுப்போன்றே, சாஸ்திரத்தை அறிந்து கொண்ட பிறகு, **“அஹம் பிரம்மாஸ்மி”** என்ற ஆத்ம ஞானத்தை அடைந்தபிறகு, நான் பிராமணனோ, சூத்திரனோ, ஆண் அல்லது பெண் என்ற எண்ணங்களை விடுத்து, இப்பொழுது **“நான் பிரம்மம்”** என்ற நிலையில், எந்தவிதமான அனாத்மாவுடனும் சேராமல், திடமான உறுதியுடன் இருக்க வேண்டும்.

உண்மையில் நான் சத்சித்ஆனந்த ஸ்வரூபமே நான் என்ற திட நிச்சயத்துடன் இருத்தல் வேண்டும். நான் **சித்** என்ற அறிவு ஸ்வரூபமானவன் என்றும், பூர்ணமான ஆனந்த ஸ்வரூபனாக என்றும் பிரகாசமாக சர்வ அந்தர்யாமியாக எல்லா ஜீவராசிகளிடத்திலும் நான் இருக்கின்றேன் என்று அறிதல் வேண்டும். இப்படிப்பட்ட திட நிச்சயமான, திருப்தியுடன் அபரோக்ஷ ஞானம் யாரிடம் இருக்கின்றதோ? அவனே ஜீவன் முக்தன் ஆகின்றான்.

**ப்ரஹ்மை வாஹமஸ்மீத்ய பரோக்ஷ ஜ்ஞானேன**
**நிகில கர்ம பந்த வினிர்முக்த: ஸ்யாத் |**

நான் பிரம்மமாகவே இருக்கின்றேன் என்ற இந்த அபரோக்ஷ ஞானத்தினாலேயே எல்லா கர்ம பந்தத்திலிருந்தும் விடுபட்டு, இந்த ஞானத்தினாலேயே முக்தியை அடைகிறான். அவ்வாறு அனைத்து கர்மங்களிலிருந்தும் விடுதலை அடைந்து இந்த தேகம் இருந்தாலும், இல்லாவிட்டாலும், அந்த ஜீவன் முக்த ஞானி **விதேக முக்தியையும்** (பிறவாமை) அடைந்தவன் ஆகின்றான்.

ஜீவன் முக்தன் அனைத்து கர்மங்களையும் விட்டுவிட்டு விதேக முக்தியை அடைகின்றான் என்றால், அப்படிப்பட்ட கர்மங்கள் எத்தனை விதங்களில் இருக்கின்றன?

# மூன்று கர்மங்கள்

கர்மாணி கதிவிதானி ஸந்தீதிசேத்
ஆகாமி ஸஞ்சிதப்ராரப்த பேதேன த்ரிவிதானி ஸந்தி |

கர்மங்கள் ஆகாமிய, சஞ்சித மற்றும் பிராரப்த என மூன்று வகைகள் உள்ளன. இதில் ஞானம் எவ்வாறு இந்த மூன்று கர்மங்களையும் நீக்குகின்றன என்பதையும் இனி தெளிவாக பார்க்கலாம்.

இந்த கர்மங்களை பற்றி தவறாக புரிந்து கொண்ட சிலர் இது நம்முடைய தலையெழுத்து, அல்லது பிராரப்தம் என்று தங்களுடைய முக்கியமான பொறுப்புகளிலிருந்து தப்பித்துக் கொள்வதாகவும், ஒரு சிலர் தங்களுடைய சுய முயற்சியைக்கூட தவிர்த்து எல்லாம் இந்த கர்மா படி நடக்கும் என்று அனைத்தையும் கர்மாவின் மீது போட்டு விடுவதாகவும் குறை கூறுகின்றனர்.

இதற்குக் காரணம், அவர்கள் இந்த கர்மாக்களைப் பற்றி தவறாகப் புரிந்து கொண்டதின் விளைவாக இருக்கலாம்.

ஆகவே, இனி இந்த கர்மாக்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை விரிவாக பார்க்கலாம்.

பொதுவாக நம்முடைய ஒவ்வொரு செயலுக்கும் (இந்திரியங்கள், மனம், அல்லது வாக்கு வாயிலாக) அதற்கான விளைவு என்பது நிச்சயமாக இருக்கும் இது பொதுவான நியதி.

அதாவது, நாம் உடல், மனம், அல்லது வாக்கு என்ற சொல் மூலமாக எந்த செயல்களுக்கு காரணமாக இருந்தோமோ? அந்த செயல்களின் விளைவாக விளைந்த கர்மங்களை அல்லது கர்மங்களினால் கிடைக்கின்ற பலன்களை இரண்டாக பிரித்துக் கொள்ளலாம்.

அவைகள் **திருஷ்ட பலன், அதிருஷ்ட பலன்** என இரண்டு வகைகளாகப் பிரித்துக் கொள்ளலாம். அதாவது, திருஷ்ட பலன் என்றால் **கண்ணுக்கு தெரிந்த பலன்** என்றும், அதிருஷ்ட பலன் என்றால் **கண்ணுக்கு தெரியாத பலன்** என்றும் அறிந்துக்கொள்ள வேண்டும்.

உதாரணமாக, நீங்கள் வறுமையில் கஷ்டப்படுகின்ற ஒருவருக்கு உங்களிடமிருந்து ஒரு நூறு ரூபாய் பணம் கொடுக்கின்றீர்கள் என்றால், அவரிடம் நூறு ரூபாய் பணம் சேர்ந்து விடுவதும், உங்களிடம் நூறு ரூபாய் பணம் குறைந்து

விடுவதையும் கண்கூடாக காண்கின்றோம். இதை திருஷ்ட பலன் என்று கூறலாம்.

அடுத்து சாஸ்திரம் அதிருஷ்ட பலனை இரண்டாகப் பிரிக்கின்றது. அவைகள் **பாவம், புண்ணியம்** என்பனவாம்.

கண்ணுக்கு தெரியாத அதிருஷ்ட பலனை பாவம், புண்ணியம் என்ற பலன்களாக அறிந்துக் கொள்ள வேண்டும்.

இங்கு மற்றொருவரிடமிருந்து நூறு ரூபாயை அவருக்குத் தெரியாமல் எடுத்துக் கொள்வது பாவம் என்று எடுத்துக் கொள்ளலாம். அதாவது நூறு ரூபாய் எடுத்தவருக்கு இலாபம், பறிகொடுத்தவருக்கு நஷ்டம். இதை அதிருஷ்ட பலனில் அந்த பணத்தை எடுத்தவருக்கு பாவக் கணக்கில் சேருகின்றது.

அடுத்து, சிறிது உணவை எடுத்து இறைவனுக்கு பிரசாதமாகப் படைத்து விட்டு அதே உணவை நீங்களே உண்ணுகின்றீர்கள் என்றால், அதன் வாயிலாக அதிருஷ்ட பலனாக உங்களுக்கு புண்ணியம் வந்து சேரும். இதையே அந்த பிரசாதத்தை மற்றவர்களுக்கு கொடுத்து, விநியோகம் செய்கின்றீர்கள் என்றால், அது திருஷ்ட பலனாக உங்களுக்கு புண்ணியம் வந்து சேரும்.

இவ்வாறு, பாவ, புண்ணியங்களாக எதன் அடிப்படையில் பிரிக்கப்படுகின்றது என்பதை மற்றொரு உதாரணத்தில் வாயிலாகப் பார்க்கலாம்.

ஒரு மருத்துவர் ஒரு நோயாளிக்கு மருத்துவம் செய்யும் பொழுது அவர் இறந்து விடுகின்றார் என்றால், இது அந்த மருத்துவருக்கு அதிருஷ்ட பலனில் பாவமா, புண்ணியமா? என்ற சந்தேகம் வரும்.

இங்கு நோயாளியை காப்பாற்ற வேண்டும் என்ற நல்ல மனோபாவத்தில் மட்டுமே அந்த மருத்துவர் மருத்துவம் செய்ததினால், அவரின் வாயிலாக நோயாளி இறந்து விட்டாலும், அது மருத்துவருக்கு அதிருஷ்ட பலனில் புண்ணியமாக மாறிவிடும்.

அதே மருத்துவர் ஒரு நோயாளிக்கு தேவையில்லாத பரிசோதனைகளின் வாயிலாக பணம் பறிக்க முயல்கின்றார் என்றால், அது அதிருஷ்ட பலனில் பாவமாக அவருக்கு மாறிவிடும்.

காரணம் திருஷ்ட பலனில் ஒரு திருடன் ஒருவரிடமிருந்து பணம் பறிப்பதற்கு ஒப்பான விசயமாக இவருக்கு இது மாறிவிடுகின்றது. திருடனுக்கு திருஷ்ட

பலனாக பாவமும், மருத்துவருக்கு அதிருஷ்ட பலனாக பாவமும் வந்து சேரும் என்று சாஸ்திரம் கூறுகின்றது.

**ஜ்ஞானோத்பத்த்யனந்தரம் ஜ்ஞான தேஹக்ருதம்**
**புண்ய பாப ரூபம் கர்ம யதஸ்தித தாகாமீத்யபிதீயதே |**

அதாவது, ஒருவன் செய்த பாவம், புண்ணியம் என்ற அதிருஷ்ட பலனானது எவ்வாறு வெளிப்பட்டு தீரும் என்ற சந்தேகம் வரும்பொழுது, இதற்கு சாஸ்திரம் கூறும் வழிமுறை யாதெனில், ஒருவன் அவன் செய்த செயலினால் விளைந்த நன்மை, தீமைகளை கொண்டு, அவைகளில் நன்மை கொடுக்கும் காரியங்களை புண்ணியமாகவும், தீமை கொடுக்கும் காரியங்களை பாவமாகவும் எடுத்துக் கொண்டு, அந்த நன்மை தீமைகளை அவன் எவ்வாறு மற்றவர்களுக்கு கொடுத்தானோ? அப்பொழுது, அதன் பயனாக அவர்கள் அனுபவிக்கும் நன்மைக்கு ஏற்ப இன்பமாகவும், தீமைக்கு ஏற்ப துன்பமாகவும் அவர்கள் அனுபவிப்பதுப் போலவே, இவனும் அவன் செய்த நன்மை, தீமைகளுக்கு ஏற்ப இவனுக்கு இன்பம், துன்பம் என்ற முறையில் அனுபவமாக, அந்த பாவ புண்ணியங்களை தீர்க்க முடியும் என்கின்றது.

இதிலிருந்து நாம் தெரிந்துக் கொள்ள வேண்டியது என்னவென்றால், **பாவம், புண்ணியம்** என்ற அதிருஷ்ட பலன்

**இன்பம், துன்பம்** என்ற அனுபவத்தைக் கொடுத்து தீரும் என்று அறிய வேண்டும்.

இப்பொழுது ஒரு மனிதனிடத்தில் எவ்வளவோ கணக்கற்ற பாவ, புண்ணியங்கள் அவனது கர்மத்தினால் (மனம், வாக்கு மற்றும் உடல் கொண்டு செய்த செயல்களினால்) சேர்த்து வைக்கப்பட்டுள்ளது.

இதில் எந்த பாவம் எப்பொழுது வெளிப்பட்டு துன்பத்தையும், எந்த புண்ணியம் எப்பொழுது வெளிப்பட்டு இன்பத்தையும் அவனுக்கு கொடுக்கும் என்று எவ்வாறு அறிவது? என்ற அடுத்த சந்தேகம் நம்மிடையே உண்டாகும்.

இங்கு நாம் புரிந்துக் கொள்ள வேண்டியது என்ன வென்றால், இந்தப் பிறவியில் மனிதனாகப் பிறந்த நாம் இதற்கு முன்பு பிறந்த பல பிறவிகளின் வாயிலாக பல செயல்களைப் புரிந்து, அதன் பலனாக பலவிதமான பாவம், புண்ணியம் என்ற அதிருஷ்ட பலன்களை சேர்த்து வைத்துக் கொண்டுள்ளோம்.

இவ்வாறு ஜீவன் என்ற ஒன்று பல பிறவிகளில் மனிதனாக பிறக்கும் பொழுது மட்டுமே, தான் செய்த பல கர்மங்களினால் இந்த பாவம், புண்ணியம் என்ற இரண்டு அதிருஷ்ட பலன்களை பெற முடியும்.

மற்ற பறவைகள், மிருகங்கள் போன்ற ஜீவராசிகளாக பிறக்கும் பொழுது, அந்த ஜீவன் தான் செய்த பாவங்களை மட்டுமே தீர்த்துக் கொள்ளும்படி இருக்கும். அதற்குக்காரணம் ஆறறிவு படைத்த மனிதப் பிறவிக்கு மட்டுமே, செயல் செய்யும் பொழுது அதன் நன்மை, தீமைகளை அறிந்துக் கொண்டு செய்ய முடியும்.

ஸஞ்சிதகர்ம கிம்?

**சஞ்சித கர்மா என்றால் என்ன?**

அனந்தகோடி ஜன்மானாம் பீஜபூதம் ஸத்யத்கர்ம ஜாதம்
பூர்வார்ஜிதம் திஷ்டதிதத் ஸஞ்சிதம் ஜ்ஞேயம் |
ப்ராரப்தம் கர்மகிமிதிசேத் |
இதம் சரீரமுத்பாத்ய இஹலோக ஏவம்
ஸுகதுகாதி ப்ரதம்யத் கர்ம தத்ப்ராரப்தம்
போகேன நஷ்டம் பவதி
ப்ராரப்த கர்மணாம்
போகாதேவக்ஷய இதி |

பொதுவாக, ஐந்தறிவுக்கு கீழே உள்ள ஜீவராசிகளுக்கு அந்த நன்மை, தீமைகளை புரிந்து கொள்ளும் திறன் இல்லாததால், அவைகள் எந்த செயலைப் புரிந்தாலும் அதன்

கணக்கில் பாவம், புண்ணியம் என்ற இரண்டும் இந்தப் பிறவியில் சேராது. அவைகள் இந்தப் பிறவியைப் பயன் படுத்தி ஏற்கனவே மனிதனாகப் பிறந்த பொழுது தான் செய்த அதிக பாவத்தினை கழித்து முடிக்க இந்த மிருகப் பிறவியோ, பறவை போன்ற பிறவியோ எடுத்திருக்கும்.

இதிலிருந்து நாம் அறிந்துக் கொள்ள வேண்டியது என்னவென்றால், ஒரு ஜீவன் மனிதப் பிறவி கிடைத்து அதை எவ்வாறு பயன் படுத்துகின்றதோ? அதற்கேற்ப பாவ, புண்ணியங்கள் உண்டாகும்.

இதில் ஒரு ஜீவன் குறைந்த பாவங்களையும், அதிகப்படியான புண்ணியங்களையும் செயதிருந்தால், மறு பிறவியில் தேவராகப் பிறந்து அதற்கேற்ற உடல் மற்றும் உலகம் கிடைத்து அந்த புண்ணியத்தின் பலன்களாக இன்பத்தை அனுபவிக்கும்.

அதே ஜீவன் புண்ணியம், பாவம் என்ற இரண்டையும் சரிசம அளவுகளில் செய்து வைத்திருந்தால் அந்த ஜீவனுக்கு மனிதப் பிறவி உண்டாகும். அதன் மூலம் அவைகள் மீண்டும் இன்பம், துன்பம் என்ற இரண்டையும் அடைந்து, மேலும் பாவம், புண்ணியம் இரண்டையும் கழிக்கவோ, சேர்க்கவோ

அந்த ஜீவன் செய்யும் செயல்களினால் உண்டாக்கிக் கொள்ளும்.

அதே அந்த ஜீவன் கிடைத்த மனிதப் பிறவியைப் பயன்படுத்தி அதிக பாவத்தையும், குறைந்த புண்ணியத் தையும் சேர்த்து இருந்தால், அந்த ஜீவனுக்கு அதிகப் பாவத்தின் பலனாக அந்த பாவத்தை குறைக்கும் இழிப் பிறப்பான மரம், செடி, பறப்பன, ஊர்வன, நீரில் மிதப்பன, அல்லது மிருகம் என்ற ஏதாவது ஒரு உடலை எடுத்து தான் செய்த அதிகப்படியான பாவத்தைக் குறைத்துக் கொள்ளலாம் என்று சாஸ்திரம் தெள்ளத் தெளிவாக அறிவுறுத்துகின்றது.

இதுப்போன்று ஜீவனானவன் ஒவ்வொருமுறை மனிதப் பிறவி கிடைக்கும் பொழுதெல்லாம் தான் செய்த கர்மங்களின் விளைவாக உண்டான பாவ, புண்ணியங்களை ஒட்டு மொத்தமாக **“சஞ்சித கர்மா”** என்று சாஸ்திரம் அழைக்கின்றது.

சஞ்சிதம் என்றால் சேர்க்கப்பட்டது என்று பொருள். ஒவ்வொரு ஜீவனிடத்திலும் உள்ள கர்மாவில் சேர்ந்துள்ள பாவ, புண்ணியங்களின் மொத்த தொகுப்பு இந்த சஞ்சிதம் ஆகும்.

இந்த மொத்த தொகுப்பான சஞ்சிதத்திலிருந்து ஒரு சிறிதளவு பாவமும், சிறிதளவு புண்ணியமும் சம அளவு எடுத்துக் கொண்டு ஒரு ஜீவன் பிறவிக்கு வந்தால், அந்த ஜீவனுக்கு மனிதப் பிறவி கிடைக்கின்றது.

இந்த மொத்த தொகுப்பான சஞ்சிதத்திலிருந்து அதிக பாவத்தையும், குறைந்த புண்ணியத்தையும் எடுத்துக் கொண்டு ஒரு ஜீவன் பிறவிக்கு வந்தால், அந்த ஜீவனுக்கு மரம், செடி, மிருகம், பறவை போன்ற ஏதாவதொரு பிறவி கிடைக்கின்றது.

இந்த மொத்த தொகுப்பான சஞ்சிதத்திலிருந்து அதிக புண்ணியத்தையும் குறைந்த பாவத்தையும், எடுத்துக் கொண்டு ஒரு ஜீவன் பிறவிக்கு வந்தால், அந்த ஜீவனுக்கு தேவர் முதலான உயர்ந்த பிறவி கிடைக்கின்றது.

இவ்வாறு வந்த ஜீவன் அந்த சஞ்சித கர்மா தொகுப்பிலிருந்து பிறவிக்கு உடல் கிடைக்கும் போது கொண்டு வந்து அனுபவிக்கின்ற கர்மாவை **“பிராரப்த கர்மா”** என்று சாஸ்திரம் அழைக்கின்றது.

பிராரப்த கர்மா என்றால், சஞ்சிதத்திலிருந்து வெளிப்பட்ட கர்மா என்று பொருள்.

இந்த சஞ்சிதத்திலிருந்து வெளிப்பட்ட கர்மாவின் வாயிலாக நாம் கொண்டு வந்த பிராரப்த கர்மா – வைப் பொருத்தவரை நம்முடைய விருப்பத்துக்கு தேர்ந்தெடுக்கும் உரிமை கிடையாது.

அதனால்தான் நம்முடைய தாய், தந்தை, ஆண் சரீரம், பெண் சரீரம், மற்றும் பிறந்த நாடு, உறவினர்கள் போன்ற எதையும் நம்மால் தேந்தெடுக்கும் உரிமை கிடையாது.

அதனால்தான் நடக்கின்ற செயல்கள், சூழ்நிலைகள் அனைத்தும் நம்முடைய பிராரப்தத்தின் படி இயல்பாகவே நடக்கின்றது என்று கூறுவார்கள். ஒருவனுக்கு செல்வம் வந்து பணக்காரன் ஆகிவிட்டால், அவன் வாங்கி வந்த பிராரப்தம் அப்படி என்று பெரியவர்கள் கூறுவார்கள்.

ஒருவன் இவ்வாறு கொண்டு வந்த பிராரப்த கர்மாவை அனுபவித்து தீர்த்துக் கொண்டு இருக்கும் பொழுதே, இந்தப் பிறவியில் மீண்டும், மீண்டும் மனம், சொல், மற்றும் உடல் வாயிலாக கர்மாக்களை செய்து புதியதாக பல பாவ, புண்ணியங்களை சேர்த்துக் கொள்கின்றோம்.

இவ்வாறு நாம் புதியாதாக இந்தப் பிறவியின் வாயிலாக உண்டாக்கிக் கொள்ளும் பாவ, புண்ணியங்களை **"ஆகாமிய கர்மா"** என்று சாஸ்திரம் அழைக்கின்றது.

இவ்வாறு நாம் இப்பிறவியில் சேர்த்துக் கொள்ளும் பாவ, புண்ணியங்கள் அந்த ஜீவன் இந்த உடலை விட்டு விட்டு செல்லும்போது, (மரணத்திற்கு பிறகு) மீண்டும் ஏற்கனவே நம்மிடம் உள்ள பாவ, புண்ணியங்களின் மொத்த தொகுப்பான சஞ்சித கர்மாவிடம் சேர்த்துக் கொள்ளப்படுகின்றது.

இவ்வாறு அந்த ஜீவன் உடலை விட்டவுடன் ஒரே கர்மாவான சஞ்சித கர்மா மட்டுமே அந்த ஜீவனிடத்தில் இருக்கும். இவ்வாறு இந்த சேகரிப்பின் காரணமாக அந்த ஜீவன் **சஞ்சித கர்மா** என்ற மூட்டையை பெரிதாக்கிக் கொண்டே வருகின்றது.

ஜீவன் இப்பிறவியில் தன்னுடைய உடலை விட்டு விட்டு மறு பிறவிக்குச் செல்லும்போது, அந்த ஜீவனின் சேகரிப்பில் உள்ள பாவ, புண்ணிய மூட்டையான சஞ்சித கர்மாவிலிருந்து மீண்டும் சிறிதளவு பாவம், புண்ணியம் என்ற இரண்டையும் எடுத்து அந்த ஜீவனுக்கு எத்தகைய உடல் கொடுக்கலாம் என்று கர்ம பல தாதாவான இறைவன் தீர்மானம் செய்து, அந்த ஜீவனிடம் காணப்படுகின்ற பாவ,

புண்ணியங்களின் தொகுப்பை பொருத்து உடலைக் கொடுத்து மீண்டும், மீண்டும் பிறவிச் சக்கரத்தில் சுழல வைக்கின்றான்.

இவ்வாறு, ஒவ்வொரு ஜீவனும் இந்த மூன்று கர்மாக்களின் பிடியில் சிக்கிக் கொண்டு வெளிவரும் வழி தெரியாமல் தவிக்கின்றான்.

அந்த ஜீவனுக்கு இறைவனின் அருள் கிடைத்தால் ஒழிய அவன் பிறவிக்கடலில் இருந்து தப்பிக்க முடியாது. எனவே, கிடைத்தற்கறிய மனிதப் பிறவியை ஒருவன் பெற்றவுடன் அந்த இறைவனை அறிந்துக்கொண்டு, பிறவாமை என்ற பெரு நிலைக்கு தயாராக வேண்டும்.

அதற்கு தக்க சத்குருவை அணுகி பிறவியை கடக்கும் வழிமுறையை அறிந்துக் கொள்ள வேண்டும்.

இந்த உலகத்தில் விதவிதமான வேற்றுமைகளுடன் ஒவ்வொருவரும் பிறப்பதையும், வாழ்வதையும் காண்கின் றோம். எதன் அடிப்படையில் இந்த வேற்றுமைகள் என்ற சந்தேகம் சிலருக்கு உண்டாகலாம்.

இதற்குக் காரணம் இறைவன் என்றும் கூற முடியாது. ஏனெனில், இறைவன் கருணையே வடிவானவனாக

இருப்பதினால், இவர் எனக்கு வேண்டியவர் அதனால் இவரை செல்வத்துடன் பிறக்க வைக்கின்றேன். இவர் எனக்கு வேண்டாதவர் அதனால், இவரை வறுமையில் பிறக்க வைக்கின்றேன் என்று அவராகவே இத்தகைய ஏற்றத் தாழ்வுகளை நிச்சயமாக காட்டமுடியாது.

அப்படியானால், ஏன் இந்த வேறுபாடு? அதாவது செல்வம் – வறுமை, ஆரோக்கியம் – நோய், உயர்ந்தவன் – தாழ்ந்தவன், படித்தவன் – படிக்காதவன், உடல் வலுவானவன் – உடல் ஊனமுற்றவன் என்ற இந்த இருமைகள் எதனால் காணப்படுகின்றது என்று அறிய முயன்றால், அவனவன் செய்த வினைகளின் காரணமாக, இந்த மூன்று கருமங்களின் அடிப்படையில் மட்டுமே இவைகள் நிகழ்கின்றன என்று சாஸ்திரம் ஆணித்தரமாக வலியுறுத்துகின்றது.

**“வினை விதைத்தவன் வினை அறுப்பான்,**
**தினை விதைத்தவன் தினை அறுப்பான்”**

என்று நம் முன்னோர்கள் கூறிய பழமொழியின் எளிமை ஒரு பாமரனும் அறிய வேண்டும் என்ற நல் நோக்கமே ஆகும்.

ஆனால், இதை அறியாத அஞ்ஞானிகள் தாங்கள் செய்யும் தவறை உணராது, மற்றவர்கள் மீது பழியைப் போட்டு, தான் தப்பித்து விடுகின்றனர். அல்லது கடவுளே உனக்கு கருணை இல்லையா? என்று கோவில், கோவிலாக சென்று கடவுளிடம் புலம்புகின்றனர். ஆனால், ஒருவரும் தன்னை மாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை. இப்படிப்பட்டவர்கள், தாங்கள் செய்யும் செயலினால் விளையும் நன்மை, தீமைகளைப் பற்றி சிறிதும் கவலைப்படுவதும் இல்லை.

ஒரு சிலர், இதையும் தாண்டி சில ஜோதிடர்களை அணுகி, ஜோதிடம் பார்த்துவிட்டு, எனக்கு சனியினால்தான் இந்த கஷ்டம், ராகுவினால்தான் இந்த கஷ்டம் என்று கிரகங்களின் மீது பழியைப் போட்டுவிட்டு தாங்கள் எந்த தவறுமே செய்யாதவர்கள் போல் நடந்துக் கொள்வது இந்த கலியுகத்தில் விந்தையிலும் விந்தையான காட்சியாக காணமுடிகின்றது.

ஆனால், சாஸ்திரம் என்ன அறிவுரை கூறுகின்றது என்றால், இன்று நீ இப்படி இருக்கக் காரணம், அன்று நீ ஏற்கனவே செய்த பாவ, புண்ணியமே காரணம் என்கின்றது.

இதனையே பெரியவர்கள் **"தீதும் நன்றும் பிறர்தர வாரா"** என்று பழமொழி வாயிலாக படிக்காத பாமரனும் அறிந்து

கொள்ள கூறினார்கள். ஆனால், இன்று படித்த பட்டதாரிகள் கூட இதை அறிந்து கொள்ளத் தயாராக இல்லை.

யாரொருவர் இந்த கர்ம தத்துவத்தை புரிந்து கொண்டு வாழ்கின்றார்களோ, அவர்கள் தாங்கள் வாழும் காலத்திலேயே எந்த உயிருக்கும் தீங்கு செய்யாமல், தனக்கும் தீங்கு நேர்ந்து விடாமல் காத்துக் கொண்டு ஆனந்தமாக இந்த உலக வாழ்க்கையை அனுபவித்து வாழ்வார்கள், இந்த கர்ம தத்துவத்தை புரிந்து கொள்ளாதவர்கள் மீள முடியாத துயரத்தில் மூழ்கிக் கிடப்பார்கள்.

பொதுவாக இன்று நாம் இப்படி வாழும் வாழ்க்கைக்கு நேற்று நாம் வாழ்ந்த வாழ்க்கையே காரணமாக அமையும். அதுபோலவே, நாளை நாம் எப்படி வாழப்போகின்றோம் என்பதை இன்று நாம் வாழும் வாழ்க்கையை வைத்து தீர்மானிக்கவும் முடியும்.

இவ்வாறு, ஏற்கனவே நடந்ததற்கும், இப்பொழுது நடப்பதற்கும், நாளை நடக்கப்போவதற்கும் முழுக்க முழுக்க நாமே காரணம் என்பதை நாம் செய்யும் செயலை வைத்தே அறிந்து கொள்ளலாம்.

இதிலிருந்து கர்மதத்துவத்தை நாம் எவ்வாறு புரிந்து கொள்ள வேண்டும் என்றால், நடப்பதெல்லாம் அவன் செயல் என்று இறைவனின் மீது அனைத்தையும் ஏற்றி வைத்து விட்டு நாம் தப்பித்துக் கொள்ள பார்க்கக்கூடாது.

இந்த தவறான புரிதலினால் சிலர் தங்களுக்கு நேருகின்ற துயரத்தையும், இன்பத்தையும் இறைவன் கொடுத்ததாக பாவித்துக் கொண்டு அதை அனுபவிக்க விரும்புகின்றார்கள். அல்லது இறைவனை காரணம் காட்டி தப்பித்துக் கொள்ள முயற்சிக்கின்றார்கள்.

ஆனால், சாஸ்திரம் இந்த இடத்தில் நமக்கு என்ன கூற வருகின்றது என்றால், நீ ஒரு தேங்காய் விதையை விதைத்து விட்டு, பலனாக மாங்காயை எதிர் பார்ப்பது எப்படி முட்டாள்தனமோ, அதுபோல, நீ, பாவ, புண்ணியங்களை செய்து விட்டு இறைவன்தான் எனக்கு இன்பத்தைக் கொடுக்கின்றான், அல்லது துன்பத்தைக் கொடுக்கின்றான் என்று சொல்வதும் உன்னுடைய முட்டாள்தனம் என்று கூற வருகின்றது.

மேலும், நேற்று நீ விதைத்த ஒரே ஒரு தேங்காய் மரமாக மாறிய பின் பல தேங்காய்களை உனக்கே இன்று பலனாக கொடுப்பதுப் போல (பக்கத்து வீட்டுக்காரனுக்கு

அல்ல), அல்லது நீ விதைத்த ஒரு மாங்காய் மரமாக மாறிய பின்பு பல மாங்காய்களை பலனாக உனக்கு கொடுப்பதுப் போல, நீ செய்த ஒரு நன்மை உனக்கு பல நன்மைகளாக திரும்ப உனக்கே கிடைக்கும் என்றும், நீ செய்த ஒரு தீமை பல தீமைகளாக உனக்கே (பக்கத்து வீட்டுக்காரனுக்கு அல்ல) வந்து சேரும் என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும் என்கின்றது.

ஆகவே, நல்லதோ, கெட்டதோ உனக்கு நடக்கின்றது என்றால், அதன் முழு பொறுப்பு உன்னைச் சார்ந்தது என்பதை மட்டும் மறக்கக் கூடாது என்பதை அறிய வேண்டும்.

எப்பொழுது ஒருவன் தனக்கு நடக்கும், நன்மைக்கும், தீமைக்கும் நானே காரணம் என்பதை உணர்கின்றானோ? அப்பொழுதுதான் அவன் உண்மையாகவே ஆன்மீகம் என்றால் என்ன? என்பதை அறிந்தவனாகின்றான்.

இவ்வாறு உண்மை நிலையை உணர்ந்தவன் முதலில் தன்னிடத்திலிருந்து நல்ல மாற்றத்தை கொண்டு வர முயற்சி செய்வான். உண்மையை உணராதவன் நடக்கின்ற தீமைக்கு காரணம் பக்கத்து வீட்டுக்காரன், இந்த சமுதாயம், இந்த அரசாங்கம், இந்த உலகம் என்று தவறுகளை மற்றவர்கள் மீது திணித்துவிட்டு இவன் தப்பித்துக் கொள்ளப்

பார்ப்பான். அல்லது இவன் சமுதாயத்தை திருத்தும் முயற்சியை மேற்கொள்வான்.

இவனைப் போன்றவன் இந்த உலகத்தையே மாற்றி விட முடியும் என்பதுப் போல முயற்சி செய்வான். ஆனால், உண்மையில் இந்த உலகத்தில் ஒரே ஒருவனை மட்டுமே மாற்றுகின்ற உரிமை அவனிடம் இருக்கின்றது. அது யார்? என்றால் **'அவன்'** மட்டுமே.

ஆகவே, நாம் இந்த உலகத்தில் வாழும் காலத்தில் எது தர்மம், எது அதர்மம் என்பதில் சரியான புரிதலை உண்டாக்கிக் கொள்ள வேண்டும். இன்றைய மக்களின் மனோபாவம் எவ்வாறு உள்ளது என்றால், உண்மை பேசி, உண்மையானவனாக இந்த உலகத்தில் வாழ முடியாது, ஆனால், பொய்பேசி, ஊரை ஏமாற்றி நன்றாக வாழலாம் என்ற தவறான புரிதலில் காணப்படுகின்றனர்.

இவர்களது வாழ்க்கையில் நடந்த ஒரு சில தவறான அனுபவத்தினால் தர்மத்தை சரியாகப் புரிந்து கொள்ளாமல், தன்னுடைய கண் முன்னாலேயே ஒருவன் அதர்ம காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டு இருந்தாலும், உடனடியாக எந்த தண்டனையையும் அனுபவிக்காமல் அவன் ஆனந்தமாக வாழ்வதையும், இவன் நியாயமான முறையில் நேர்மையாக

வாழ்ந்தும், துன்பங்களை அனுபவிப்பதை வைத்து தர்ம, அதர்மத்தின் மீது புரிதல் இன்றி இவனும் தன்னுடைய வாழ்க்கையை தவறான முறையில் தேர்ந்தெடுக்கின்றான்.

ஆனால், இங்கு கர்மதத்துவம் எப்படி செயல்படுகின்றது என்றால், இப்பொழுது தீமை செய்து கொண்டு வாழ்பவன் அனுபவிக்கும் இன்பத்திற்கு அவன் என்றோ செய்த புண்ணியமும், இப்பொழுது நன்மை செய்து கொண்டு வாழ்பவன் அனுபவிக்கும் துன்பத்திற்கு அவன் என்றோ செய்த பாவமும்தான் காரணமாக கொள்ளப்படுகின்றது.

அதுப்போலவே, அவன் இப்பொழுது செய்து கொண்டிருக்கும் தீமைக்கு இனி அவன் எதிர்காலத்தில்தான் துன்பத்தை அனுபவிக்கப் போகின்றான் என்பதுவும், இவன் இப்பொழுது செய்து கொண்டிருக்கும் நன்மைக்கு இனி இவன் எதிர்காலத்தில்தான் இன்பத்தை அனுபவிக்கப் போகின்றான் என்பதுவும் தர்மத்தின் நியதி என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஆகவே, ஒருவன் அதர்மப் படி வாழ்ந்து வெற்றியை அடைந்திருக்கின்றான் என்றால், அந்த அதர்மம் அவனுக்கு வெற்றியைக் கொடுக்கவில்லை என்றும், அவன் ஏற்கனவே செய்த புண்ணியம் மட்டுமே அவனுக்கு இப்பொழுது வெற்றியைக் கொடுத்திருக்கின்றது என்றும் அறிந்து கொள்ள வேண்டும்.

எப்பொழுது அவன் புண்ணியம் தீர்ந்து விடுகின்றதோ, அப்பொழுதே அவன் படு பாதளத்தில் வீழ்ந்ததுபோல மிகுந்த துயரங்களை சந்திப்பான் என்பதையும் புரிந்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறே, ஒருவன் தர்மப்படி வாழ்ந்து தோல்வியை அடைந்திருக்கின்றான் என்றால், அந்த தர்மம் அவனுக்கு தோல்வியைக் கொடுக்கவில்லை என்றும், அவன் ஏற்கனவே செய்த பாவம் மட்டுமே அவனுக்கு இப்பொழுது தோல்வியைக் கொடுத்திருக்கின்றது என்றும் அறிந்துக் கொள்ள வேண்டும். எப்பொழுது இவன் பாவம் தீர்ந்து விடுகின்றதோ? அப்பொழுதே இவன் மிக உயர்ந்த நிலைக்கு சென்று மிகுந்த இன்பங்களை அடைவான் என்பதையும் புரிந்துக் கொள்ள வேண்டும். இதை புரிந்துக் கொண்டவனுக்கு தர்மம் மட்டுமே ஒருவனை இரட்சிக்கும் என்பதுவும், அதர்மம் அவனை கை விட்டுவிடும் என்பதுவும் நன்றாக விளங்கும்.

# கர்ம தத்துவங்களும், ஈஸ்வரனும்

இந்த கர்ம தத்துவம் இவ்வாறு செயல்படும் என்றால், ஈஸ்வரனின் வேலை என்ன?

**அவரவர்கள் வினையை அவரவர்கள் அனுபவித்து தீர்க்கும் பொழுது ஈஸ்வரன் எதற்கு?**

என்ற சந்தேகம் சிலருக்கு உண்டாகும்.

இந்த இடத்தில் மேலும் கர்ம தத்துவத்தை நன்றாக புரிந்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். அதாவது ஈஸ்வரன் என்பது அறிவுடைய ஒரு தத்துவம், கர்மம் என்பது ஜடமான தத்துவம். இந்த ஜடமான கர்ம தத்துவம் தானாகவே செயல்படாது. நிச்சயமாக ஏதாவது ஒரு அறிவுடைய தத்துவத்தின் வாயிலாக மட்டுமே செயல்பட முடியும்.

உதாரணமாக, அரசாங்கம் மக்களுக்கு சட்டத்தை இயற்றி, அந்த சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு மக்கள் வாழ வேண்டும் என்று அறிவுறுத்துகின்றது.

இதில் ஒருவன் சாலையில் வாகனம் ஓட்டிச் செல்லும் போது, அந்த சட்டத்தை மீறி சிக்னலில் நிற்காமல் செல்கின்றான் என்றால், உடனே அந்த சட்டம் நேரடியாக அவனுக்குத் தண்டனையைக் கொடுக்காது. அந்த சட்டத்தின் வாயிலாக ஒரு காவல்துறை அதிகாரியோ, அல்லது நீதிபதியோதான் அந்த சட்டத்தை மீறியவனுக்கு தண்டனை கொடுக்க முடியும்.

அதுப்போல, கர்மமான ஜடத்தை ஒரு சேதன தத்துவம் மட்டுமே வழி நடத்த முடியும். ஆகவே, ஒருவன் செய்கின்ற கர்மத்தினால் உண்டான நன்மை, தீமைகளை **'கர்மபலன்'** என்ற சட்டத்தின் வாயிலாக, ஈஸ்வரன் என்பவர் அவனுக்கு பாவம், அல்லது புண்ணியம் என்ற பலனாக கொடுக்கின்றார். அதனால்தான், ஈஸ்வரனை **"கர்மபல தாதா"** என்று சாஸ்திரம் அழைக்கின்றது.

ஆகவே, ஒருவன் செய்துள்ள பாவ, புண்ணியங் களுக்கு ஏற்ப அவனது வாழ்க்கை இருக்குமே ஒழிய, இவன் இறைவனுக்கு லஞ்சமாக ஒரு கோடி ரூபாயை உண்டியலில் போட்டாலும், ஈஸ்வரன் அவனிடம் வாங்கிய பணத்திற்காக அவனுக்கு தண்டனை கொடுக்காமல் விட மாட்டான். அல்லது ஜோதிடரின் வாயிலாக ஏதாவது ஒரு கோவிலுக்கு சென்று

பரிகாரம் செய்து கொண்டாலும், அவனது கர்மபலனினால் உண்டான தண்டனையிலிருந்து அவன் தப்பிக்க முடியாது.

ஆனால், இன்றைய மக்களில் சிலர் அரைகுறையாக சாஸ்திரத்தைப் படித்துவிட்டு, இவர்கள் தங்களது மந்திரத்தினாலும், பூசைகளினாலும், ஜோதிடத்தினாலும் ஒருவனது கர்மபலனை மாற்றிவிட முடியும் என்று தவறாக நினைத்துக் கொண்டு, நீ இந்தக் கோவிலுக்கு சென்று பரிகாரம் செய், இந்த கோவிலுக்கு சென்று உண்டியலில் பணம் போடு, அல்லது திருப்பதிக்கு சென்று விட்டுவா, உனக்கு திருப்பங்கள் உண்டாகும் என்று மக்களின் அறியாமையை புரிந்துக் கொண்டு அவர்களை தவறான பாதையில் வழி நடத்துகின்றனர்.

இவர்கள் தங்களது முட்டாள்தனத்தை வெளிப்படுத்த, அறியாமை கொண்ட மக்களிடம் பரிகாரம் என்ற பெயரில் அவர்களையும் முட்டாள்களாக மாற்றிக் கொண்டு தங்கள் வயிற்றை வளர்க்கின்றார்கள்.

உண்மையில் இவர்கள் புத்திசாலிகள் அல்ல, முட்டாள்கள். தன்னுடைய அறியாமையை மற்றவர்களுக்கும் திணிக்கின்றார்கள்.

ஆனால், சாதாரண இந்த உலகியல் சட்டத்தில் மனிதன் சட்டதிட்டங்களை மதிக்காமல், அதிகாரிகளை ஏமாற்றுவதுப் போல, ஈஸ்வரன் வகுத்த சட்டத்தில், பாவ, புண்ணியங்களுக்கு பயப்படாமல் மற்றவர்களை ஏமாற்றினாலும், கர்மபல தாதாவான ஈஸ்வரனை ஏமாற்ற முடியாது.

எனவேதான், ஈஸ்வரன் அவரவர்களுக்கு ஏற்ற பாவ, புண்ணிய பலன்களை கொடுப்பதில் எந்த வித ஏற்றத்தாழ்வு களையும் காட்டுவதில்லை.

இவன் அஞ்ஞானத்தினால் அந்த ஈஸ்வரனிடம் சென்று விண்ணப்பம் கொடுத்து, உனக்கு பாலாபிஷேகம் செய்கிறேன், பஞ்சாமிர்த அபிஷேகம் செய்கிறேன், அல்லது கனகாபிஷேகம் செய்கிறேன், என்னை இப்பொழுது இந்த தண்டனையில் இருந்து காப்பாற்று என்று எதைச் செய்தாலும், ஈஸ்வரன் அதற்கெல்லாம் மயங்கி அவனுக்கு தண்டனையிலிருந்து தப்பிக்க வைக்க மாட்டான்.

ஆனால், இந்த அபிஷேகமோ, காணிக்கைகளையோ செய்தவனுக்கு, அவனுக்கு இனி வரப்போகும் புண்ணிய கணக்கில் அவைகள் வரவு வைத்துக் கொண்டு, இனி வரும் பிறவியில் அவனுக்கு நன்மை கிடைக்கும் படி செய்ய முடியுமே தவிர, தற்பொழுது செய்த பாவத்திற்கு தண்டனை

அனுபவிக்காமல் அவன் தப்பிக்க முடியாது என்பதை நன்கு உணர வேண்டும்.

இவ்வாறு தண்டனையிலிருந்து ஈஸ்வரன் காப்பாற்ற வில்லை என்றவுடன் சில அஞ்ஞானிகள் இந்த ஜோதிடன் சரியில்லை என்று வேறொரு ஜோதிடரிடம் சென்று, ஜோதிடர்களை மாற்றி மாற்றி ஜோதிடம் பார்ப்பதுப்போல...

ஈஸ்வரனையே மாற்றிக் கொண்டு, சிவனை வணங்கியவன், சிவனுக்கு சக்தியில்லை எனக் கருதி, பெருமாளை வழிபட ஆரம்பிக்கின்றான். விநாயகரை வழிபட்டவன், முருகனை வழிபட ஆரம்பிக்கின்றான், காளியை வழிபட்டவன், கருப்பசாமியை வழிபட ஆரம்பிக்கின்றான்.

இன்னும் சிலர் ஒரு படி மேலே சென்று இந்துக் கடவுள்களால் இது முடியாது. எனவே, நான் மதம் மாறிக் கொண்டு ஜெகோவா, ஏசு, அல்லது அல்லா என்ற மற்ற மதக் கடவுளர்களை வழிபடப்போகின்றேன் என்று மதம் மாறிய கர்மதத்துவம் அறியாத அடிமுட்டாள்களும் இந்த அவணியில் உண்டு.

# அஞ்ஞானிகளும், ஞானிகளும்

இதுவரை நாம் இந்த மூன்றுவிதமான கர்மங்களும் (சஞ்சிதம், ஆகாமியம் மற்றும் பிராரப்தம்) அஞ்ஞானிகளுக்கு (அறியாமை உடைய மக்களுக்கு) எவ்வாறு செயல்படுகின்றது என்று பார்த்தோம். இனி, இந்த மூன்று கர்மங்களும் ஞானிகளுக்கு (அறிவு உடைய மக்களுக்கு) எவ்வாறு செயல்படுகின்றது என்று பார்க்கலாம்.

கர்ம பலன்கள் ஆகாமியம், பிராரப்தம் மற்றும் சஞ்சிதம் என்ற மூன்று உள்ளன என்று ஏற்கனவே பார்த்தோம். பிறவிக்கு வருகின்ற ஒவ்வொரு ஜீவனும் உடல் கிடைக்கின்ற பொழுது, அந்த உடலின் வாயிலாக கொண்டு வந்து அனுபவிப்பது **"பிராரப்த கர்மா"** என்றும், அப்படி இந்தப் பிறவியில் மனித சரீரத்தில் இருக்கின்ற ஜீவன் தன்னுடைய பிராரப்த கர்மாவை அனுபவித்துக் கொண்டு இருக்கும்பொழுது, புதியதாக இந்தப் பிறவியில் தன்னுடைய மனம், வாக்கு, மற்றும் உடல் என மூன்றில் எதன் வாயிலாக கர்மத்தைச் சேர்த்துக் கொள்கின்றதோ? அந்த கர்ம பலனுக்கு **'ஆகாமிய கர்மா'** என்று அறிந்துள்ளோம்.

அதுப்போலவே, ஏற்கனவே பல மனிதப் பிறவிகளின் வாயிலாக செய்த கர்மங்களினால், பாவ, புண்ணியங்கள் உண்டாகி, அந்த பாவ, புண்ணியங்களை ஆகாமிய கர்மாவாக எடுத்துக் கொண்டு அவைகளை ஒட்டுமொத்தமாக சேமித்து வைக்கப்படுவது **"சஞ்சித கர்மா"** என்றும் அறிந்தோம்.

இப்படிப்பட்ட கர்மாக்களை கொண்ட ஒரு ஜீவன் மனித சரீரம் எடுத்து விட்டாலே அவன் மற்ற ஜீவராசிகளுக்கு கிடைக்காத தன்னுடைய ஆறாவது அறிவின் மூலமாக ஆத்ம ஞானத்தை அடைந்து விட்டான் என்றால், அவன் **"ஞானி"** என்று அறியப்படுகின்றான்.

அப்படிப்பட்ட ஒரு ஜீவனுக்கு தன்னுடைய மனித சரீரத்தில் 40 வது வயதில் ஞானத்திற்கு வருகின்றான் என்றாலும், அவன் கடந்த 40 ஆண்டுகளாக இதுவரை தான் செய்த செயல்களினால் பாவ, புண்ணியத்தை சேர்த்திருப்பான். இவ்வாறு அந்த ஞானியினால் இந்தப் பிறவியில் இதுவரை சேர்த்துக் கொள்ளப்பட்ட கர்மாவை **ஆகாமியக் கர்மா** என்று அவரது கணக்கில் வரவு வைத்துக் கொள்ளப்படும். ஆனால், ஆத்ம ஞானத்தின் பயனாக அந்த ஞானியால் இனி செய்யப் படுகின்ற செயல்களினால் அவருக்கு '**ஆகாமிய கர்மா**' சேராது.

இது அந்த ஞானத்தினால் கிடைத்த பயன். இதை எப்படி நம்புவது என்ற சந்தேகம் அஞ்ஞானிக்கு உண்டாகலாம். சாஸ்திரம் இந்த இடத்தில் என்ன கூற வருகின்றது என்றால், ஒருவன் தன்னுடைய ஆறாவது அறிவின் உன்னதத் தன்மையை அறிந்து **“எதை அறிந்து கொண்டால், வேறு எதையும் அறியத்தேவையில்லையோ”** அந்த பேருண்மையை அவன் புரிந்து கொண்டவுடன், அந்த ஞானியின் செயல்கள் அனைத்துமே நிஷ்காமியமாக மாறிவிடும். இப்படிப்பட்ட ஞானியின் நிஷ்காமியச் செயலுக்கு **கர்மா** கிடையாது. அதனால்தான், ஞானிக்கு **‘ஆகாமிய கர்மா’** கிடையாது என்று சாஸ்திரம் வலியுறுத்துகின்றது.

சரி!, ஞானியானவனுக்கு ஆகாமிய கர்மா கிடையாது என்றால், அவன் ஞானி ஆவதற்கு முன்பு அஞ்ஞானியாக அவர் செய்த காமியக்கர்மங்கள் நிச்சயமாக ஆகாமியமாக சேர்ந்திருக்கும் அல்லவா? என்றால், ஆம், அது அந்த ஞானிக்கு அவர் ஞானம் அடையும் முன்பு, அவரது உடலால் செய்யப்பட்ட செயலினால் சேர்ந்த பாவ, புண்ணியங்கள் ஆகாமியமாக சேர்ந்து இருக்கும்.

ஆகவே, ஞானியோ, அஞ்ஞானியோ அவனுக்கு இந்த ஜென்மத்தில் செய்யும் செயலினால் உண்டாகின்ற கர்மபலன் ஆகாமிய கர்மா ஆகும்.

உதாரணமாக, ஒரு குவித்து வைக்கப்பட்ட நெற் குவியலில் இருந்து சிறிது நெல்கள் எடுத்து விதைக்கப்பட்டு, இவ்வாறு விதைக்கப்பட்ட நெல்களானது மீண்டும் முளைத்து அதிகப்படியான பல நெல்மணிகளை கொடுக்கும். இந்த அதிகப்படியான நெல்மணிகளை மீண்டும் அந்த பெரிய நெற்குவியலுடன் சேர்த்து கொட்டி விடுவார்கள்.

இதைப்போலவே, ஒரு ஜீவனானவன், தன்னுடைய பாவ, புண்ணியங்களாக சேர்த்துவைக்கப்பட்ட சஞ்சித கர்மா என்ற பெரிய குவியலிலிருந்து, குறைந்த அளவு கொண்ட பாவ, புண்ணியங்களை மட்டுமே எடுத்துக் கொண்டு வந்து இந்த மனிதப்பிறவியில் அதைப் பயன்படுத்தி அனுபவித்துக் கொண்டிருக்கும் பொழுதே, மீண்டும் அவனது இந்தப் பிறவியில் செய்யப்படுகின்ற புதிய செயல்களினால் உண்டாகின்ற அதிகப்படியான பாவ, புண்ணியங்கள் ஆகாமியமாக மாறி, மீண்டும் அந்த பெரிய சஞ்சித கர்மா என்ற குவியலுடன் சேர்ந்து மிகப் பெரிய குவியலாக மாறிவிடும்.

இது போன்ற கர்மச் சுழற்சியிலிருந்து தப்பிக்கும் வழியே **“ஞானம்”** எனப்படும்.

ஞானிகளால் மட்டுமே இந்த மூன்று கர்மங்களையும் முடித்து **“பிறவாமை”** என்ற பெரு நிலையை அடைய முடியும்.

மற்ற அஞ்ஞானிகள் அனைவருமே மீண்டும் மீண்டும் அவர்களின் பாவ, புண்ணியத்திற்கு ஏற்ப உடல் கிடைத்து பூமிக்கு வருவார்கள் என்பதை அறியவேண்டும்.

இந்த சஞ்சித கர்மா அனைத்துமே ஜீவர்களாகிய நம்முடைய காரண சரீரத்தில் சேர்ந்து விடுகின்றது. இப்படிப்பட்ட சஞ்சித கர்மா பலகோடி ஜென்மங்களுக்கு விதையாக (நெல் விதைப்போல) அமைகின்றது. இந்த சஞ்சித கர்மா பிரலயம் என்று கூறப்படுகின்ற ஒட்டுமொத்த பிரபஞ்ச அழிவின் போதுகூட அழிவதில்லை.

அது காரண தேகத்துடன் அப்படியே இருக்கும். மீண்டும் சிருஷ்டி உண்டாகின்ற பொழுது, அந்த காரண சரீரத்தைக் கொண்டு சூக்ஷ்ம சரீரம் கிடைத்து, அந்த சூக்ஷ்ம சரீரத்தின் விளைவாக, ஸ்தூல சரீரம் கிடைத்து, அந்த ஸ்தூல உடலின் வாயிலாக மீண்டும் கொண்டுவந்த பிராரப்த கர்மாவை அனுபவிக்கும் நிலை உண்டாகின்றது.

இவ்வாறு, ஒரு ஜீவன் தன்னுடைய கர்மாவினால் மீண்டும், மீண்டும் பிறவிக்கு வருகின்றது என்றால், அந்த ஜீவனுக்கு உடல் முதலில் கிடைத்து கர்மாக்கள் சேர்ந்ததா? அல்லது கர்மாக்கள் சேர்ந்ததினால் உடல் கிடைத்ததா? என்ற சந்தேகம் உண்டாகின்றது.

இந்த கேள்வியை சாதரணமாக நம்மிடையே காணப்படுகின்ற மற்ற சந்தேகங்களுடன் ஒப்பிட்டு கேட்பதாக வைத்துக் கொண்டு, அதாவது முட்டையிலிருந்து கோழிக்குஞ்சு வந்ததா? அல்லது கோழியிடமிருந்து முட்டை வந்ததா? என்றும், விதையிலிருந்து மரம் வந்ததா? அல்லது மரத்திலிருந்து விதை வந்ததா? என்ற சந்தேகத்துடன் விடை அறிய முயற்சித்தால் இதற்கு எப்படி பதில் கொடுக்க முடியாதோ? அதுப்போலவே மேற்கண்ட சந்தேகத்திற்கும் விடை கிடையாது. இதனை சாஸ்திரம் **“அநிர்வசனீயம்”** என அழைகின்றது.

அதாவது, அதை விளக்க முடியாது. அது **‘அனாதி’** என்கின்றது. மேலும், அதனை நாம் விளங்கிக் கொள்ளவும் முடியாது என்று கூறுகின்றது.

பிறகு எதற்காக இது போன்ற விசாரமெல்லாம் என்றால், இந்த கர்ம தத்துவத்தை நாம் நன்றாக அறிந்து கொள்வதினால், நமக்கும், நம்மைச் சார்ந்தவர்களுக்கும் எந்த வித தீமைகளும் உண்டாகாமல், பொறுப்புடன் இந்த சமுதாயத்தை எதிர்கொண்டு, மற்றவர்களிடம் இருந்து நாம் எதை எதையெல்லாம் அடையவேண்டும், அல்லது பெறவேண்டும் என்று நினைக்கின்றோமோ? அதையே நாம் அவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று நினைப்போம்.

உதாரணமாக, நாம் ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி முன்பு நின்று, சிரித்தவாறு காணப்பட்டால், அந்த கண்ணாடியில் தெரியும் பிரதி பிம்பமாகிய நாமும் சிரிப்பதைக் கண்ணாடியில் காணமுடியும்.

அதுவே, அந்த முகம் பார்க்கும் கண்ணாடி முன்பு நின்று, முறைத்தவாறு காணப்பட்டால், அந்த கண்ணாடியில் தெரியும் பிரதி பிம்பமாகிய நாமும் நமக்கு எதிராக முறைப்பதை அதே கண்ணாடியில் காணமுடியும்.

இதைப்போலவே, இந்த உலகத்தை நம்முடைய பார்வையில் எப்படி அணுகுகின்றோமோ? அதுப்போலவே, இந்த உலகம் நம்மை அணுகுவதை நாம் காணலாம்.

அதனால், நாம் நல்ல புரிதலுடன் இந்த சமுதாயத்தை அணுகினோமென்றால், இந்த சமுதாயத்தில் உள்ள மற்றவர்களும் நம்மிடையே நன்றாக நல்ல புரிதலுடன் காணப்படுவார்கள்.

இந்த உலகத்தை நீங்கள் ஒரு சிகப்பு கண்ணாடியை அணிந்து கவனித்தீர்கள் என்றால், இந்த உலகம் முழுவதும் சிகப்பாகக் காட்சி அளிக்கும்.

அதுவே, நீங்கள் ஒரு நல்ல எந்த நிறமுமற்ற தூய்மையான கண்ணாடியை அணிந்து கொண்டு இந்த உலகத்தைப் பார்த்தீர்களேயானால், இந்த உலகம் அது, அது எப்படி இருக்கின்றதோ? அப்படியே இயல்பாகக் காணப்படும்.

அதுப்போலவே, இந்த உலகத்தை நம்முடைய தவறான புரிதலைக் கொண்டு கவனித்தோமானால், அனைத்துமே தவறாகத் தெரியும், அதுவே, நாம் உண்மையை அறிந்து இந்த உலகத்தை கவனித்தோமானால், அனைத்துமே ஆனந்தமாகத் தெரியும்.

நாம் நம்முடைய தூய்மையான உள்ளத்துடன் இந்த உலகத்தை கவனித்தோமானால், இந்த உலகத்தில் எதையும், எந்தச் சூழ் நிலையிலும் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது என்ற புரிதலும், அது, அது இருப்பதுப்போல அப்படியே இருக்கட்டும் என்ற தெளிந்த ஞானமும் கிடைத்து, நாம் சும்மா இருப்பதில் சுகம் காண ஆரம்பித்து விடுவோம்.

இந்த சும்மா இருக்கும் சுகம் என்பது, சாஸ்திரத்தின் வாயிலாக தெளிந்த அறிவை அடைந்து அதன் வாயிலாக **“நம் செயலாவது ஒன்றுமில்லை, எல்லாம் அவன் செயலே!”** என்ற ஞானம் பெறப்படுவது ஆகும்.

இப்படி ஞானம் பெற்றவர்களால் மட்டுமே மற்றவர்களை உதாசீனப்படுத்தாமல், அவரவர்களது இயல்பு வாழ்க்கையில் தேவையில்லாமல் மூக்கை நுழைக்காமல் இருக்க முடியும்.

இந்த நிலை கைக்கூடினால் மட்டுமே, நம்முடைய இந்த ஊனக்கண்ணினால் பார்க்கப்படுகின்ற இந்த பரந்த உலகம், ஞானப் பார்வையினால் பரவசத்தைக் கொடுக்கும்.

**ஸஞ்சித கர்ம ப்ரமைவாஹமிதிஸ்யாத்மக ஜ்ஞானேன நஸ்யதி |**

இந்த உலகத்தில் பிறந்த ஞானியானாலும், அஞ்ஞானி யானாலும் பிராரப்த கர்மாவை அனுபவித்துத்தான் தீர்க்க வேண்டும்.

அதுப்போலவே, ஞானியும் ஞானத்தை அடைவதற்கு முன்பாக தன்னுடைய உடலினால் உண்டாக்கிக் கொண்ட ஆகாமிய கர்மங்களும், அஞ்ஞானிகளும் இப்பொழுது வரை ஞானத்தை அடையாமலேயே செய்துக் கொண்டு இருக்கின்ற அனைத்து ஆகாமிய கர்மங்களும், அவரவர்களது சேகரித்து வைக்கப்பட்ட குவியலான சஞ்சித கர்மாவில், இந்த உடலை விட்டு (இறப்பிற்கு பின்பு) செல்லும் போது மொத்தமாகச் சென்று சேர்ந்துக் கொள்ளும்.

**ஆகாமிகர்ம அபிஜ்ஞானேன நஸ்யதி கிம் ச ஆகாமி கர்மணாம் நலினீ தலகதஜலவத் ஜ்ஞானினாம் ஸம்பந்தோ நாஸ்தி |**

இங்கு மிக முக்கியமாக நாம் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், அஞ்ஞானிகள் தாங்கள் கொண்டு வந்த பிராரப்த கர்மாவின் பாவ, புண்ணியங்களுக்கு ஏற்ப, தங்களுடைய வாழ்க்கையில் நடைபெறும் சுக, துக்கங்களில் ஈடுபட்டுக்கொண்டு, சுகம் வரும் பொழுது ஆனந்தமாக அனுபவித்துக் கொண்டும், துக்கம் வரும்பொழுது புலம்பிக் கொண்டும் இருப்பார்கள்.

இந்த அஞ்ஞானிகள் இந்தப் பிறவியில் அஹங்காரத் தினால் "**நான்**" என்று இந்த உடலை நினைத்துக் கொண்டு, அவர்கள் செய்யும் செயல்களின் மூலமாக புதியதாக "**ஆகாமிய கர்மா**" – வைச் சேர்த்துக் கொண்டு இருப்பார்கள்.

ஆனால், ஞானி மட்டுமே தான் அடைந்த ஞானத்தினால், தான் ஏற்கனவே பல பிறவிகளில் செய்த பாவ, புண்ணியங்களுக்கு ஏற்ப கொண்டு வந்த பிராரப்த கர்மாவை அறிந்துக் கொண்டு, அவர்களுக்கு வருகின்ற சுகத்தினால் மயங்குவதும், துக்கத்தினால் புலம்புவதும் இல்லாமல், சமமான மன நிலையில், செயல் செய்துக் கொண்டு இருப்பார்கள்.

இந்த ஞானிகள் அவர்கள் செய்கின்ற செயல்களுக்கு **“நான்”** என்ற அந்த பரமா(ஆ)த்மாவே காரணம் என்ற அறிவைக் கொண்டு, தன் அஹங்காரத்தை விட்டு, உடல் பற்றற்று, இருப்பதினால் இவர்களுக்கு **“ஆகாமிய கர்மா”** உருவாகாது.

பொதுவாக, அஞ்ஞானிகள் (ஞானத்தை அடையாதவர்கள்) கர்மாக்கள் அனைத்துமே அஹங்காரத்தைப் பற்றி நிற்கும் என்பதினால், அவர்களே கர்த்தாவாக மாறி அந்த செயலுக்கு உண்டான, நன்மை, தீமைகளுக்கு அவர்களே (போக்தாவாக) காரணமாக அமைகின்றனர்.

இதனால் அவர்களுக்கு, பாவ, புண்ணியங்கள் உண்டாகி **‘ஆகாமிய கர்மா’** ஞானத்தை அறியாத அஞ்ஞானிகளுக்கு சேருகின்றது.

ஆனால், ஞானி அஹங்காரத்தை முழுவதுமாக விடுத்து, எல்லாம் இறைவன் செயல் என்று தான் கர்த்தாவாகவும், போக்தாவாகவும் இல்லாததினால், அவருக்கு அவரது செயல்களினால் உண்டாகும், நன்மை, தீமைகள், அவரைப் பற்றாமல் விடுத்து, அவருக்கு பாவ, புண்ணியங்களும் உண்டாகாமல் இருப்பதினால், ஞானிக்கு **‘ஆகாமிய கர்மா’** சேராது.

மேலும், இத்தகைய ஞானிகள் தான் அடைந்த **“நான் பிரம்மம்”** என்ற ஞானத்தின் வாயிலாக தன்னுடைய அனைத்து கர்மங்களிலிருந்தும் விடுபடுவார்கள்.

**ததா ச ஆத்மவித் ஸம்சாரம் தீர்த்வா ப்ரஹ்மானந்தமிஹைவ ப்ராப்னோதி |**

இப்படிப்பட்ட ஞானிகள் தாங்கள் உயிருடன் இருக்கும் வரை பிராரப்தத்தின் படி வாழ்ந்துக் கொண்டு **“ஜீவன் முக்தர்கள்”** ஆக இருப்பார்கள். அவர்கள் இந்த உடலை விட்டு விட்டுச் செல்லும்போது, அனைத்து கர்மங்களையும் நாசம் செய்த **“விதேக முக்தர்கள்”** ஆக என்றும் இருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் மிண்டும் எந்த உடலிலும் பிறக்க மாட்டார்கள்.

**யே ஜ்ஞானினம் நிந்தந்தி த்விஷந்தி து: க ப்ரதனம் குர்வந்தி தான்பிரதிஜ்ஞானிக்ருதம் ஸர்வாகாமிக்ரியமானம் யதவாச்யம் கர்மபாபாத்மகம் தத்கச்சதி |**

இப்படிப்பட்ட ஞானிகள் அவர்கள் வாழும் காலத்தில், அவரது பிராரப்த கர்மாவின் படி மற்ற மனிதர்களால் துயரத்திற்கு ஆளாகின்றார்கள் என்றால், அவரது **“சஞ்சித**

**கர்மா”** குவியலிலிருந்து **‘பாவங்கள்’** அனைத்தும் இவரை துயரப்படுத்துகின்றவர்களுக்கு போய் சேரும்.

**கிஞ்சயேஜ்ஞானினம் ஸ்துவந்தி பஜந்தி அர்சயந்திதான் ப்ரதி ஜ்ஞானிக்ருதம் ஆகாமி புண்யம் கச்சதி |**

அதே ஞானிகள் தாங்கள் வாழும் காலத்தில் அவரது பிராரப்த கர்மாவின் படி மற்ற மனிதர்களால் சுகத்திற்கு ஆளாகின்றார்கள் என்றால், அவரது **“சஞ்சித கர்மா”** குவியலிலிருந்து **‘புண்ணியங்கள்’** அனைத்தும் இவரை சுகப்படுத்துகின்றவர்களுக்கு போய் சேரும்.

இவ்வாறு ஞானிகள் தங்களது பல பிறவிகளில் சேர்த்த **“சஞ்சித கர்மா”** என்ற குவியலில் இருந்து பாவங்கள், புண்ணியங்கள் அனைத்தையும் தன்னை துதிப்பவனுக்கு புண்ணியங்களையும், நிந்திப்பவனுக்கு பாவங்களையும் பகிர்ந்து அளித்துவிட்டு, அவர்கள் வசம் இந்த மூன்று கர்மாக்கள் ஏதும் இல்லாததால் **“பிறவாமை”** என்ற பெரு நிலையை அடைகின்றார்கள்.

ஒரு சிலர் இந்த பிறவாமையை விரும்பி, அஞ்ஞானிகளைப் போல இல்லாமல், சில உயர்ந்த தத்துவங்களை தெரிந்து வைத்துக்கொண்டு, அதன் படி

வாழாமல் “**ஞானி**” என்ற போர்வையில் போலியாக ஒழிந்துக் கொண்டு மக்களை ஏமாற்றிக் கொண்டு இருக்கின்றார்கள்.

இவர்கள் கூட, இந்த மூன்று கர்மாக்களில் மிக பெரிய “**சஞ்சித கர்மா**” என்ற குவியலை தொலைக்க முடியாமல், மீண்டும் அவர்களது பாவ, புண்ணியத்திற்கு தகுந்த பிராரப்த கர்மாவை புதியதாக எடுத்துக்கொண்டு அதற்கான உடல் கிடைத்து மீண்டும் அடுத்த பிறவிக்கு வருகின்றார்கள்.

**தரதி ஸோகமாத்மவித் இதி ஸ்ருதே |**

இதற்கு என்ன ஆதாரம்? என்ற சந்தேகம் சிலருக்கு உண்டாகலாம். அவர்கள் சாந்தோக்ய உபநிஷத்தில் “**பூமவித்யா**” என்ற தலைப்பில் நாரத மகரிஷி கூறுவதாவது, நான் பல கலைகளை அறிந்துள்ளேன், அனைத்து சாஸ்திரங்களையும் அறிந்துள்ளேன், ஆனால் “**ஆத்மவித்யா**” என்ற “**பராவித்யா**” வை அறிந்ததில்லை. அதனால், நானும் துயரத்திற்கு ஆளானேன். அதன்பிறகு, நான் சனகாதி முனிவர்களில் ஒருவரான சனத்குமாரரிடம் சென்று இந்த “**பிரம்மவித்யா**” வை கேட்டறிந்தேன்.

அவ்வாறு, இந்த **“பராவித்யா”** – வின் வாயிலாக நான் அடைந்த ஆத்மஞானம் என்றுமே என்னை ஆனந்தத்துடன் வைத்திருக்கின்றது என்று நாரத மகரிஷி கூறுகின்றார்.

**குறிப்பு:–**

ஆத்ம ஞானத்தை அடைந்தவர்கள் பார்பதற்கு பிச்சைக்காரனைப் போன்று இருப்பார்கள், சிலர் பைத்தியக்காரர்களைப் போன்று இருப்பார்கள். இவர்கள் உலக விசயத்தில் இருந்து விலகி எங்கோ காட்டில் இருப்பார்கள், சித்தர்களைப் போன்று குகைகளில் வாழ்வார்கள், இப்படிப்பட்டவர்கள் எப்பொழுதும் சமாதியில் அமர்ந்திருப்பார்கள் என்று அறியாமையினால் இன்றைய மக்கள் இருக்குமிடத்தை விட்டு இல்லாத இடம் தேடி எங்கெங்கோ அலைகின்றார்கள்.

உண்மையில் தன்னுள் இருக்கும் அந்த பரம தத்துவத்தை எவன் அறிகின்றானோ? அவனே **“ஞானி”** என்று அறியப்படவேண்டும். இப்படிப்பட்ட ஞானிகள் இந்த உலகத்தோடு அனைத்து செயல்களிலும் ஈடுபட்டுக்கொண்டே, இந்த உலகத்தின் மீது பற்றில்லாமல் இருப்பார்கள்.

இவர்களை எல்லோராலும் எளிதில் அடையாளம் கண்டுக் கொள்ள முடியாது. காரணம் இவர்கள் மக்களோடு மக்களாக சாதாரணமாக வாழ்ந்துக் கொண்டிருப்பார்கள்.

**தனும் த்யஜது வா காஸ்யாம் ஸ்வபசஸ்ய க்ருஹேSதவா |**
**ஜ்ஞான ஸம்ப்ராப்தி ஸமயே முக்தோSஸௌ விகதாஸய:**
**இதி ஸம்ருதேஸ்ச |**

இதிலிருந்து ஆத்ம வித்யாவைக் கற்றவன் எப்பொழுதும், எதற்கும் கலங்குவதில்லை என்பது தெளிவாகின்றது. எப்பொழுதும் அவன் ஆனந்தத்துடன் காணப்படுவான். இத்தகைய உயர் ஞானத்தை அடைந்த ஞானி தன்னுடைய அழிந்து போகக் கூடிய இந்த உடலை சமாதியில் மட்டுமே அடக்கம் செய்ய வேண்டும் என்று எதிர்ப்பார்க்காமல், அந்த உடலைக் காசியில் விட்டாலும், நாயைச் சமைத்துச் சாப்பிடுபவன் வீட்டில் விட்டாலும் உண்மையான **“ஞானி”** க்கு அதை பற்றி சிறிதும் கவலை இல்லை.

**தத்வபோதம் சம்பூர்ணம்**

ஓம் தத் சத்

# தத்வபோதம்



तत्त्वबोध

மூலம்:– சமஸ்க்ருதம்